France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Suisse: 2.50SFrs.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 2 29 ஒகஸ்ட் - 04 செப்டெம்பர் 1996 முழக்கம் : 85

Paris - Lachapelle இல்

மக்கள் கடை

இது உங்கள் கடை
உங்கள் தேவைகளுக்கான கடை

59, Rue Louis Blanc,
75010 Paris.

Paris - Lachapelle இல்

மக்கள் கடை

இது உங்கள் கடை
உங்கள் தேவைகளுக்கான கடை

59, Rue Louis Blanc,
75010 Paris.

# முல்லைத்தீவு தோல்வியால் இராணுவ தளபதிகளின் பதவிக்கு ஆபத்து

## இராணுவ விசாரணைக் குழு ஆராய்கிறது

முல்லைத்தீவுப் படைத்தளம் விடுதலைப் புலிகளினால் தாக்கியழிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்ட சம்பவம் சிறீலங்காவில் தொடர்ந்தும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது.

இறந்த படையினரின் என்ணிக்கை, இழந்த ஆயுதங்களின் பெறுமதி போன்றவற்றை வெளியிட சிறிலங்கா அரசு தொடர்ந்தும் மறுத்து வருகின்ற வேளையில், எதிர்க்கட்சிகள் அரசின்மேல் அழுத்தம் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளன. இதனால் பாதுகாப்பு அமைச்சின் நான்கு உயரதிகாரிகள் அங்கம் வகிக்கும் இராணுவ விசாரணைக் குழு ஒன்றை அமைத்து தோல்விக்கான காரணங்கள், அதற்கான பொறுப்பு போன்றவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறீலங்கா அரசாங்கம் பணித்துள்ளது.

மேஜர் ஜெனரல் பட்ரிக் பெர்னான்டோ, பிரிகேடியர் காமினி குணசேகர, லெப்.கேணல் வஜிர விஜேகுணவர்த்தன, கேணல் மகேந்திரா விஜயரட்ன போன்றவர்கள் அங்கம் வகிக்கும் இவ் விசாரணைக் குழு, விசாரணைகளை முடித்து அறிக்கை சமர்ப்பிக்கும்போது பல உயர் இராணுவத் தளபதிகளின் பதவிகள் பறிக்கப்பட்டு கட்டாய ஓய்வில் அனுப்பப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

இவர்களில் முக்கியமாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோஹன் சமரசேகரவின் பெயரே முதலில் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இவர் இவ் வருடம் நவெம்பர் மாதம் ஓய்வு பெறவிருந்தாலும் அதற்கு முன்பாகவே பதவியில் இருந்து வெளியேற்றப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முல்லைத்தீவுத் தாக்குதல் நடந்த வேளையில் கடற்படையினரின் உதவியை உரிய நேரத்தில் அனுப்பவில்லை என்ற குற்றச்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## அகதிகளுக்கான கூடாரங்கள் கொண்டு செல்லத் தடை

இராணுவத் தாக்குதல்கள் காரணமாக தமது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகவுள்ள மக்களுக்காக இரண்டு லொறிகளில் பிளாஸ்டிக் கூடாரங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் நடத்திய பேரணி! 'முரளிதரனை விடுதலை செய்!' முக்கிய கோஷம்!!

(சுவிஸ்)

26.08.96 அன்று காலையிலிருந்தே சுவிஸ் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஜெனீவா நோக்கி மக்கள் வந்து கொண்டிருந்தனர். விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட இரண்டு ரயில் வண்டிகளிலும் ஆயிரக்கணக்கானோர் புகையிரத நிலையத்திலும் வந்து கூடினர்.

இந்த ஜெனீவா பேரணியில் கலந்து கொள்வதற்காகவே சுவிஸ் நாட்டில் பல பாகங்களிலும் உள்ள தமிழர் வேலை செய்யும் நிறுவனங்கள் அவர்களுக்கு விடுப்புக் கொடுத்துள்ளதுடன், பேர்ண், சர்க்கான்ஸ், லூசேண் நகர்களில் பல தொழிற்சாலைகளை மூடி அங்கு வேலை செய்யும் தமிழ் ஊழியர்களை பேரணியில் கலந்துகொள்ள வசதி செய்து கொடுத்தனர்.

இப் பேரணியில் சுமார் 12,000 பேர்வரை கலந்து கொண்டதாக கணிக்கப்பட்டிருப்பினும் சுவிஸ் வானொலி தொலைக்காட்சிகள் 10,000 இற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டதாக அறிவித்தன. திரு.முரளிதரனும் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களிடம் பலவந்தமாகப் பணம் சேர்க்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முறியடிக்கு முகமாக, ஜெனீவா ஐ.நா.சபை முன்றலில் நடந்த பொதுக் கூட்டத்தின் போது மக்கள் தாங்களாகவே ஒரு அட்டைப் பெட்டிக்குள் போட்டுச்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)



## இராணுவத்தை மணமுடிக்க வற்புறுத்தப்படும் தமிழ்ப் பெண்கள்

வடபகுதியில் தம்மை திருமணம் செய்துகொள்ளுமாறு இராணுவத்தினர் தமிழ்ப் பெண்களை வற்புறுத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தம்மைவிட ஒரு நல்ல கணவன் கிடைக்க மாட்டான் எனவும் அதனால் தம்மைத் திருமணம் செய்யுமாறும் யாழ் நகரில் வசிக்கும் ஒரு பெண்ணை சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் வற்புறுத்தியுள்ள சம்பவம் ஒன்று அண்மையில் நிகழ்ந்துள்ளது.

அந்த இராணுவத்தினனின் வற்புறுத்தலை அவ் இளம் பெண் மறுத்ததையடுத்து ஆத்திரமுற்ற அவன் அப்பெண்ணின் கைப்பையில் இருந்த 500 ருபா பணத்தை பலாத்காரமாக அபகரித்துள்ளான். இச் சம்பவம் இரு வாரங்களுக்கு முன்னர் யாழ்நகரில் இடம்பெற்றுள்ளது. இதேபோன்று பல இராணுவத்தினர் இளம் பெண்களிடம் தம்மைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தி வருகின்றனராம்.

இதேவேளை, பெண்களிடம் கண்ணியமற்ற முறையில் நடந்து கொள்ளும் இராணுவத்தினர், வயோதிபர்களையும் விட்டுவைக்காமல் அவர்களை ஓடும்படி கூற

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## புலி எதிர்ப்புப் போராட்டத்திற்கு 22 கோடி ரூபாவில் புதிய திட்டம்

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் புலிகளைப் பயங்கரவாதிகளாகக் காட்டி சிறீலங்காவில் தாம் புரியும் அரச பயங்கரவாத நடவடிக்கைகளை பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளாக காட்டுவதற்கு சிறீலங்கா அரசாங்கம் 22 கோடி ரூபா செலவில் புதிய இரண்டாண்டுத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

சந்திரிகா அரசாங்கம் பதவி ஏற்றவுடன் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு தயாராக இருக்கும் ஒரு அரசாங்கம் என்ற மாயையை வெளிநாடுகளில் ஏற்படுத்துவதற்காக 20 கோடி ரூபா செலவில் ஒரு பிரச்சாரத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

ஏசியன் என்ரபிறைஸ்

பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி ,நாலுமுழ வேட்டி, கிப்ஸ் சாரம், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், திருணத்திற்கான அனைத்துப் பொருட்களும் கூறைச்சேலை, பாவாடை, சட்டை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எல்லா நிறங்களிலுமான சட்டைத்துணிகள்

* தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச்சீட்டும் வழங்கப்படும் *

ASIAN ENTERPRISE

Tel: 01/291 46 52
Fax: 01/291 46 37

Hohl.Str 78,
8004 Zurich.

# முல்லைத்தீவுக் கிணறுகளில் துப்பாக்கியும் தோட்டாக்களும்

முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவம் ஆக்கிரமிப்பை நடாத்துவதற்கு முன்னர் அங்கு வசித்து வந்தவர்கள் தற்போது தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

அவ்வாறு வீடு திரும்பியவர்கள் தமது வீடுகளையும் வளவுகளையும் துப்பரவு செய்யும் போது கிணறுகளுக்குள் இருந்த பல ஆயுதங்களையும் தோட்டாக்களையும் கண்டெடுத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர். இவ் ஆயுதங்கள், விடுதலைப் புலிகள், முல்லைத்தீவு முகாம் மீது தாக்குதலை மேற்கொண்ட போது தப்பியோடிய இராணுவத்தினர் வீசி எறிந்து விட்டுச் சென்ற ஆயுதங்கள் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

புலிகள் கைப்பற்றியவை தவிர்ந்த மிகுதி ஆயுதத்தில் ஒரு பகுதியை தமது இராணுவ வீரர்கள் முல்லைத்தீவிலேயே மறைத்து விட்டு வந்துள்ளனர் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க அண்மையில் பத்திரிகையொன்றுக்கு தெரிவித்திருந்தார். இராணுவத்தினர் தப்பி ஓடும்போது கிணறுகளுக்குள் வீசி எறிந்த ஆயுதங்களையே தமது படை வீரர்கள் பத்திரமாக மறைத்துள்ளனர் என அவர் கூறியுள்ளார் போலும் என கொழும்புச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இராணுவப் பிரதேசத்தில் நடமாடக் கெடுபிடி

யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆக்கிரமிப்பு உள்ள பகுதியில் மக்களின் சுதந்திரமான நடமாட்டங்களுக்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். ஒரு பகுதியில் இருந்து இன்னுமொரு பகுதிக்குச் செல்ல வேண்டும் எனில் இராணுவ அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டியது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

போகும் இடம், செல்ல வேண்டிய காரணம், திரும்பிப் போகும் நேரம் என்பவற்றை படையினருக்குத் தெரிவித்தே அனுமதி பெறவேண்டும். இதே வேளை யாழ்ப்பாண நகர சபை எல்லைக்குள் வசிக்காதவர்கள் உள்ளேபோகும் போது தீவிர சோதனைக்கும் தீவிர கண்காணிப்புக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். நாவற்குழி தடையையோ அல்லது தட்டாதெரு சந்தியையோ அவர்கள் தாண்டிச் செல்ல இலகுவில் அனுமதிக்கப்படுவதில்லை.

அண்மையில் யாழ் நகருக்குள் வசிக்கும் ஒருவர் நகருக்கு வெளியே அவரது நெருங்கிய உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக அனுமதி கோரிய போது ஒரு மணி நேரம் மட்டுமே வழங்கப்பட்டது எனத் தெரிய வருகிறது.

# சூரியக்கதிருக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி:-** புலிகளை இன்னும் முற்றாக அழிக்க முடியவில்லையே ஏன்?

**சரத்:-** ஆம்; அன்றிலிருந்து இன்றுவரை புலிகளின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா... இல்லையே! அன்று இருந்த பிரபாகரன்தான் இன்றும் இருக்கிறார். எம்மைப் பொறுத்தவரை, நிறையத் தலைவர்கள் மாறிவிட்டனர். முதலில் ஜே.ஆர். பின்னர் பிரேமதாஸ அடுத்தது விஜயதுங்க இப்போது சந்திரிகா என ஜனாதிபதிகள் மாறியுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் காலத்துக்குக் காலம் தனிப்பட்ட ரீதியில் எடுத்த அரசியல் முடிவுகளால் யுத்தகளத்தில் பாதிப்புகள் ஏற்பட்டன. நாம் அம் முடிவுகளை எதிர்க்கவில்லை. காரணம், நாட்டின் தலைவர்கள் அம் முடிவினை எடுத்தமையினால்.

**கேள்வி:- யுத்தத்தினால் அதிக அளவு வேதனையை எதிர்கொள்வது இராணுவம்தான் எனக் கூறுகிறீர்கள். அப்படியாயின் தமிழ் மக்கள்.....?**

**சரத்:-** நாம் யுத்தம் செய்வது சமாதானத்தை ஏற்படுத்தத்தான்; தமிழ் மக்களைக் கொல்வதற்கில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை சிங்களம்- தமிழ்-முஸ்லிம் எல்லோருமே எதிரிகள். அவர்களுக்கு சமாதானத்தைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை. இங்கு இருப்பது இனப்பிரச்சினை அல்ல. மாறாக அதிகாரப் பிரச்சனை. பிரபாகரனைப் பொறுத்தவரை இன்னும் ஒரு லட்சம் பேரைக் கொன்றாவது தான் அரசனாக வேண்டும் என்று நினைக்கின்றார். அதனால்தான் அப்பாவித் தமிழ் மக்களை அவர் கொல்கின்றார். ஆனால் நாமோ அமைதிக்காக வேண்டி போர் செய்கின்றோம்.

**கேள்வி:- யுத்தம், தற்போது ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டதல்லவா?**

**சரத்:-** எதிரியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நிலைக்கு நாமும் நீங்களும் எப்போதோ வந்துவிட்டோம். மக்களும் சாகிறார்கள், சொத்துக்களும் சேதமாகின்றது. இதுதான் யுத்தத்தின் பரிமாணம் எவ்வளவு விரைவில் யுத்தத்தை முடிக்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது.

# கண்ணி வெடியை அகற்றியதால் மரணம்

அம்பாறையைச் சேர்ந்த விவசாயியான வைரமுத்து சிறிஸ்கந்தராஜா (வயது 45) புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியொன்றை அகற்றும்போது கொல்லப்பட்டுள்ளார்.

சவளக்கடைப் பகுதியில் கண்ணிவெடியொன்று புதைக்கப்பட்டிருந்தது. அக் கண்ணி வெடியை எந்தவிதமான கருவிகளும் இன்றி வெறும் கையினால் அகற்றுமாறு சிறிஸ்கந்தராஜாவை இராணுவத்தினர் மிரட்டியுள்ளனர். இராணுவத்தினரின் துன்புறுத்தல் காரணமாக அவர் கண்ணிவெடியை அகற்ற முயற்சித்தபோது குண்டு வெடித்ததால் அவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

அவருடன் சேர்ந்து வேலை செய்துகொண்டிருந்த இன்னொரு விவசாயியான கந்தப்பன் (வயது 64) என்பவரும் இக் கண்ணி வெடியினால் படுகாயம் அடைந்துள்ளார்.

# பேசாலையில் சுற்றிவளைப்பு மூன்று பேர் கைது

கடந்த 21.08.96 அன்று காலை ஆறு மணிக்கு மன்னார் மாவட்டம் பேசாலையைச் சுற்றிவளைத்த இராணுவம் அன்று பிற்பகல் வரை தேடுதல் வேட்டையை மேற்கொண்டது.

பொது மக்களை பாதிரியார் மத்திய மகாவித்தியாலயத்தில் கூடுமாறு கட்டளையிட்ட இராணுவம் அவர்களை வயது, பால் ரீதியாகப் பிரித்து தனித் தனியே விசாரணை செய்தது. ஆட்கள் இல்லாத வெற்று வீடுகளில் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர். பாடசாலையும் அன்று முழுவதும் மூடப்பட்டிருந்தது. இந்தத் தேடுதலின் பின்னர் மூன்று பேரை கைது செய்து மேலதிக விசாரணைக்கென இராணுவத்தினர் கொண்டு சென்றுள்ளனர்.

# மறவன்புலவில் கைதான மூன்று மாணவர்கள்

மறவன்புலவில் இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல் வேட்டையை மேற்கொண்ட போது கைதான பொதுமக்களில் மூன்று மாணவர்களும் அடங்குவர்.

இவர்களில், கிருஷ்ணமூர்த்தி தேவதாசன் (வயது 23) பல்கலைக்கழக கலைத்துறை மாணவன், திருநாவுக்கரசு (வயது 19) கைதடிப் பொதுத் தராதர மாணவன் திருநாவுக்கரசு சுதாகரன் (வயது 23) ஆகிய மாணவர்களே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களைத் தாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் கைது செய்யவில்லை என் சுதாகரனின் பெற்றோரிடம் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

# வல்வெட்டித்துறையில் கட்டடம் தகர்ப்பு

வல்வெட்டித்துறைப் பகுதியில் மீனவர்களால் அமைக்கப்பட்டிருந்த சனசமூக நிலையம் இராணுவத்தினரால் தகர்த்தெறியப்பட்டுள்ளது.

அப் பகுதி முழுவதும் கடற்கரையுடன் சேர்ந்து திறந்த வெளியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந் நிலையக் கட்டிடம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு, எஞ்சிய பாகங்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளன.


# தமிழில் சாரதிப் பயிற்சி

பிரெஞ்சு தெரிய வேண்டியதில்லை! தமிழிலேயே படித்து தமிழிலேயே கோட் பாஸ் செய்து பிரெஞ்சு சாரதிப் பத்திரம் (permis de conduire) பெறலாம்! இலங்கைப் புத்தகம் இருந்தால் இன்னும் எளிது! உங்கள் பெயரை உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்

நீங்கள் வேறு சாரதிப் பாடசாலைகளில் சேர்ந்து பணம் கட்டியிருந்தாலும் பிரச்சனையில்லை நீங்கள் கட்டிய பணம் நஷ்டமாகாத வகையில் நாங்கள் உங்களுக்கு சாரதிப் பத்திரம் கிடைக்க வழிசெய்கிறோம்.

தொடர்புகளுக்கு: பேராசிரியர் சக்திப்புயல்



இடம் : 6, rue de Marquay, Paris10 (நிஷா மளிகை சந்து)
Métro: La Chapelle / Gare du Nord. - Tel: 34 24 12 82 / 02 46 59 23
கிளை ஸ்தாபனம் : Maison des Associations, Pontoise - Tel: 34 24 12 82 / 02 46 59 23

(ADV)



# வெண்திரையில்

Glorious Enterprise வழங்கும் மற்றுமோர் வெளியீடு. இந்தியாவில் தொடர்ச்சியாக 10 திரையரங்குகளில் 220 நாட்களாக வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் சூப்பர் ஹிட் படமாகிய 'உள்ளத்தை அள்ளித்தா' வெற்றியைத் தொடர்ந்து அத்தனை கதாபாத்திரங்களும் மீண்டும் இணைந்து வழங்கும் மற்றுமோர் படைப்பு

# மேட்டுக் குடி

இத் திரைப்படத்தில் நவரச நாயகன் கார்த்திக், நக்மா, கவுண்டமணி, செந்தில், மணிவண்ணன், கவிதா, கவுண்டமணி, ஜெமினி இன்னும் பலர்
இசை சிற்பி கதை திரைக்கதை வசனம் டைரக்ஷன் சுந்தர்.C

**GLORIOUS ENTERPRISE வழங்கும் இரண்டு காட்சிகள்**

| | |
|---|---|
| 31.08.96 சனி இரவு 11.45 மணி | 02.09.96 திங்கள் இரவு 8.00 மணி |
| CINEMA KINO | KINO - UNIVERSUM |
| BERLINER STR - 88 | AM BAHNHOF |
| WUPPERTAL OBERBARMEN | RHEYDT. |

**தொடர்புகளுக்கு:** 02161 178007 / 02161 206393

முக்கிய குறிப்பு: இத் திரைப்படத்தின் இடையே சிவசக்தி திரைப்படத்தின் பல முக்கிய காட்சிகள் காண்பிக்கப்படும்.

(ADV)



# ஸ்பெஷல் குரு பீடா

பாரிசில் பிரபல்யமான கடைகளில் கிடைக்கும்!
உங்கள் தேவைக்கு என்றும் கேட்டு வாங்குங்கள்

தொடர்புகளுக்கு: *அம்பாள் டீப்போ -*
26, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle
Tel: 42 09 33 81

(ADV)

# புலிகள் இயக்கம் மீதான தடை

## யாருக்குச் சாதகம்?

## அரசுக்கா? புலிகளுக்கா?

விடுதலைப் புலிகள் இயக்கத்தினைத் தடை செய்வது குறித்த செய்திகள் சென்றவாரம் காதில் விழுந்தன. பின்னர் ஒரு மாதத்திற்கு இந்தத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டாயிற்று. கொழும்பில் செப்டம்பர் மாத நடுப்பகுதி வரை நடைபெறவுள்ள கிரிக்கட் போட்டிகளை இதற்குக் காரணமாம்.

சிறிலங்காவின் அரசியலில் கிரிக்கட்டும் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. கொழும்பு மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் பின் அவுஸ்திரேலிய அணி கொழும்பில் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ள மறுத்தமையுடன்தான கிரிக்கட் அரசியல் வானில் இடம் பிடித்தது.

தற்போது நடைபெறவுள்ள "சிங்கர்" கிரிக்கட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி கலந்து



கொள்ளச் சம்மதித்திருப்பது பாதிப்படைந்து செல்லும் சிறிலங்காவின் 'இமேஜ்' இனை உயர்த்தப் பயன்படும் என்பது அரச தரப்பின் எதிர்பார்ப்பு. இது சரிந்து செல்லும் உல்லாசப் பிரயாணத் துறையினைத் தூக்கி நிமிர்த்தும் என்பதுவும் ஒரு கணிப்பு.

கிரிக்கட் போட்டியில் அவுஸ்திரேலியா அணி கலந்து கொள்வதற்கும் விடுதலைப் புலிகள் தடைக்கும் என்ன சம்மந்தம்? இது மொட்டைத், தலைக்கும் முழங்காலுக்கும் இடையிலான முடிச்சா? கிரிக்கட் போட்டியினை காரணம் காட்டுவோர் காரணங்கள் வைத்துள்ளனர்.

கிரிக்கட் போட்டி நடைபெறும்போது தமக்குத் தடைவிதிக்கப்பட்டதால் ஆத்திரமடைந்த புலிகள், கொழும்பில் தாக்குதல் ஏதாவது நடாத்தின், அரசின் மீது பழி சுமத்தப்படுமாம். பொருத்தமற்ற நேரத்தில் இத்தத் தடையினைக் கொண்டுவந்தமையினால் கிரிக்கட் நடைபெறும் போது புலிகள் தாக்கிவிட்டார்கள். இதற்கு அரசின் முட்டாள்தனமான நடவடிக்கை தான் காரணம் என்று கூறி அரச எதிர்ப்பாளர்கள் ஒரு பிடி பிடித்து விடுவார்கள் என்று அரசுக்குச் சுட்டிக் காட்டப்பட்டதாம்.

அப்போது தடைவிதிக்காவிட்டாலும் புலிகள் தாக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்ற எதிர்க்கேள்வியினை தடையினை உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்று குரலெழுப்பிய தரப்புக்கள் குரல் எழுப்பாமல் விடவில்லை.

**நண்டார் பக்கம்**

புலிகள் மீது தடை எதுவும் விதிக்கப்படாதபோது கொழும்பில் தாக்குதல் நடாத்தின் அதனைப் புலிகளின் பயங்கரவாதமாக பிரச்சாரப்படுத்தலாம். தடை விதித்த பின் தாக்குதல் நடந்தால் அரசின் செயற்பாடுகள் புலிகளைத் தூண்டிவிட்டது என்ற குற்றச்சாட்டு வரும் என்றனர் 'கிரிக்கட்' தரப்பினர்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கோ என்ன செய்வதென்றே குழப்பம். இறுதியில் கிரிக்கட் முடியும் மட்டும் தடையினைப் பின்போட முடிவு செய்யப்பட்டது.

புலிகளின் மீதான தடையினைக் கொண்டு வர அரசு முடிவு செய்தது ஏன்? வெளிநாடுகளில் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் போக்கினை மட்டும் கொண்டுள்ளதா? உள்நாட்டு ரீதியான தேவைகள் ஏதாவது? இத் தடை அரசுக்கா அல்லது புலிகளுக்காக நன்மையினைத் தரப்போகிறது?

இவையெல்லாம் மக்கள் மனதிலேயே எழக் கூடிய வினாக்கள். விடுதலைப் புலிகளின் அனைத்துலக வலைப்பின்னலை பலவீனப்படுத்தும் ஒரு நோக்கு இத் தடைக்குப் பின்னதாய் உள்ளது என்பதை பலரது கணிப்பாகும்.

ஆனால் உண்மையில் சிறிலங்கா அரசு உள்நாட்டு ரீதியான தேவையின் முக்கியத்துவம் கருதியும் தான் இத்தடையினை கொண்டுவர முடிவு செய்திருக்கின்றது என்பதே நண்டாரின் கணிப்பாகும்.

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளைத் தடை செய்யுங்கள் என்று சிறிலங்கா அரசு கோரும் போது நீங்கள் தடை செய்யவில்லையே எம்மைத் தடைசெய்யச் சொல்லி கோருகிறீர்களே என்று சில நாடுகள் பதிலளித்திருந்தன தான்.

இதன் அர்த்தம், சிறிலங்கா புலிகளைத் தடை செய்தால் தாமும் தடை செய்து விடுவோம் என்பதல்ல. மாறாக எம்மிடம் இதைக் கேட்க உங்களுக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை என்பதனை சிறிலங்கா அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டவே வெளிநாடுகளின அமைச்சர்கள் கூறியிருப்பார்கள்.

புலிகள் தமது நாட்டின் சட்டம், ஒழுங்கைப் பேணியவாறு தமது வெளிப்பாடுகளைத் தொடர்கையில் அவர்களின் செயற்பாடுகளைத் தடைசெய்ய முடியாது என்பது தான் வெளிநாடுகளின் நிலைப்பாடு. அண்மையில் அமெரிக்காவும் இதனை உறுதிப்படுத்தியிருக்கின்றது.

மற்றும் சிறிலங்காவின் நலன்களுக்காக மட்டும் புலிகளின் விடயத்தில் சிறிலங்கா அரசுக்கு சாதகமான முடிவினை வெளிநாடுகள் எடுக்கப் போவதில்லை. வெளிநாடுகளின் நலன்களும் அதில் இணைந்திருக்க வேண்டும். அவ்வாறு இருப்பினும் கூட புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளை முழுமையாக தடைசெய்யவும் போவதில்லை. தேவை எனின் செயற்பாடுகளின் வேகத்தினைக் குறைப்பதற்கான சில நகர்வுகளை மேற்கொள்ளலாம்.

கனடாவில் சுரேஷ் மீதான நடவடிக்கை மூலம் புலிகள் இயக்கத்தின் செயற்பாடு தடைசெய்யப்படவில்லை. சுவிசில் முரளி மீதான நடவடிக்கை சுவிசில் புலிகள் இயக்கத்தினைத் தடைசெய்து விடவில்லை. சில அரசியல் நோக்கங்களுக்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படினும், புலிகள் இயக்கத்திற்குத் தடை எனும் நிலை தோற்றுவிக்கப்படவில்லை, தோற்றுவிக்கப்படப் போவதுமில்லை.

மற்றும் வெளிநாடுகளில் உள்ள புலிகளின் செயற்பாடுகள் ஒரு சில செயற்பாட்டாளர்களின் மீது கட்டியெழுப்பப்படவில்லை. அவை புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பலத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இதனால் ஒரு சில செயற்பாட்டாளர்களைச் சிறைப்பிடிப்பதன் மூலம் புலிகள் இயக்கச் செயற்பாடு நின்றுவிடப் போவதில்லை. இதனை வெளிநாடுகள் நன்கு உணர்ந்து உள்ளன.

இதனால் புலிகள் இயக்கத்தின் மீது சிறிலங்காவில் தடை கொண்டு வரப்படினும் அது வெளிநாடுகளில் பெரும் பாதிப்பதினை ஏற்படுத்தும் எனக் கூறமுடியாது. எனினும் கனடாவில், புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமா என்ற ரீதியாக நடைபெறும் "சுரேஷ் வழக்கு" செப்டம்பர் மாதம் மீள ஆரம்பிப்பதால் அங்கு, சிறிலங்காவில் கூட தடைசெய்யப்படாத ஒரு இயக்கத்தினை கனடா எவ்வாறு பயங்கரவாத இயக்கம் என்று கூறமுடியும் என்ற வாதம் நீதி மன்றம் முன் வைக்கப்பட்டுள்ளதைத் தடைசெய்யும் நோக்கம் அரசுக்கு இருந்திருக்கலாம். மேலும் வெளிநாடுகளில் புலிகள் இயக்கச் செயற்பாடுகளைத் தடைசெய்யுமாறு தொடர்ச்சியான கோரிக்கைகளை வெளிநாட்டு அரசுகளிடம் சிறிலங்கா அரசு கோரும்.

ஆனால், இவ் விடயத்தில வெளிநாட்டுப் பரிமாணத்தை விட உள்நாட்டுப் பரிமாணம் ஒன்று உண்டு. அது விடுதலைப் புலிகளுடன் சமரசத்திற்குப் போவதனை அண்மைக் காலத்தில் தவிர்ப்பது. சிறிலங்கா அரசின் இராணுவத் தந்திரோபாயத்தின்படி, விடுதலைப் புலிகள் தாழ்நிலை யுத்தத்தினை நடாத்துவதற்குரிய சிறுகுழுவாக மாற்றப்பட வேண்டும். அப்போது தான் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மேலாண்மையினை நிலை நிறுத்தக் கூடிய ஒரு தீர்வினை தமிழ் மக்கள் மீது திணிக்க முடியும்.

அதற்குத் தேவையான ஆட்பலமே அரசின் பிரதான பிரச்சினை. அந்த ஆட்பலத்தினைத் திரட்டுவதற்கு அரசு பல்வேறு வழிகளில் முயன்று வருகின்றது.

தேவை ஏற்படின் கட்டாய இராணுவப் பயிற்சி ஒன்றினை அமுல்படுத்துவதற்கும் அரசு யோசித்து வருகின்றது. இந்தகைய ஒரு நடவடிக்கையினை எடுப்பதற்கு சிங்கள மக்களைத் தயார்படுத்த வேண்டும். அதற்கு புலிகளை எதிர்த்துப் போராடுவதைத் தவிர வேறு எந்தவித வழியும் இல்லை என்ற நிலையினை உருவாக்க வேண்டும். அண்மைக் காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான நம்பிக்கை இருப்பின் ஆட்சேர்ப்புத் திட்டம் வெற்றியளிக்காது. எனவே புலிகளின இயக்கத்தினை இராணுவ ரீதியாகவே கையாள வேண்டும் என்ற ஒரு கருத்தினை மக்கள் மயப்படுத்துவதற்குத் தடை உதவும்.

மற்றும் வெளிநாட்டு அமைப்புக்கள், அரசுகள் புலிகளுடன் பேச்சுவார்த்தையினை ஆரம்பியுங்கள் என்ற அழுத்தத்தினை அரசுக்கு உடனடியாக பிரயோகிக்க முடியாத நிலையினை ஏற்படுத்தும் நோக்கமாக இருக்கும்.

காலம் வரையறுக்கப்பட்ட தடை மூலம், தமக்குச சாதகமான நிலைவரும் வரை தடையினை வைத்திருந்துவிட்டு தேவையேற்படின் தடையினை நீக்கலாம் என்பது அரசின் நோக்கமாகவே இருக்கும்.

ஆனால் இத் தடை அரசினை விட புலிகளுக்கு சாதகமான நிலையினைத் தானே தோற்றுவிக்கப் போகிறது என்பது நண்டாரின மற்றைய கணிப்பு. புலிகள் இயக்கத்தினை பொறுத்தவரை போராடுவதைத் தவிர வேறு எந்த வழி மூலமும் விடுதலையினைப் பெற்றுவிட முடியாது என்பதனை வரலாற்று அனுபவங்கள் மூலம் உணர்ந்திருக்கும். பேச்சுவார்த்தைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வந்தபோது முகம் கொடுத்து வந்தாலும் சிறிலங்கா அரசு அப் பேச்சுவார்த்தைகளில் விசுவாசமற்ற முறையிலேயே கலந்து கொண்டது என்பதனை அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கும்.

இதனால் சிறிது காலத்திற்கு பேச்சுவார்த்தை என்ற பொறியினுள் சிக்குப்படாமல் போராட்டத்தினை வீச்சுடன் முன்னெடுப்பது விடுதலையினை விரைவிக்கும் என்ற கணிப்பு புலிகளுக்கு இருக்கலாம். மேலும் இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் சமாதானம் ஏற்படமுடியாது என்பதும் புலிகள் இயக்கத்தின் உறுதியான நிலைப்பாடு. இதனை சிறிலங்கா அரசின் இராணுவ ரீதியான ஆக்கிரமிப்புச் செயற்பாட்டினைத் தோல்வியுறச் செய்வதன் மூலம் நிரூபிக்க வேண்டும் என்பது புலிகள் இயக்கத்தின் விருப்பமாக இருக்கும்.

இச் சூழலில் பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம் என்று காலத்தை வீணடிக்க புலிகள் இயக்கம் விரும்பாது. எனினும் இது குறித்த சர்வதேச வேண்டுகோள்களை சமாளிக்க வேண்டிய தேவையும் புலிகளுக்கு இருந்தது.

புலிகள் இயக்கத்திற்கு சிறிலங்கா அரசு தடைவிதிப்பின், புலிகள் பக்கம் குறைவராத வகையில் தமது செயற்பாடுகளை விஸ்தரிக்க புலிகளால் முடியும். போராடுவதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை என்பதனை எல்லா மட்டங்களிலும் தெளிவாக எடுத்துரைக்க புலிகளால் முடியும். மற்றும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்றினை அரசால் அமுல்படுத்த முடியாத ஒரு நிலையில் புலிகளின் போராட்டத்திற்கு ஒரு தார்மீக நியாயம் தமிழ் மக்கள் தரப்பில் இருந்து கொண்டே இருக்கும். இது சர்வதேச அரங்கிலும் எதிரொலிக்கும். இந் நிலை புலிகளுக்குச் சாதகமான ஒரு சர்வதேச சூழலையும் வளர்த்தெடுக்கும்.

சந்திரிகா அரசு புலிகளின் இயக்கம் மீது தடை விதிப்பின் அது அரசுக்கு உதவுவதனை விட புலிகளுக்கே கூடுதலாக உதவப் போகின்றது.

தமிழழக் கலைஞர் ஒன்றியம் - பிரான்ஸ்
ஆதரவில்

நாகதர்மாவின்

பந்திக்கு வராத பந்திகள்

(பாக்களின் பரிவாரம்)

கவிதைதத் தொகுப்பு வெளியீடு

08.09.1996 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி

L.S.C - 69ème Rue de la chapelle - M°: Porte de la Chapelle

விரைவில்: தமிழ் ஈழக் கலைஞர் ஒன்றியம் வழங்கும் கலைமுரசு 52

# தமிழகம் தலை நிமிருமா?

சென்னை நகரிலுள்ள கூவம் நதியைப்போல தமிழ்நாட்டிலுள்ள கட்சி அரசியலும் நாற்றம் பிடித்துப் போய் கிடக்கிறது. அவரை இவர் கட்சியை விட்டு நீக்குவது, இவர் அவரை கட்சியை விட்டு நீக்குவது, கட்சியும், கொடியும், அலுவலகமும் எங்களுக்குத்தான் சொந்தம் என்று ஒருசாரார் சொல்ல இல்லை எங்களுக்குத் தான் சொந்தம் என்று மறுசாரார் அடிதடியில் இறங்குவது, நீதிமன்றத்துக்குள்ளேயே கைதிகளை சுட்டுக்கொல்லுவது, அதிகாரிகளை நள்ளிரவில் வீடு புகுந்து தாக்குவது என்று கடந்த சில வாரங்களாக தமிழகமே களைகட்டியிருக்கிறது.

மாயா ஜால வித்தைக்காரனின் வாய்க்குள்ளிருந்து, காகிதச் சுருள் இழுக்க இழுக்க வந்து கொண்டிருப்பதைப்போல தமிழகத்தின் முன்னாள் அமைச்சர்களினதும், அதிகாரிகளினதும் ஊழல் பட்டியல்களும் முடிவின்றி வந்துகொண்டே இருக்கின்றன.

கடந்த ஆகஸ்ட் 15 ம் திகதி பயிர்களைப்போல, தாங்களும் முகம் வாடிக் கவலையோடு காத்திருக்கும் தஞ்சை விவசாயிகளுக்கு, 'கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு' என்று ஆறுதல் சொல்லி பிரச்சனையின் தாக்கம் தற்காலிகமாக திசை திருப்பப்படுகிறதேயன்றி, காவேரியில் தண்ணீரே வராவிட்டால், மாற்று வழி என்ன என்பதைக் கண்டறிவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவே இல்லை.

தண்ணீருக்குப் போராடும் தமிழ் நாட்டில் 'ஏரிகள், குளங்கள், நீர்த் தேக்கங்கள் உரிய காலத்தில் தூரெடுக்கப்பட்டு சரியாகப் பராமரிக்கப்படாததால் மழைக்காலத்தில் பெய்யும் மழை நீரில் 60 வீதத்துக்கும் அதிகளவு தண்ணீர் வீணாகக் கடலில் போய் சேர்ந்து விடுகிறது' என்ற உண்மையை புவியியல் நீர்வளவியல் அறிஞர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அரசியல்வாதிகளின் தயவோடு நடைபெறும் காட்டு மர அழிப்பு நடவடிக்கைகளும், தமிழகத்திற்கான மழை வீழ்ச்சியின் அள



தங்களுக்கு முன் அவர் எழுதிய இந்த வசனம், நான்காவது தடவையாக அவர் தமிழக முதல்வராக பொறுப்பேற்றிருக்கிற இன்றைய காலகட்டத்திற்கும் பொருத்தமாகவே இருக்கிறது.

அந்தக் காலத்திலே பெரிய நிலப் பிரபுக்களும், ஜமீன்தார்களும், முதலாளிமார்களுமே மக்களைச் சுரண்டுபவர்களாக இருந்தார்கள். இன்றைக்கு அவர்களையெல்லாம் விழுங்கி ஏப்பம் விடுமளவுக்கு அரசியல்வாதிகள் மிகப்பெரிய சுரண்டல்காரர்களாக ஆகியிருக்கிறார்கள். அன்றைக்கு அவர்க

வயிற்றுப் பசிக்காக நூறு ரூபாவுக்குத் திருட்டு நடத்தியவன் கிரிமினல் குற்றவாளியாக சாதாரண வகுப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறான். மக்களின் பணத்தை கோடிகோடியாக கொள்ளையடித்த அரசியல்வாதி விசாரணைக் கைதி என்ற பெயரில் A வகுப்புச் சிறையில் சகல வசதிகளோடும் கௌரவமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறான். இதுதான் இன்றைய தமிழகம்.

கலைஞர் கருணாநிதி நான்காவது தடவையாக முதல்வராகப் பதவியேற்று மூன்று மாதங்கள் ஆகப்போகின்றன. இந்த மூன்று மாத காலத்தில் தனது முன்னைய அனுபவங்களில் இருந்து தனது ஒவ்வொரு நடவடிக்கையையும் அவர் மிக அவதானமாக திதானித்துச் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அவர் பதவியேற்ற சில நாட்களிலேயே மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் குண்டு வெடித்தது. தூத்துக்குடியிலே சாதிக் கலவரம் வெடித்தது. பல இடங்களிலே ஆட்

என்ற நிலையில் அவ்வாறான உடனடி ஆபத்து ஏதும் நிகழ வாய்ப்பில்லை என்றாலும் ஈழத் தமிழருக்கு ஆதரவாக கலைஞர் செயற்படக்கூடாது என்பதற்காகவே ஜெயலலிதா அவ்வாறான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. இதன் பின்னணியில் சந்திரிகா அரசோ அல்லது அதன் ஆதரவுத் தமிழ்க் குழுக்களோ இருந்திருக்கலாம் என்ற சந்தேகமும் இருக்கிறது.

கலைஞர் பதவிக்கு வந்ததும் செய்த நல்லதொரு காரியம் ஈழத் தமிழ் குழந்தைகள், தமிழ் நாட்டில் கல்வி கற்பதற்கு ஜெயலலிதா போட்ட தடை உத்தரவை நீக்கியதுதான். அடுத்து சென்னை உட்பட தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் பாரிய அளவில் திடீர் சோதனைகளை நடத்தி குண்டர்களைக் கைது செய்ததோடு அவர்கள் வசமிருந்த ஆயுதங்களையும் பறிமுதல் செய்தது. தமிழ்நாட்டில் கொள்ளை, கொலை, துப்பாக்கிச் சூடு, குண்டுவெடிப்பு என்று எது நடந்தாலும் உடனே அது

# குண்டர்கள் சாம்ராட்சியத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா?

இந்திய சுதந்திரத்தின் 50வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. இந்த 50 ஆண்டுகளில் தமிழ் நாட்டில், ராஜாஜி ஆட்சி, பக்தவத்சலம் ஆட்சி, காமராசர் ஆட்சி, அண்ணா ஆட்சி, கருணாநிதி ஆட்சி, எம்.ஜி.ஆர் ஆட்சி, ஜெயலலிதா ஆட்சி என்று பல ஆட்சிகள் மாறி மாறி வந்து போய்விட்டன. ஆனால் பாமர மக்களுடைய வாழ்க்கை மாறவேயில்லை. மக்களுடைய அறியாமையும், எழுத்தறிவின்மையும் அருகிலுள்ள கேரள மாநிலத்தில் ஒழிக்கப்பட்ட அளவுக்கு இன்னும் ஒழிக்கப்படவேயில்லை. தமிழ் நாட்டில் கட்சி அரசியலென்பது சினிமா அரசியலாகிவிட்டது. அதாவது யார் பிரமாதமாக நடித்து மக்களை ஏமாற்றலாம் என்கிற அளவுக்கு நிலைமை மோசமாகப் போய்விட்டது.

கூவம் நதியின் நாற்றத்தைப் போல சாதிக் கலவரங்களும், மதக்கலவரங்களும், பொலீஸ் நிலையக் கொலைகளும், பொலீசாரே பெண்களை காவலில் வைத்து பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவதும் அதிகரித்திருக்கிறது. முகமூடிக் கொள்ளைகள், துப்பாக்கி முனைக் கொள்ளைகள், ஆட்கடத்தல்கள், குண்டு வெடிப்புகள், அரசியல் படுகொலைகளும் கூட அதிகரித்துப் போயிருக்கின்றன.

சென்னை நகரின் குடிதண்ணீர் பிரச்சனை மூன்று தசாப்தங்களை எட்டியும் இன்னமும் முற்றாகத் தீர்ந்த பாடாக இல்லை. அதுபோல் காவேரி நீர் பிரச்சனையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போகிறதேயன்றி தீர்ந்த பாடாக இல்லை. காவேரியில் தண்ணீர் இல்லாததால் வாடியிருக்கும் வைக் குறைவடையச் செய்திருக்கின்றன' என்ற உண்மையும் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இவற்றின் தாக்கம் பற்றி யாரும் அக்கறைப் பட்டதாகத் தெரியவில்லை.

ருக்கு அடியாட்கள் இருந்ததைப் போல இன்றைக்கு இவர்களுக்கு குண்டர்படை இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இலவச வேட்டி சால்வை




'சிங்கத் திருநாடே நீ சிலந்திக் கூடாக மாறியது ஏன்? வந்தாரை வாழவைக்கும் வழமிகு தமிழகமே! நீ சொந்த நாட்டாரையே சுரண்டுவது எத்தனை நாளாக?' இது இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இளைஞராக இருந்த போது பராசக்தி படத்திற்காக எழுதிய வசனம். நான்கு தசாப்

யில் ஊழல், அரச நிலத்தை விற்றதில் ஊழல், போக்குவரத்துத் துறையில் ஊழல் என்று தொடங்கி மனிதனின் இறுதிச் சடங்கு நடக்கும் சுடுகாட்டிலே கூட ஊழல் என்ற அளவுக்கு அது எல்லாத் துறைகளிலும் வியாபித்துப்போய் இருக்கிறது.

— காண்டீபன் —

கடத்தல்கள் நிகழ்ந்தன. உடனடியாகவே ஜெயலலிதா விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டுக்குள் ஊடுவிவிட்டார்கள் என்ற அறிக்கையை வெளியிட்டார். இது உண்மையல்ல என்பது அவருக்குத் தெரியும். ஆனால், முன்பு விடுதலைப் புலிகளின் பிரச்சனையைக் காட்டியே ராஜீவ் காந்தியின் தூண்டுதலின்பேரில் அப்போது பிரதமராக இருந்த சந்திரசேகரால் கலைஞரின் ஆட்சி கலைக்கப்பட்டது. தற்போது மத்தியில் உள்ள தேவகவுடா அரசிற்கு கலைஞரின் ஆதரவு தேவை

விடுதலைப் புலிகளின் வேலை என்று கதை கட்டி விடுவது ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவினதும் தமிழகக் காங்கிரஸ்காரர்களினதும், பார்ப்பனியப் பத்திரிகைக்காரர்களினதும் வேலையாக இருந்தது.

உண்மையில் தமிழ்நாட்டில் அதிக அளவுக்கு குற்றச் செயல்களில் ஈடுபடுவதும், சட்டம் ஒழுங்கைச் சீர்குலையச் செய்யும் குண்டர்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் உதவி புரிவதும் இந்திய உளவுத்துறையான றோவினால் பயிற்சி கொடுக்கப்பட்டு ஆயுதமும் வழங்கப்பட்ட புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி. போன்ற தமிழ்க் குழுக்களே. புலிகளால் தடைசெய்யப்பட்ட இக் குழுக்களின் உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழ் நாட்டிற்குத் தப்பி வந்தபோது தங்கள் வசமிருந்த ஆயுதங்களை அங்கிருந்த சமூக விரோதிகளுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். ஒரு A.K.47 ரக துப்பாக்கி 25 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் வரையிலும், ஒரு 9 M.M. ரக பிஸ்டலும் 0.38 ரக கைத்துப்பாக்கியும் தலா 5 ஆயிரம் ரூபா தொடக்கம் 10 ஆயிரம் வரையிலும், ஒரு கிறனைட் ஆயிரம் ரூபாவில் இருந்து 2 ஆயிரம் வரையிலும் விற்கப்பட்டிருக்கிறது. எல்லாமே இந்தியத் தயாரிப்பு ஆயுதங்கள் தான்.

இந்த அமைப்புக்களின் உறுப்பினர்கள் பலர் தங்களது பணத் தேவைகளுக்காக தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் ஆட்கடத்தல், வாகனக் கடத்தல் வழிப்பறிக் கொள்ளை கொலை என்று பல குற்றச் செயல்களைச் செய்திருக்கிறார்கள். இவர்கள் வேறு

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# சிவசேனா கட்சி மாநிலக் கட்சிகளுடன் கூட்டுக்கு விருப்பம்

மத்திய அளவில் மாநில கட்சிகளுடன் கூட்டணி அமைக்க தமது கட்சி தயாராக உள்ளது என சிவசேனாத் தலைவர் பால்தாக்ரே தனது கட்சிப் பத்திரிகையில் தெரிவித்துள்ளார்.

மத்தியில் ஒரு நல்ல அரசாங்கத்தை தேசியக் கட்சிகளால் அமைக்க முடியவில்லை. மக்கள் இதை உணர்ந்து விட்டார்கள் எனவே, மற்ற மாநிலத்தில் உள்ள கட்சிகளுடன் கூட்டணியமைக்க சிவசேனா தயாராக இருக்கிறது.

தேசிய கட்சிகளைப் பற்றிய அவல நிலையை அனுபவ பூர்வமாக உணர்ந்துள்ள ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தேசிய அளவில் மாநில கட்சிகளில் கூட்டணிக்கு முயற்சி செய்வதாகத் தெரிகிறது. அவர் சிவசேனாவிற்கு அழைப்பு விடுத்தால் நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன்.

பிரதமர் தேவகௌடாவை முதலில் சந்தித்த போதே அவர் மீது எனக்கு பற்று ஏற்பட்டுள்ளது. அவர் சிறந்த மனம் படைத்தவர். அனைவராலும் விரும்பப்படுபவர். தனி பலத்துடன் மத்தியில் ஆட்சியைப் பிடித்திருந்தால் அவரால் மேலும் திறம்படச் செய்ய முடியும்.

எனக்கு அடுத்த சிவசேனா தலைமைப் பதவிக்கு வாரிசாக யாரை நியமிப்பது என்று முடிவு செய்யவில்லை. நான் எனது தந்தையின் செல்வாக்கினால தலைமைப் பதவிக்கு வரவில்லை. சொந்தத் திறமை மூலமாகவே முன்னேறினேன். அதே வழியில்தான் அடுத்து வருபவரும் இருப்பார் எனத் தெரிவித்துள்ளார்.

# ஜெயலலிதாவின் முன்பிணை மனு மீதான விசாரணை தள்ளிவைப்பு

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தன்னை இந்தியாவில் எங்கு கைது செய்தாலும் முன்பிணை வழங்க வேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை கடந்த வாரம் நடைபெற்றபோது, 'ஜெயலலிதாவுக்காக டெல்லி வகீல் 'கபில்சி பல்' வாதாடுவதாக இருந்தது. அவர் வராததால் இந்த வழக்கை தள்ளிவைக்க வேண்டுமென்று ஜெயலலிதா தரப்பு வகீல பஞ்சாபிகேசன் கோரிக்கை விடுத்தார்.



அதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி வழக்கு விசாரணையை இம்மாதம் 28-ம் திகதிக்குத் தள்ளிவைத்தார். இதே போல் கொடைக்கானலில் கட்டப்பட்ட ஹோட்டல் தொடர்பான வழக்கிலும் இலஞ்ச ஒழிப்புப் பொலீசார் தன்னைக் கைது செய்தாலும் தனக்கு முன் பிணை வழங்க வேண்டும் என்று கோரியும் ஜெயலலிதா வேறொரு மனுவையும் தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவையும் விசாரித்த நீதிபதி மேற்குறிப்பிட்ட காரணத்திற்காக அதையும் இம்மாதம் 28-ம் திகதிக்குத் தள்ளி வைத்தார்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் வேறு என்பது தமிழகப் பொலிசாருக்கும், தமிழக அரசியல்வாதிகளுக்கும், பார்ப்பனியப் பத்திரிகைகளுக்கும் தெரியும். ஆனால், விடுதலைப் புலிகளைக் கிரிமினல்களாகக் காட்ட வேண்டும் என்பதற்காக அவர்கள் கூட்டாகச் சேர்ந்து இந்த உண்மையை மக்களுக்கு மறைத்து வந்திருக்கிறார்கள்.

இது அவலை நினைத்து உரலை இடித்த கதையாக தமிழ்நாட்டில் குண்டர் சாம்ராச்சியம் ஒன்று உருவாகி அது பரந்து வேர் விடுவதற்கு காரணமாக அமைந்துவிட்டது.

இந்தப் பின்னணியில் பதவியேற்றுள்ள கலைஞரால் அவ்வளவு சுலபமாக இந்தக் குண்டர் சாம்ராச்சியத்தை தகர்த்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டிவிட முடியாது. அரசியல்வாதிகளோடு பின்னிப் பிணைந்து போயிருக்கும் இந்தக் குண்டர் சாம்ராச்சியத்தின் மீது கைவைக்க முற்படும்போது ஜாதிக் கலவரங்களும், குண்டுவெடிப்புகளும் நடைபெறுவதற்கு சாத்தியம் உண்டு. மீண்டும் புலிகள் ஊடுருவல் புரளி கிளப்பப்படவும் வாய்ப்புண்டு. இன்றைக்குக் கலைஞரோடு கைகோத்திருக்கும் மூப்பனார் கூட கலைஞருக்கு எதிராக புலிக் கோசத்தை எழுப்பக்கூடும்.

மூப்பனாரைப் பொறுத்த வரை அவர் கலைஞரோடு வைத்துக்கொண்ட கூட்டு கொள்கை ரீதியானது அல்ல. நரசிம்மராவுக்கு தனது பலத்தை நிரூபிக்க வேண்டும், அதுவே மூப்பனாரின் அன்றைய கனவு. ஆனால் இன்றைக்கு ரஜனியைத் தூக்கி வைத்துக் கொண்டு காமராஜர் ஆட்சியை மீண்டும் தமிழகத்துக்குக் கொண்டு வருவோம் என்று சொல்லும் மூப்பனாரின் கனவு வேறு. இது கொஞ்சம் வேடிக்கையானதாக இருந்தாலும் நாற்காலிக் கனவுக்காக அவரும் எதையும் செய்ய துணிந்துவிட்டார் என்பதையே எடுத்துக் காட்டுகிறது. காமராஜர் அரசியலில் சினிமாவைக் கலந்தது கிடையாது. தன்னுடைய தனித்துவத்தைப் புறந்தள்ளிவிட்டு வாக்கு வேட்டைக்கு சினிமாக் கதாநாயகர்களின் உதவியை அவர் நாடியது கிடையாது.

இந் நிலையில் ரஜனி நயவில் தங்கி நிற்கும் மூப்பனார், ஜெயலலிதா பாணியில் நாற்காலிக் கனவுக்காக கலைஞருக்கு எதிராக புலிக்கோசம் எழுப்பும் சாத்தியம் நிறையவே உள்ளது. மத்தியில் நிலைமை சாதகமாக இருந்தால் மறுபடியும் காமராஜர் ஆட்சியைக் கொண்டுவருவதற்காக கலைஞரின் ஆட்சியைக் கலைத்துவிட அவரே சிபாரிசு செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

மொத்தத்தில் கலைஞர் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள குண்டர்கள் யார். கூலிப் படைகள் யார், சமூக விரோதிகள் யார் அவர்களுக்கும் புலிகளுக்கும் என்ன வித்தியாசம் என்பதை தமிழக மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவது. அது ஒன்றுதான் குறைந்தபட்சம் அவரது ஆட்சியின் ஆயுளைக் காப்பாற்றவும், அவர் செய்ய நினைத்ததைச் செய்யவும் அவருக்குக் கை கொடுக்கக்கூடிய துருப்புச் சீட்டாக இருக்கும்.

# தேடுதல் வேட்டை தொடர்கிறது; முன்னாள் சபாநாயகர் தலைமறைவு

(சென்னை)

தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சியில் நடந்த ஊழல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளதை அடுத்து, அ.தி.மு.க.வைச் சேர்ந்த பல முன்னாள் அமைச்சர்கள் தலைமறைவாகியுள்ளனர். அது போல் முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவும் இலஞ்ச ஒழிப்புப் பொலீசரால் தான் கைது செய்யப்படலாம் என அஞ்சி தலைமறைவாகியுள்ளார்.

ஏற்கெனவே இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர்களான செல்வகணபதி, இந்திரகுமாரி ஆகியோர் கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர். இன்னொரு அமைச்சரான கிருஷ்ணன் கைது செய்யப்படவிருந்த நிலையில் தலைமறைவாகிவிட்டார்.

இந்நிலையில் சமீபத்தில் முன்னாள் அமைச்சர்களான பொன்னுசாமி, பரமசிவம், முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா ஆகியோர் வீட்டிலும் இலஞ்ச ஒழிப்புப் பொலீசார் சோதனை நடத்தி கோடிக்கணக்கான ரூபா பணம் மற்றும் நகைகள் ஆவணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளார்கள். அவர்கள் மூவரும் தலைமறைவாகிவிட்டனர்.

இதற்கிடையில் சேடப்பட்டி முத்தையா மட்டும் முன்பிணை கேட்டு நீதிமன்றத்துக்கு மனுச்செய்துள்ளார்.

# நான் இந்த இடத்தில் இருப்பதற்கு மக்களும் இறைவனும்தான் காரணம்

## பிரதமர் தேவகௌடா

அண்மையில் கர்நாடக மாநிலத்திற்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் தேவகௌடாவிடம் பத்திரிகையாளர்கள் ஜனதா தளத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ராமகிருஷ்ண ஹெக்டே சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது உங்களுக்கு ஆபத்தை விளைவிக்குமா? என கேட்டபோது அவர் மிகவும் கோபப்பட்டார்.

ஆண்டவனைத் தவிர வேறு யாரும் எனக்குப் பெரியவர் அல்ல. பத்திரிகையாளர்கள் எதைப் பற்றி எழுதினாலும் எனக்குக் கவலை இல்லை. கடந்த பத்து மாதங்களாக எனக்கு 5ம் இடம், 4ம் இடம், 3ம் இடம் கிடைக்கும் என்று எழுதினீர்கள். ஆனால் ஆண்டவனும், கர்நாடக மக்களும் என்னை உயர்ந்த இடத்தில்



இருக்கும்படி ஆசீர்வதித்துள்ளனர். நான் இந்த உயர்ந்த இடத்தில் இருப்பதற்கு பத்திரிகையாளர்கள் காரணம் அல்ல. ஆனால் மக்களும், இறைவனும் தான் காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் மத்திய மந்திரி சுக்ராமின் 19 வங்கிக் கணக்குகள் முடக்கம்

நரசிம்மராவ் அரசில் தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த சுக்ராம் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இது குறித்து விசாரித்து வரும் சி.பி.ஐ.அதிகாரிகள், அவரது வீட்டைச் சோதனையிட்டு மூன்றரைக் கோடி ரூபா பணத்தைக் கைப்பற்றியிருந்தனர்.

இந்த விசாரணை நடந்து கொண்டிருந்தபோது சுக்ராம் மருத்துவ சிகிச்சைக்காக லண்டனுக்கு வந்திருந்தார். இந்தியாவுக்கு திரும்பிச் செல்லும்போது தான் கைது செய்யப்படலாம் என அஞ்சிய அவர் லண்டனில் திடீரென்று தலைமறைவாகிவிட்டார்.

தற்போது அவரைப் பிடிப்பதற்கு இன்ரர்போலின் உதவியை நாடியுள்ள சி.பி.ஐ.அதிகாரிகள டெல்லி, மண்டி, சிம்லா ஆகிய இடங்களில் 19 வங்கிகளில் அவருக்கு கணக்கு இருப்பதைக் கண்டு பிடித்து அவற்றை முடக்கியுள்ளதுடன், அவரது வங்கி பாதுகாப்புப் பெட்டகத்திற்கும் சீல் வைத்துள்ளனர்.

எலக்றிசிற்றி, பைப் லைனிங், மாபிள் பதித்தல், பேப்பர் ஒட்டுதல், பெயின்றிங், P.V.C யன்னல்கள் மற்றும் கட்டட வேலைகள், தச்சு வேலைகள் அனைத்திற்கும்,

பகீ என்ரபிறைஸ்

உங்கள் வீடுகளுக்கான இன்சூரன்ஸ், கடன் ஏற்பாடுகளுக்கு தேவையான Devis வழங்கப்படும்

Devis 200Frs - Deplacement 150Frs

புதிய தொலைபேசி இலக்கம்: 48 48 39 64 / 09.27.32.00

(ADV)

மலிவு

சுவிஸ் லவுசான் நகரில்
உங்கள் அபிமானம் பெற்ற

மலிவு

# செல்வராஜா

## ஜுவெல்லர்ஸ் & கார்மென்ஸ்

## மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும்

**29.08.96 வியாழன்**
**30.08.96 வெள்ளி**
**31.08.96 சனி**
**ஆகிய 3 தினங்களில்**



அனைத்துப் புடவைகளும்
30% இல் இருந்து 50% கழிவில்

- 1 பவுண் விலை 165 Sfr + கூலியும்
  (இவ் மூன்று தினங்களில் ஓடர் கொடுக்கும் நகைகள் உட்பட)
- ஒறிஜினல் வீடியோ கசெற்றுக்கள் 9 Sfr
- ஒறிஜினல் ஓடியோ கசெற்றுக்கள் 2 Sfr
- Compact Disc 9 Sfr இல் இருந்து

**Selvarajah** *Jewellers & Garments*

CHEMIN DES ROSIERS-3, 1004 LAUSANNE
TEL: 021 - 647 74 65 - 647 74 34 - 077 / 22 43 64 - 077 / 69 75 19

# "இருட்டடிப்புச் செய்யப்பட்ட வர்ணகுலத்தானின் போர்த்துக்கேயருக்கு எதிரான விடுதலைப் போர்"

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

வரலாற்றுத் தொடர்

32

சங்கிலி குமாரனைத் தண்டிப்பதற்காக பிலிப் து ஒலிவேரா (Philip de Oliceira) மூன்று போர்த்துக்கேயப் படைப் பிரிவுகளுடனும், 500 பேர் கொண்ட சிங்களப் படைப் பிரிவு ஒன்றுடனும், கொழும்பிலிருந்து கடல் மார்க்கமாகப் புறப்பட்டான். மன்னார் வழியாக பூநகரிக்கு அவனது படை வருவதற்குள் தண்ணீர் இல்லாமல் பெருங் கஷ்டத்தை அனுபவித்துவிட்டது. அதோடு அவர்கள் வந்த தோணிகளும் சில பழுதடைந்துவிட்டன.

இதனால் பூநகரியில் தங்கி சற்று இளைப்பாறிக் கொண்டு, பழுதடைந்த தோணிகளையும் திருத்திவிட்டு, எட்டாவது நாள் அந்தப் படை யாழ்ப்பாணக் கரையை அடைந்தது. அங்கு 'பாதுகாப்பான ஒரு இடத்தில் முகாமமைத்து படைகளைத் தங்க வைத்த ஒலிவேரா, அதன் பின் நல்லூரிலிருந்த சங்கிலி குமாரனுக்கு, 'தங்களுக்குச் செலுத்த வேண்டிய திறைப் பணத்தை செலுத்தும்படி' தூதனுப்பினான்.

சங்கிலி குமாரன் 'தான்திறை செலுத்துவதாக' ஒத்துக்கொண்டான். ஆனால் தன்னிடம் அவர்கள் கேட்கும் முழுத் தொகையையும் செலுத்தப் பணம் இல்லை என்றும், 5,000 பர்தாங்கு பணத்தை விரைவில் செலுத்துவதாகவும், ஒலிவேராவைப் பூநகரியில் சென்று தங்கியிருக்கும்படியும் ஒலிவேரா அனுப்பிய தூதுவனிடம் சொல்லியனுப்பியிருந்தான்.

சங்கிலியின் இந்தச்சொல்லை ஒலிவேரா ஏற்க மறுத்துவிட்டான். சங்கிலி தனக்குப் பொய் சொல்கிறான் என அவனுக்குத் தோன்றியது. அதற்கிடையில் வண்ணார் பண்ணையில் தமிழர் படையொன்று தம்மைத் தாக்குவதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும் அவனுக்குத் தகவல் வந்தது. எனவே சங்கிலி குமாரனின் படைகள் மீது தாக்குதல் நடத்த அவன் உத்தரவிட்டான்.

வண்ணார் பண்ணையில் அணிவகுத்து நின்ற தமிழர் படைக்கு 'பரதவர் குல வீரன்' ஒருவன் தலைமை தாங்கியதாக அறியமுடிகிறது. அவனது பெயர் 'வருண குலத்தான்' என்கின்ற குறிப்பு மட்டும்தான் யாழ்ப்பாண வரலாற்று ஏடுகளில் காணக் கிடைக்கிறது.

* * * * *

மகாவம்சம், இராஜவம்சம், சூளவம்சம் முதலான சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் எவ்வாறு பௌத்தப் பாரம்பரியத்தையும், பௌத்த சிங்கள நலனையும் அடிப்படையாக வைத்து பக்க சார்புடன் வரலாற்றை எழுதினார்களோ, அவ்வாறே இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை யாழ்ப்பாண இராட்சியத்தின் வரலாற்றை எழுதியவர்கள் தங்கள் சாதிய நலன்களையும், பார்ப்பனியம் இந்து மதத்தின் நலன்களையும் அடிப்படையாக வைத்தே வரலாற்றை எழுதினார்கள். தமிழர் நலன், தமிழ் தேசிய நலன், அல்லது நடுநிலையான வரலாற்றுப் பார்வை என்பது இரண்டாம் பட்சமாகவே இருந்தது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கை சரித்திரச் சுவடிகள் பாதுகாப்புச் சபையில் உறுப்பினராக இருந்துவரும் இங்கிலாந்து - போர்த்துக்கேய, ஒல்லாந்து ஆவணக் காப்பகங்களில் இருந்து தகவல்களைத் திரட்டி யாழ்ப்பாணச் சரித்திரத்தை ஆய்வு செய்து வெளியிட்டு வருமான முதலியார் இராஜநாயகம், 'யாழ்ப்பாண வைபவ மாலை' நூலுக்குச் செய்த விமர்சனத்தில் 'யாழ்ப்பாண வரலாற்றை எழுதி வெளியிட்ட பலர் இடைச் செருகல்களாக தமது சொந்தக் கருத்துக்களையும் சேர்த்துவிட்டனர். சிலருடைய கருத்துக்களில் அவர்களது சாதிய நலன்களுக்கேற்ப கருத்துக்கள் திரிக்கப்பட்டிருக்கின்றன' என்று இதை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

யாழ்ப்பாண அரசுடன் சம்பந்தப்பட்ட ஏனையவர்களுடைய பெயர்கள் விலாவாரியாக அவர்களது பட்டங்கள் வரிசை, முதலியவற்றுடன் குறிப்பிடப்படுகிறபோது, போர்த்துக்கேயத் தளபதி ஒலிவேராவை எதிர்த்த 'வருண குலத்தானைப்' பற்றிக் குறிப்பிடும்போது, 'கரையாரத் தலைவன்' என்று மட்டும் குறிப்பிட்டுள்ளதை இந்த அடிப்படையிலேயே பார்க்க வேண்டியுள்ளது.

* * * * *

வண்ணார் பண்ணையில் ஒலிவேராவின் படைகளுக்கும், வருணகுலத்தான் தலைமையில் வந்த தமிழர் படைகளுக்கும் கடும் சமர் நடந்தது. வருணகுலத்தானும் அவனது வீரர்களும் வீராவேசமாக வாட்போர் புரிந்தும், அம்புகளை எய்தும், கவண்களில் கற்களை வைத்து எறிந்தும் ஒலிவேராவின் படைகளில் பலரைக் கொன்று அவர்களை நிலை குலைய வைத்தனர்.

ஆனாலும் தமது படை தோல்வியடைவதைக் கண்ட ஒலிவேரா மேலதிகமாக பீரங்கிப் படையை வரவழைத்து தாக்குதல் தொடுக்க, பீரங்கிக் குண்டுகளின் அகோரத்திற்குத் தாக்குப்பிடிக்காது தமிழர் படை பின் வாங்கியது. தமிழர் படையினரைக் கைது செய்வதற்காக ஒலிவேராவின் படைகள் துரத்தி வந்தன. அவர்களில் போர்த்துக்கேய வீரர்களைத் தவிர மற்றவர்கள் காலில் செருப்பணிந்திருக்கவில்லை. அதனால் நெருஞ்சி முட் செடிகள் நிறைந்திருந்த போர்க்களத்தினூடாக அவர்களால் விரைவாக ஓட முடியவில்லை. ஆனால் தமிழர் படை முழுவதும் செருப்பணிந்திருந்ததால் ஓடித் தப்பித்துக் கொண்டது.

'இனி அவர்களைத் தேடிப் போவது வீண் வேலை' என எண்ணிய ஒலிவேரா, தனது படைகளை நல்லூருக்குச் சென்று அரண்மனையையும் கைப்பற்றி சங்கிலி குமாரனையும் கைது செய்யும்படி உத்தரவிட்டான்.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தனது படைகள் தோல்வியடைந்து எதிரியின் படைகள் அரண்மனையை நோக்கி வருவதை அறிந்த சங்கிலி குமாரன், அரண்மனைக்குள் இருந்த இரகசிய வழியினூடாக தனது குடும்பத்துடன் தப்பிச் சென்று கடற்கரையில் தோணியேறி (எந்தக் கடற்கரை என்பது தெரியவில்லை) கோடிக் கரைக்குப் புறப்பட்டான்.

ஆனால் நடுக்கடலில் நங்கூரமிட்டிருந்த ஒலிவேராவின் கடற்படையினர் அவனது தோணிகளை முற்றுகையிட்டுப் பிடித்துவிட்டனர். சங்கிலி குமாரனும் அவனது குடும்பமும் கைது செய்யப்பட்டது. அவர்களிடமிருந்த 8 ஆயிரம் பர்தாங்கு பணமும், ஏனைய அனைத்து நகைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைதிகளாக கோவாவிலுள்ள போர்த்துக்கேய தேசாதிபதி முன் நிறுத்தப்பட்ட சங்கிலி குமாரனுக்கு விசாரணையில் மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. அங்கிருந்த சிறை மைதானத்தில் அவன் தலை வெட்டிக் கொல்லப்பட்டான். அவனது மனைவிமாரும் மற்ற உறவினர்களும் கன்னியாஸ்திரி மடத்தில் சேர்க்கப்பட்டனர்.

கி.பி. 1620-ம் ஆண்டு இவ்வாறு சங்கிலி குமாரன் கொல்லப்பட்டதும், பிலிப் து ஒலிவேரா கப்பித்தன் மேயர் எனும் பட்டத்துடன், யாழ்ப்பாணத்திற்கு போர்த்துக்கேய தேசாதிபதியாக்கப்பட்டான். அத்துடன் 2,000 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவி வந்த தமிழ் அரசு முடிவுக்கு வந்தது.

இவ்வாறு யாழ்ப்பாண அரசு முடிவுக்கு வந்தபோது ஒலிவேராவுக்கு எதிராகப் போரிட்ட 'வருணகுலத்தானை'யும், சின்ன மீகாப் பிள்ளை ஆராச்சி என்ற பிரதானியையும் தவிர மற்றவர்கள், ஒலிவேராவுக்கு நிலபாவாடை விரித்து வரவேற்று, போர்த்துக்கேயரது ஆட்சியை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக அவனுக்கு உறுதி கொடுத்து தங்கள் முதலியார் பட்டத்தையும், பிரதானிகள் பதவிகளையும் காப்பாற்றிக் கொள்ள முன்வந்தனர். சிலர் ஒருபடி மேலே போய், பரம்பரை பரம்பரையாக தாங்கள் கடைப்பிடித்து வந்த சைவ சமயத்தைக் கைவிட்டு கிறிஸ்தவ மதத்திற்கு மாறி ஒலிவேராவின் விசுவாசத்தைப் பெற முனைந்தனர்.

பரதவர் குலத் தலைவனான வருண குலத்தான் - சங்கிலி குமாரனுக்கு தலை வெட்டியதை அறிந்து துவண்டுபோய்விடவில்லை. போர்த்துக் கேயரின் யாழ்ப்பாண தேசாதிபதி என்கிற பெயரில் தான் பிறந்து வளர்ந்த யாழ்ப்பாண மண்ணை ஆக்கிரமித்திருக்கும் ஒலிவேராவிடம் மண்டியிட்டு பதவிகளையோ, சலுகைகளையோ பெறுவதற்கு அவன் விரும்பவில்லை. அந்நியர்களான போர்த்துக்கேயர்களை விரட்டியடித்து, யாழ்ப்பாண மண்ணில் மீண்டும் தமிழ் அரசை நிலைபெறச் செய்ய வேண்டும் என்பது அவன் குறிக்கோளாக இருந்தது.

அதற்காக அவன் தஞ்சாவூர் நாயக்க அரசனுடன் தொடர்பு கொண்டான். அவன் அளித்த படையினரின் உதவி கொண்டு, ஒலிவேரா பதவியேற்ற (கி.பி.1620) ஒரு சில மாதத்திலேயே அவனுக்கெதிராகப் போர் தொடுத்தான்.

'வெற்றிமாதா' ஆலயத்தின் முன்றலில் ஒரு முனையிலும், நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் மறுமுனையிலுமாக ஒலிவேராவின் போர்த்துக்கேய ஆட்சிக்கு எதிராக வருண குலத்தான் ஒரே நேரத்தில் இரு முனைகளில் போர் தொடுத்தான். இந்தப் போர் முன்னைய போர்களைவிட உக்கிரமானதாக இருந்தது. ஒலிவேராவின் படைகள் பீரங்கிக் குண்டுகளையும், துப்பாக்கி வேட்டுக்களையும், இடையறாது நெருப்பாகப் பொழிந்தபோதும், வருண குலத்தானின் தலைமையிலான தமிழர் படை, ஆக்ரோஷமாகப் போரிட்டது. பலநூறு போர்த்துக்கேய படையினரதும், அதைவிடப் பல நூறு, அவர்கள் பக்கம் நின்ற கூலிப் படையினரது தலைகள் வெட்டிச் சாய்க்கப்பட்டன. தங்கள் படைகள் தோற்றுவிடும் என்று அஞ்சி போர்த்துக்கேயப் பெண்கள் எல்லாம், கிறிஸ்தவ தேவாலயங்களுக்குள் புகுந்துகொண்டு யேசுநாதரிடம் தங்களைக் காப்பாற்றும்படி மன்றாடுமளவுக்கு தமிழர் படை போரில் வெற்றி வாகை சூடிவந்தது.

ஆனால் துரதிஷ்டவசமாக இரண்டாவது நாள் நடந்த சண்டையில் போர்த்துக்கேயர் ஏவிய பீரங்கிக் குண்டுக்கு வர்ணகுலத்தான் பலியாகிவிட தமிழர் படை தளபதியில்லாமல் பின்வாங்கி ஓடித் தோல்வியைத் தழுவியது.

உண்மையில் யாழ்ப்பாண இராச்சியம் முதன்முதலாக 15-ம் நூற்றாண்டில் சாமமல்குமரையாவால் கைப்பற்றப்பட்டபோது, கனகசூரிய சிங்கையாரியனும், அவன் மகன் சிங்கைப் பரராசசேகரனும் போர் தொடுத்து அதை மீட்டனர். இது இழந்த இராட்சியத்தை மீட்க யாழ்ப்பாண மன்னர்கள் தொடுத்த முதற் போராக இருந்தாலும், இதில் இராட்சியத்தை பறிகொடுத்ததில் சம்பந்தப்பட்ட மன்னர்களே, அதை மீட்பதற்கான போரை தலைமை தாங்கி நடத்தியதால் அதை ஒரு விடுதலைப் போராகச் சொல்ல முடியாது.

ஆனால் மன்னர் குலத்தைச் சேராத, அதே நேரம் அக்காலகட்டத்தில் யாழ்ப்பாண சமூக அமைப்பில் இழிகுலம் என ஒதுக்கப்பட்ட பரதவர் குலத்தைச் சேர்ந்த 'வருண குலத்தான்' அந்நிய ஆக்கிரமிப்பாளனான ஒலிவேராவுக்கு எதிராக நடத்திய போர், யாழ்ப்பாணத் தமிழர்களின் விடுதலைக்கான முதலாவது ஆயுதப் போர் என்னும் தகுதியைக் கொண்டிருந்தது. அந்தப் போரில் அவன் வெற்றியடைந்திருந்தால் மீண்டும் அங்கே மன்னர் ஆட்சிதான் ஏற்பட்டிருக்கக் கூடும். என்றால் கூட, சாமானிய குலத்தைச் சேர்ந்த ஒருவன், மாமன்னர்களை எதிர்ப்பது மாவீரன் நெப்போலியன் காலம்வரை ஐரோப்பியாவிலேயே நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. நெப்போலியன் பிறப்பதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் பிறந்த வருண குலத்தான், அக் காலகட்டத்தில் மிகப் பெரிய காலனித்துவ பேரரசுகளில் ஒன்றாக இருந்த போர்த்துக்கேய அரசை எதிர்த்துப் போரிட்ட செயல் மிகப் பெரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

ஆனால் துரதிஷ்டவசமாக குறுகிய சாதிய நலன்களை அடிப்படையாக வைத்து யாழ்ப்பாண வரலாற்றை எழுதிய தமிழ் வரலாற்றாசிரியர்களால் இவனது இந்த வீர வரலாறு பத்தோடு பதினொன்றாக முக்கியமற்ற ஒன்றாக மறைக்கப்பட்டுவிட்டது.

**ஒலிவேராவின் படைகள் பீரங்கிக் குண்டுகளையும், துப்பாக்கி வேட்டுக்களையும், இடையறாது நெருப்பாகப் பொழிந்தபோதும், வருண குலத்தானின் தலைமையிலான தமிழர் படை, ஆக்ரோஷமாகப் போரிட்டது.**

- நக்கீரன்

## சிறுகதை

# ஜாலம்

முரளி 'விசுக்' என உள்ளே நுழைந்தான். தமயந்தி மீனை வாசித்துக் கொண்டிருந்தாள். பார்க்கையில், நவீன மகளின் ஒன்றில் வந்த 'மொடேர்ண் ஆர்ட்' அட்டைபோல் இருக்கிறதே' என எண்ணிக் கொண்டு ஹோலைக் கடந்தான்.

காலடி ஓசையிலிருந்து அவன் வருகையை தெரிந்து கொண்ட பிரபா அறைக்குள் இருந்தபடியே கேட்டாள் 'அண்ணா! நேற்று என்ர பிளவுஸ் டெயிலரிடம் வாங்கி வந்நீர்களோ?.'

ஓஹோ! மறந்து போய்விட்டன்; இவளுக்குப் பதில் சொல்லி மாளாது.

நேரே சமையல் அறையை நோக்கி விரைந்து போனான். அம்மா அங்கே இல்லை. அப்படியே பின்புறக்கதவால் வெளியே போய், கராஜைச் சுற்றிக் கொண்டு மறுபடி முன்புறம் வந்து, கேட்டைத்தாண்டி வெளியேறினான்.

வாய்க்குள்ளே யாரையோ சபித்துக் கொண்டே போனான். பிரபாவை இல்லை. யாரை எண்டு அவனுக்கே தெரியவில்லை. இன்று காரியாலயத்துக்கு இல்லை. ஆயினும் அதே வழி. அதே நேரம்.

சந்தியைத்தாண்டி நேரே நடக்கையில், 'பிறிஸ்டல் சிகரட் வான்' அவனைத் தாண்டிச் சென்றது; இறைச்சிக் கடைக்கு, கொன்ற உடலைச் சுமந்து செல்கிற லாரி முன்னே போய்க்கொண்டிருக்கிறது. அதிலிருந்து சொட்டுச் சொட்டாய் இரத்தம் வீதியில் ஒழுகுகிறது. 'பாக்டரி' யில் வேலை செய்கிற இளம் பெண்கள் இரைந்து கொண்டே விரைந்து நடக்கிறார்கள்.

அவன் சலிப்புற்றான்.

பாதையை மாற்றிக் கொள்ளலாமா என்று நினைக்கையில், ஒரு பிரேத ஊர்வலம் எதிரே வந்து கொண்டிருப்பது தெரிகிறது.

போதை ஏறிய ஒருவர் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று உரக்கப் பிரகடனம் செய்து கொண்டு வந்தார். வேட்டியின் கீழ்க்கரை நுனி வலது கையில்; இடது கை வீசி வருகிறது; நிமிர்ந்த நன்னடை!

அவர் பின்னே இன்னொருவர். இவர் குரலுக்கிடையில் அவரும் சில சமயம்சேர்ந்து கொள்கிறார்.

'றேமண்ட்' கறுப்புக்கார் ஒன்று ஊர்ந்து வருகிறது. காரின் பின்னால் ஒருவர் உறி மாதிரி சிறிய ஊஞ்சலில் ஒரு சட்டியில் எதையோ எடுத்துப் போனார். அதை அவர் 'ஹாண்ட் பாக்' மாதிரி ஆட்டிக் கொண்டே போனார்.

'இறந்து போனவருக்கு தருமக் கொள்ளி ' முரளியின் வியப்புற்ற முகத்தைப் பார்த்து ஒருவர் தலையாட்டிக் கொண்டே சொல்லிப் போனார்.

ஓஹோ! ஆஸ்பத்திரியில் உயிரை விட்ட அநாதைப் பிணம்.

ஆணா? பெண்ணா?

என்ன வருத்தம்?

உற்றார் உறவினர் யாருமே கிடையாதா?

அருகே வந்து, காரைக் கடக்கையில் உள்ளே பார்த்தான். மூடப்பட்ட பிரேதப் பெட்டி!

மனதில் அநுதாபம் சுரக்கிற மாதிரி இல்லை.

பரவாயில்லை: வாழ்கிறதுக்குச் சாவது எவ்வளவோ மேல்தான்!

திடீரென்று பெரிது பெரிதாய் மழைத்தூறல் விழ ஆரம்பிக்கிறது.

காசுக்குத் தேவாரம் பாடியவர்கள் நடையைத் துரிதப் படுத்துகிறார்கள்.

கொஞ்ச நேரத்தில் மறுபடி வெயில்.

என்ன மழை இது?

டெய்லரின் கடைக்குப் போகிற உத்தேசம் எதுவும் இல்லை. சேரும் இடம் குறிப்பாய் எது என்றும் இல்லை.

நடை.

தந்திக் கம்பத்தின் ஒடுங்கிய நீண்ட நிழலில் இரண்டு பறவைகள் ஒன்றன் பின் ஒன்றாய் உட்கார்ந்திருக்கின்றன.

என்ன பறவைகள் இவை, பிறவுண் நிறத்தில்?

முன்னே இருப்பது மற்றதைத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. எதற்கோ காத்திருக்கிற மாதிரி.

நான் போன பிறகு அவை முத்தமிட்டுக் கொள்ளப் போகின்றன.

ஓ... அவைதான் பறவைகள் ஆச்சே!

...பிறீ லவ்

காத்திருப்பானேன்? இப்போ என்எதிரிலே கூட.....

'த் சொ' இந்த மனிதர்கள் தான்...

சுஜி என் அருகே அவ்வளவு நெருக்கத்தில் இருந்தாள்.

படம் பார்க்க வேண்டும் என்று யாருக்கு இருந்தது?

சத்தியமாய் திரை ஒரு வெள்ளை!

சுஜி கன்னத்தோடு கொஞ்சம் ரோஜாவும் அதுவுமாய்... எனக்குக் கதைக்கிற 'மூடே' இல்லை.

அவ தன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டிருந்தா.

இருவருமாக நோர்த் இண்டியாவுக்குப் போகவேண்டுமாம்; குதுப்மினார் உச்சிக்கு ஏற வேண்டுமாம்; யமுனைக்கரையில் உலாவ வேண்டுமாம்; காஷ்மீர் ஏரியில் படகு வீட்டில்... -

'ச்சை! நீ தனியாய் போயப் பார்த்துக் கொள்' என்று எரிச்சலோடு சொன்னேன்.

அவள் அதன் பிறகு பேச்சை நிறுத்திவிட்டாள்.

மனம் நொந்துபோய் இருப்பாளாய் இருக்கும்.

ஆனால் காட்டிக் கொள்ள மாட்டாள்.

கண்ணில் துளிநீர் தேங்கிப் பார்த்ததில்லை.

சரியான மண்டைக் கர்வம்.

பொம்மைபோல் இருந்தாள்.

கொஞ்சம் இருந்து விட்டு, கோபத்தின் சாயலே இல்லாமல் பேசுவாள் - ஏதோ உலகத்தையே உத்தாரணம் செய்யப் பிறந்தவ மாதிரித்தான்!

இந்தக் கர்வம் என் காலடியில் கிடக்குமானால் எவ்வளவு இன்றஸ்டிங்?

காமெலாவைப்பற்றி இவளுக்குத் தெரியாது. சில சமயங்களில் அவளைப்பற்றி இவளுக்கு சொல்லி இவள் எரிந்து விழுவதைப் பார்க்க வேண்டும் என்று இருக்கும்.

சுஜிக்கு முன்னே அவள்தான்.

அவளை விட்டுவிட வேண்டும். என்று எனக்குத் தோன்றிப் போனதற்குக் காரணமே அவள் எனக்கு மிக நெருங்கி வந்துவிட்டதுதான்.

என் 'பெர்சனாலிட்டி'யே அப்படி 'வெரி கலன்ற்'

சுஜியோ எனக்கொரு சவால்.

சுஜியை இந்த அளவுக்குக் கொண்டுவர நான் நிறைய வாக்குறுதிகள் கொடுக்க வேண்டியிருந்தது. நான் யாருக்கும் வாக்குறுதிகள் கொடுத்ததில்லை. காமெலா, அவளுக்கு முன்னே ராணி, அவளுக்கு முன்னே... வாக்குறுதி கொடுத்தால் கட்டாயம் காப்பாற்ற வேண்டும் - வாக்குறுதி கொடுக்காமலே வெல்லத் தெரியாமைக்குத் தண்டனையாக.

எத்தனையோ கெட்ட பழக்கங்கள் என்னிடமிருப்பதை இவள் அறிவாள்; ஆயினும் நான் பொய் சொல்ல மாட்டேன் என்பதை நம்பினாள்.

இது உண்மைதான்.

சில உண்மைகளை சொல்லாமல் - சொல்ல நேரமில்லாமல் - பார்த்துக் கொண்டதுண்டு. பொய் சொன்னதில்லை.

ஏன் சொல்ல வேண்டும்?

சுஜி வெறுத்துவிட்டால் பெண்களா இல்லை?

புது டைப்பிஸ்ட் 'விலாசினி' ஜோராய் இருக்கிறாள். 'இருக்கட்டுமே' என்கிறது ஒரு மனம்.

உண்மையில், இவளோடு பழகத் தொடங்கி மூன்று வருடங்கள் ஆகின்றன. யாரும் இவ்வளவு காலம் நிலைத்ததில்லை.

இன்னும், இவளைப் பெறமுடியவில்லை என்பதால்தானோ என்னவோ, இழக்கவும் முடியவில்லை!

சுஜி என்னைக் காதலிக்கிறாள் தானா என்று இருந்தாற் போல் சந்தேகம் எழும்.'

ஒரு நாள் சுஜி கேட்டாள் - 'பாரதியார் எழுதிய பாம்புகளின் கதை தெரியுமோ' என்று.

பிறகுதானே சொன்னாள் 'இரண்டு பாம்புகளும் சடண்டையிட்டுக் கொண்டன - ஆண்பாம்பும் பெண்பாம்பும்.

நான் உன்னை வெறுக்கிறேன்!

நான் உன்னைப் பகைக்கிறேன்!

நான் உன்னைக் கொல்லப் போகிறேன்.

நான் உன்னைக் கொல்லப் போகிறேன்!

இரண்டும் ஒன்றை ஒன்று கடித்துக் கொண்டு இறந்து விட்டன.'

'சரி; தெரிகிறது. விசயத்துக்கு வா.'

இரண்டு அறிவு ஜீவிகள் தாம்பத்தியத்தில் ஒன்று சேர்ந்தால் இவற்றைப் போலத்தானோ...?'

'.....'

'ஒரு அனுபவத்துக்காகவே குடிப்பதாய் நீங்கள் சொல்லுகிறீர்கள். பிறகு விட்டுவிடுவீர்கள். ஒரு அனுபவத்துக்காகவே நானும் காதலிக்கிறேன். பிறகு விட்டுவிடுவேன். உங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றுங்கள். என்று நான் கேட்கவில்லை. மறந்துவிடுங்கள். அதுவே உங்களுக்கும் சௌகரியம்.'

நான் நிமிர்ந்து பார்க்கையில், கண்ணைச் சிமிட்டிக் கொண்டு சிரிக்கிறாள்!

பழிகாரி! பகிடிபோல் சொல்வதெல்லாம் நிஜங்கள் தானோ?

எனக்கு அவள் குரல்வளையை நெரித்துக் கொன்றுவிடலாம் என்றிருந்தது.

பதிலாய், என் கைகளை அவள் தோளுக்கு மேலாய்ச் சேர்த்து அவளை என்னுடன் அணைத்துக் கொண்டேன்.

அவள் திணறினாள்.

என் கைகளைத் தளர்த்திவிட்டு அவள் சொன்னாள். 'எனக்குள்ளே ஒரு தபஸ்வினி இருக்கிறாள். எதன் மீதும் பற்றில்லை. பொருட்கள் விஷயங்கள் எல்லாம் விரைவாகச் சலித்துவிடுகின்றன. எனக்கு என்மீதே பயமாய் இருக்கு - பைத்தியமாய்ப் போய்விடுவேனோ என்று. எதையாவது தீவிரமாக விரும்பி, ஆசைப்பட்டு, இந்த உலகத்தோடு ஒட்டிக் கொள்ள வேண்டும் போலத் தவிக்கிறேன். உங்களுக்கு விளங்குதா?'

நான் சுஜியை உற்றுப் பார்த்தேன்.

இவை சுஜி சொல்கிற வார்த்தைகளா?

எனக்குள்ளே இருப்பவை.

இவள் எனக்குள்ளேயே புகுந்திருக்கிறாளா? நேற்று ஒரு கால் வினாடியிலும் பாதி வினாடியில், உணர்ச்சி வசமாய் நான் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

'சுஜி, நானேதான் நீயா? நீயே நானோ?' என்னுடைய உணர்ச்சிப் போதை சிதற அவள் என்னிலிருந்து பிரிந்தாள்.

சிரித்துக் கொண்டே 'நீங்கள், நீங்கள்தான். நான், நான்தான். இதோ, இந்தக் குறிப்பிட்ட பாட்டைக் கேட்கிறபோது எனக்கு ஒரு ஸ்போர்ட்ஸ் மீட், கிறீன் கலர் மாஷ்மெலோஸ். கை முறிந்த பத்து வயசுப் பையன் எல்லாம் ஞாபகத்திற்கு வருகின்றன. உங்களுக்கும் அப்படியா? எவ்வளவுதான் காதலித்தாலும் இணைந்துவிட வேண்டுமாய்த் தவியாய்த் தவித்தாலும், இந்த உலகில், தனியாய் பிறப்பிக்கப்படுகிற ஜீவன் ஒன்று. எப்பவும் தனியே தனிதான். இல்லையா?'

ஆமோதிப்பு வேறா?

எனக்குத் தாங்கவில்லை.

'சுஜி, நீ என்னை நேசிக்கவில்லை.'

வெறியோடு கத்தினேன்.

'என்னை விரும்புகிறீர்கள்? நேசிக்க வேண்டுமா?'

'இது ஒரு பெண் கேட்கிற கேள்வியா?'

'ஓ! என்ன கேட்பார்கள் பெண்கள்? கடைசிவரை கைவிட்டு விடாதீர்கள் என்று கேட்பார்கள். அதுவும் கடைசியில் தான் கேட்பார்கள். கைவிட்டு விடுவீர்கள். நிஜமாய்ச் சொல்லுங்கள். மது, எல்.எஸ்.டி மாத்திரை, மாரிஜுவானா, பெண், எல்லாவற்றுக்குமே ஒரே அர்த்தம் தானா உங்கள் அகராதியில்?'

'ஓ! திஸ் இஸ் டு மச்! சுஜி விலகுகிறாள்' உணர்ச்சியில் என் முழு மேனியும் ஆடுகிறது.

இவள்... இவளை... அப்படியே...!

அவள் பட்டுப்போன்ற உச்சியில் என் அதரங்கள் அழுத்தின.

சுஜி உதறினாள்.

என்னையும் ஒருத்தி உதறுகிறாள்....!

எனக்கு ஆவேசம் உண்டாயிற்று.

'சுஜி! என்னை நம்பு. அப்பா இறந்துபோய் இன்னும் ஒரு வருடம் ஆகவில்லை. ஆன மறுநாளே நம் கல்யாணம் நடக்கும். இது சத்தியம்.'

இதுவரை யாருக்கும் செய்யாதது - சுஜிக்கும் கூட.

அவள் இமைகளை மலர்த்தி மெதுவாகப் புன்னகைத்தாள்.

அதில், ஆயிரம் மலர்களின் விஹஸிதம்.

நான்-

நடுங்கினேன்!



**கவிதா**

நன்றி: 'யுகங்கள் கணக்கல்ல'

# கோஸ்டா காவ்ரஸ்: அரசியல் இயக்குனர்

*(முரசு 83-ன் தொடர்ச்சி)*

காவ்ரஸின் இரண்டு படங்களையும் இதே பிரச்சனைகளைக் கையாண்ட பிற படங்களுடன் வைத்துப் பேசும்போதுதான் அவரது தனித்துவம் தெரியவரும்.

இலத்தீன் அமெரிக்க நாடுகள் பற்றியும் அமெரிககாவில் நிலவும் நிறவெறி அரசியல் பற்றியும் நிறையப் படங்கள் வெளியாகியுள்ளன.



கோஸ்ரா காவ்ரஸ்

இலத்தீன் அமெரிக்க அரசியல் கொந்தளிப்புகள் பற்றிய படங்களாவன;

1) ஜீனே ஹெக்மேன் நிக நோல்டே நடித்த UNDER FIRE; நிகரகுவா பற்றிய படம்

2) ஒலிவர் ஸ்டோன் இயக்கிய SALVADOR; எல்சல்வடோர் கெரில்லாக்கள் பற்றியது.

3) ஓமர் ஸெரீப் நடித்த CHE GUVERA; இலத்தீன் அமெரிக்கப் புரட்சியாளன் சே குவேரா பற்றிய படம்.

அமெரிக்க இனவெறி இனக் கொலை பற்றிய படங்களாவன,

1) வில்லியம் டோபே ஜீனே ஹெக்மேன் நடித்த MISSISIPI BURNING; மனித உரிமைக் கொலை பற்றியது.

2) கறுப்பு இயக்குனர் ஒருவரின் சாதனைப் படமான MISSISIPI MURDER; சிவில் உரிமைப் போர் பற்றியது

UNDER FIRE மற்றும் SALVADOR படங்கள் இலத்தீனமெரிக்க நாடுகள், இராணுவ ஆட்சிகள், அரசியல் கொலைகள் போன்றவற்றின் இடையில் சிக்குப்பட்ட மூன்று பத்திரிகையாளர்கள் பற்றியவை. UNDER FIRE படம் நிக்கரகுவா புரட்சி வெற்றியின் இறுதி நாட்களில் நிலவுகிறது. இரண்டு பத்திரிகையாளர்கள், அவர்களது தோழி. கதைப்படி பாதிரியொருவர் கொலை செய்யப்படுகின்றார். பத்திரிகையாளர் ஒருவர் கொலை செய்யப்படுகின்றார். வீதியெங்கும் புகை மண்டலத்துக்குள் நடமாடும் இராணுவ வாகனங்கள். பத்திரிகையாளர்களின் நோக்கம் பிரதானமாக போர்க் காட்சிகளை குரூரத்தைப் படமெடுப்பதுதான். இந்தப் படங்களை இந்த நோக்கத்துக்காக எங்கேயும் எடுக்கலாம். பொஸ்னியா, ருவண்டா, இந்தியா, ஈழம் என எங்கேயும். நிக்கரகுவாவில் எடுக்கப்பட்டதற்கான குறிப்பான அரசியல் உரையாடல்களையோ முக்கியத்துவத்தையோ இப் படம் கொண்டிருக்கவில்லை.

பத்திரிகையாளர்களின் திடசித்தமும் சாகசமும் இழக்கும் மனப்பான்மையுமே படத்தில் உக்கிரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அமெரிக்க இராணுவ அதிகாரிகள், ஆட்சியில் உள்ள இராணுவத்தோடு சேர்ந்து புரட்சியாளர்களோடு மோதுவதை சில காட்சிகள் சொல்லுகின்றன. பல்வேறு இரத்தச் சிந்துதல்கள், இராணுவத்தின் துரத்தல்கள், இவற்றுக்கிடையில் ஒரு பத்திரிகையாளனும் சக பெண் தோழியும் இறுதியில் ஒன்று சேர்கிறார்கள். சான்டினிஸ்டாக்கள் வெற்றிபெற்று விட்டார்கள். அவர்களின் எக்காள ஊர்வலத்தில் கூட்டத்தோடு கூட்டமாக ஒருவனை இருவர் சந்திக்கிறார்கள். அவன், முன்னொரு நாள் சொமசா இராணுவத்தோடு சேர்ந்து நிகரகுவாப் புரட்சியை ஒடுக்கிய அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்தவன்.

இப்படம் நிக்கரகுவா புரட்சி பற்றிய ஒரு அரசியல் ரீதியான படம் என்பதற்கு மாறாக, பத்திரிகையாளர்களின் சாகசம் தியாக சிந்தை பற்றிய படம் என்றே சொல்லப்பட வேண்டும்.

ஒலிவர் ஸ்டோனின் எல்சல்வடோர் படமும் ஒரு அமெரிக்கப் பத்திரிகையாளன் பற்றியதுதான். UNDER FIRE படத்துடன் ஒப்பிடும்போது நிறைய அரசியல் விவாதங்களைக் கொண்டிருக்கிறது. அமெரிக்க அரசுக்கும் எதிர்ப் புரட்சி சக்திகளுக்கும் ஒடுக்குமுறை இராணுவத்துக்கும் இருக்கும் உறவு நேரடியாக விவாதிக்கப்படுகிறது. அமெரிக்க அரசின் இலத்தீன் அமெரிக்கத் தலையீடு, இராணுவ ஆட்சிக்கு ஆதரவுவழங்க முற்படும் அதே பொழுது, ஒரு தாராளவாத மனிதாபிமானியின் பார்வையிலிருந்து எல்சல்வடோர் கெரில்லாக்கள் சவிரக்கமற்று சந்தேகிப்பவர்களைச் சுட்டுக் கொல்வது பற்றிய கேள்வியையும் எழுப்புகிறது. அமெரிக்கப் பத்திரிகையாளன் மற்றும் எல்சல்வடோர் பெண்ணுக்கும் இருக்கும் பாலுறவும் அன்பும் படத்தில் முக்கியமான பிரச்சனையாகிறது. அமெரிக்காவுக்கு அப் பெண்ணுடன் திரும்ப வரும் பத்திரிகையாளன், பஸ்ஸில் இடை மறிக்கப்பட்டு பலவந்தமாக குழந்தையுடன் வரும் பெண் இறக்கி விடப்படுகிறாள். நிராதவரான பெண்களையும் குழந்தைகளையும் ஏற்க மறுக்கும் அமெரிக்க அரசு, எல்சல்வடோர் கெரில்லாக்களை ஒடுக்க இராணுவ எதேச்சாதிகாரத்துக்கு உதவி செய்கின்றது. இத்தகைய விமர்சனங்களை காட்சிவழி சொல்லிச் செல்கிறது ஸால்வடோர்.

**நிராதவரான பெண்களையும் குழந்தைகளையும் ஏற்க மறுக்கும் அமெரிக்க அரசு, எல்சல்வடோர் கெரில்லாக்களை ஒடுக்க இராணுவ எதேச்சாதிகாரத்துக்கு உதவி செய்கின்றது. இத்தகைய விமர்சனங்களை காட்சிவழி சொல்லிச் செல்கிறது ஸால்வடோர்.**

ஸால்வடோர் படம் பத்திரிகையாளனின் சாகசம், தியாக சிந்தையோடு இலத்தீனமெரிக்க அரசியலையும் இணைப்பதால் இப்படம் இன்றளவும் பேசப்படும் படமாக உள்ளது.

ஓமர் ஷெரீப் நடித்த கியூபப் புரட்சி / பொலிவிய கெரில்லா யுத்தம் பற்றிய படம் CHE GUERA கியூபப் புரட்சியின்



வில்லியம் டவோய்

இறுதி நாட்களில் தொடங்கும் இப் படம் சே குவேராவின் மரணத்துடன் நிறைவு பெறுகிறது.

ஐந்து காட்சிகளைச் சுற்றியே படம் கட்டமைக்கப்படுகின்றது.

1) கரும்புத் தோட்டங்களினூடே ஹவானாவை அடையும் கனத்த சட்டைகள் பூட்சுகள் அணிந்த கெரில்லாக்கள் பிடலின் தலைமையில் ஹவானாவைக் கைப்பற்றி வாகன முகப்பில் அமர்ந்தபடி ஊர்வலம் போகிறார்கள்.

2) சாதாரண சட்டை துணிமணிகளில் இருக்கும் இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக ஏற்றிச் செல்லப்பட்டு, பிரமாண்டமான கற்கோட்டை ஒன்றினுள் அழைத்துச் செல்லப்பட்டு சுவரோடு சேர்த்து நிறுத்தப்பட்டு புதிய கியூபப் புரட்சியாளர்களால் நூற்றுக்கணக்கில் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

எதிர்ப் புரட்சியாளர்கள் என சுட்டுக் கொல்லப்படும் 'சாதாரண இளைஞர்கள்' இவர்களென காட்டப்படும் காட்சி அது. ஒவ்வொரு காட்சிகளிலும் இடைவெட்டி சமகாலத்தில் காண்பிக்கப்படுகிறது. இக் கற் கோட்டைக்குள் சேகு



சால்வடோர் படத்தில் ஒரு காட்சி

வேரா நுழைந்து ஆஸ்மாவில் அவஸ்தைப்படுவதும் அக் காட்சி.

3) குவேராவுக்கும் பிடல் கஸ்ரோவுக்கும் இடையிலான உரையாடல். தூங்கிய கண்களுடன் குடித்துக் குடித்து வெறியோடு பிடல் காஸ்ரோ அமைதியற்று வந்துகொண்டிருக்கிறார். புரட்சி, சோவியத்யூனியன், பொலிவியா பற்றி நீண்ட உரையாடல். குவேரா பிடலைக் கடுமையாகப் பேசிவிட்டு அறையைவிட்டு வெளியேறுகிறார்.

4) பொலிவியாவில் சேகுவேரா முரண்படும் தோழர்களை உடனடியாகச் சுட்டுக் கொல்கின்றார். நீண்டதும் கடினமானதுமான காட்டுவழிப் பயணங்கள். ஆஸ்த்மா. மரத்தில் கட்டிய ஊஞ்சலில் குவேரா. சகிப்புத்தன்மையற்ற உரத்த குரலிலான விவாதங்கள்.

கிராம மக்களின் கோழி, ரொட்டியைத் திருடுகிறார்கள். பெண்களைப் பலவந்தமாக நடத்துகிறார்கள். கிராமமக்களுக்கும் அவர்களுக்குமான உறவு வன்முறையின் மூலம் காட்டப்படுகிறது.

5) குவேராவின் இருப்பிடம் கண்டுபிடிக்கப்படுகின்றது. நீண்ட சமர். அடிபட்டு சேகுவேரா பொலிவிய இராணுவத்திடம் பிடிபடுகின்றார். கிராமப் பள்ளிக்கூடத்தில் உரையாடல். குவேராவின் திடசித்தம். அடுத்த அறைக்குக் கொண்டு செல்லப்பட்டு மூடிய கதவின் பின் தீர்க்கப்படும் துப்பாக்கி வேட்டுக்கள்.

நீண்ட மரக் கட்டிலில் மரணமுற்ற நிலையில் சேகுவேரா.

படத்தின் முதல் காட்சியில் கிராமப் பள்ளிக்கூடத்தின் அறையொன்றில் இருந்து வெளியில் எடுக்கப்படும் குவேராவின் உடல். இடையிடையே நீண்டு உயர்ந்த பொலிவிய மலைத் தொடர்களின் மேலே செல்லும் ஹெலிகாப்டரின் கீழ் சேர்த்துக் கட்டப்பட்ட சேகுவேராவின் உடலைச் சுமந்த கட்டில். இறுதிக் காட்சியில் ஹெலிகாப்டரில் ஏற்றப்படும் சேகுவேராவின் உடல்.

இப் படம் முழுக்கவும் கியூபப் புரட்சி பற்றிய எதிர்மறையான சித்திரம்.

1) அப்பாவி மக்களை கொன்று நிலைநாட்டப்பட்ட புரட்சி.

2) குடிகாரன் பிடல்.

3) பிடலுக்கும் சேகுவேராவுக்கும் இடையிலான கருத்து முரண்பாடே சே பொலிவியா செல்லக் காரணமாயிருந்தது.

4) குவேரா சவிரக்கம் அற்ற கொலைகாரன்.

5) கிராம மக்களை வன்முறையில் அடக்கியவர் குவேரா.

படத்தில் காட்டப்படாத ஆனால் இன்றளவும் நிலவும் இலத்தீனமெரிக்க யதார்த்தம் இரண்டு.

1) அக் கண்டம் முழுக்கப் போராடும் மனிதர்களின் ஆதர்சம் குவேரா.

2) இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தின் குவேராவின் உடல் புதைக்கப்பட்டதை தோண்ட முயற்சி நடந்தபோது, ஒடுக்கப்பட்ட மக்கள் தமது 'இயேசு கிறிஸ்துவைக்காண' ஆயிரக்கணக்கில் திரண்டனர்.

ஆக, இலத்தீனமெரிக்கா பற்றிய மூன்று அமெரிக்கப் படங்களிலும் இலத்தீனமெரிக்காவில் நிலவும் அரசியல் பற்றி அதன் ஸ்தூலமான பிரச்சனைகள் பற்றிப் பேசப்படவில்லை. சேகு

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)

## கோஸ்டா காவ்ரஸ்:.....

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

வேரா பற்றிய படம் முழுக்கவும் பொய்களும் புனையுரைகளும் நிறைந்த அயோக்கியத்தனமான படம்.

இச் சூழலில்தான் காவ்ரஸின் MISSINA படம் வெளியாகிறது. இப் படம் பத்திரிகையாளன் என்ற சிறப்புத் துறை சார்ந்த வன் பற்றியதல்ல. புரட்சியைப் பற்றிய எதிர்மறைக் கண் ணோட்டம் கொண்ட படமும் அல்ல. மாறாக இப் படம் சிலி யின் இராணுவ ஆட்சிக்கு ஆத ரவான அமெரிக்காவின் தலை யீட்டையும் அதனது பொய் யான கருத்துக்களையும் நேரடி யாக விமர்சிக்கிறது. புரட்சிக் குச் சார்பான பத்திரிகையாளன் அவனது தோழி போன்றோர் பற்றிய பரிவுணர்ச்சியையும் ஏற் படுத்துகிறது.

இப் படத்தின் மிக மிக முக் கியமான அம்சம், நமது நாட்டுச் சூழல்களில் படமெடுப்பவர்கள் அதிகம் அவதானிக்கத்தக்கது. இப் படம் வெளிப்படையாக நிலவும் வெகு சாதாரணப் பிரச்சினைகளை அனுபவம் கொள்ளும் சாதாரண மனிதர் கலது கண்ணோட்டத்திலிருந்து அரசியலைப் பார்க்கிறது.

MISSINA படததில் வரும் தந்தையின் பாத்திரம் வெகு சாதாரணமான அமெரிக்கப் பிரஜையின் மனோவியலைப் பிரதிநிதித்துவப்படுத்துபவை. அமெரிக்க தேசபக்தி, அமைப்பு மீதான நம்பிக்கை போன்றவை அவர் எதிர்கொள்ளும் அனுப வங்கள் மூலமே தகர்ந்து போகின் றது. பிரச்சனையின் ஊடே அவரது பயணத்தின் உடன் பயணிகளாகவே பார்வையா ளர்கள் அழைத்துச் செல்லப்ப டுகின்றார்கள். அமெரிக்க அரசு பற்றிய கோபமான விமர்சனம் போராளிகள் பற்றிய பரிவான உணர்ச்சி போன்றவற்றிலிருந்து இப் படத்தின் பார்வையாளன் தப்ப முடியாது.



ஜென் ஹக்மான்

அமெரிக்க நிறவெறி / இன வெறி பற்றிய ஒரு படத்தை பிரிட்டிஷ் இயக்குனர் அலன் பார்க்கர் (Missisipi Burning) இயக்கியிருக்கிறார். மற்றொரு படத்தை கறுப்பு இயக்குனர் எடுத்திருக்கிறார். இரண்டு படங் களிலும் இனவெறி அரசியல் பற்றிய வரலாற்று ரீதியிலான புரட்டையே படமாக்கியிருக் கின்றன.

அமெரிக்காவின் மிசிசிப்பி மாநிலத்தில் சில கறுப்பின அமெ ரிக்க மனித உரிமையாளர்கள் காணாமற்போய்விடுகிறார்கள். அவர்களை இடையில் வழிம றித்த சில முகமூடிக்காரர்கள் அவர்களைச் சுட்டுக் கொன்று வீதியில் வீசிவிட்டுப்போன காட்சிகள் வருகின்றது.

மிஸிஸிப்பி மாநிலத்தின் கறுப்புத் தேவாலயங்கள் ஆபி ரிக்க மக்களின் குடியிருப்புக்கள் தீவைத்துக் கொழுத்தப்படுகின்



ஒலிவர் ஸ்ரோன்

றன. பெண்களும் குழந்தைக ளும் வெட்டிக் கொல்லப்படு கின்றார்கள். எங்கும் வெள்ளை நிறவெறியின் கோரத் தாண்ட வம்.

இக் கொலைகளின் கார ணத்தைக் கண்டுபிடிக்கவும் கறுப்பு மனித உரிமையாளர்க ளின் கொலைகாரர்களை இனங் காணவும் இரண்டு FBI (Federal Bureu of Investigation) அதிகாரி கள் மிஸிஸிப்பி மாநிலம் வருகி றார்கள். மிகுந்த சிரத்தையுடன் சாகசங்களை மேற்கொள்ளும் அவர்கள் கொலைக்கான கார ணகர்த்தாக்களாக உள்ளூர் போலீஸ்காரர்களைக் கூண் டோடு கைது செய்கிறார்கள்.

Uutainking Eunxcetion என்று சமீபத்தில் வெளியாகியிருக்கும் ஒரு புத்தகம் அமெரிக்க சினி மாககளில் செய்யப்படும் வர லாற்றுப் புரட்டுக்கள் பற்றி ஆய்வு செய்கிறது. மிஸிஸிப்பி மாநிலத்தின் பல்வேறு கொலை களுக்கும் மனித உரிமைக் கொலைகளுக்கும் காரணகர்த் தாக்களாக இருந்தவர்கள், கல வரங்களைத் தூண்டியவர்கள் FBI சார்ந்தவர்கள். மார்ட்டின் லூதர் கிங், மால்கம் எ போன் றோரின் கொலைகளுக்குப் பின் னால் இருந்தவர்களும் அவர் களே. வெள்ளை இனவெறி அர சியல்வாதிகள் அதிகாரவர்க்கம் FBI புலனாய்வுத்துறை இவர்க ளுக்கிடையிலான உறவே கொலைகளுக்கான காரணம் என்பது வரலாறு. இந் நிலை யில் Missisipi Burning படம் ஒரு வரலாற்று மோசடி எனப் பேசுகிறது இப் புத்தகம்.

Missisipi Murder படம் கறுப்பு அமெரிக்கர்களின் சாத் வீக அரசியலும், சில மனிதாபி மான வெள்ளையர்களின் உறு தியான கறுப்பின ஆதரவுப் போராட்டமுமே கறுப்பர்க ளுக்கு அமெரிக்கக் குடிமகனின் உரிமைகளையும் ஓட்டுரிமை யையும் வாங்கித் தந்தது என் கிற நிலைப்பாட்டை முன்வைக் கிறது. இறுதிக் காட்சி வரிசை யாக நிறுத்தப்பட்டிருக்கும் கார் முன்பக்கத்தில் கறுப்புரிமை தூண்டுப் பிரசுரம் சொருகும் காட்சியுடன் நிறைவுபெறுகிறது.

கறுப்பர்களுக்குள் இருக்கும் இத்தகைய மனநிலையைத் தான் 'கறுப்புத் தோல் வெள்ளை முகமூடிகள்' (Black skin White masks) என இனம் காண்கிறார் பிரான்ஸ் பெனான். இத்தகைய வர்களைப் பற்றிய விமர்சனத் தைத்தான் ஹெயிலே ஜெரீமா தனது Sankofa படத்தில் மேற் கொள்கிறார். Missisipi Murder படத்தில் பேசப்படும் சாத்வீக அரசியலைப் பற்றிய விமர்சனங் களுக்கு மிகச் சிறந்த உதார ணம் மேற்சொன்ன இரண்டு கறுப்புக் கலகக்காரர்கள் எழுத் துக்கள்.

இத்தகையதொரு பொய் யான அரசியல் அதன் மீதான தீவிர விமர்சனம் எனும் நோக் கிலிருந்து காவ்ரஸின் Betrayed படத்தைப் பார்க்க வேண்டும்.

வெள்ளை நிறவெறி உருவாக் குவதற்கான கிராமப் பொருளி யல் சமூக அடிமைத்தனம் பற் றிய ஆய்வு. அரசியல்வாதிகள், FBI அதிகாரவர்க்கம், அரசாங் கம் போன்றோர்களுக்கிடையில் நிலவும் தீவிரமான இனவெறி உறவு போன்றவற்றைப் படம் ஆழ் தளத்தில் சென்று ஆய்வு செய்கிறது. இப் படத்தில் கறுப் புப் பாத்திரம் ஒன்றே ஒன்று தான். ஆபிரிக்க மக்கள் மீதான வன்முறையைப் படம் ஆதாரப் பிரச்சினையாக எடுத்துக்கொண் டாலும் கூட அம் மக்கள் மீதான காட்டுமிராண்டித் தன மான வன்முறையை ரசனை அடிப்படையில் காட்சிகளாகக் கொண்டிருக்கவில்லை. மேலும் சாதாரண விவசாயிக் குடிமக் களின் மனநிலை வாழ்நிலை அனுபவத்திலிருந்து இனவெறி அரசியலின் முகத்தைக் காட்டு கிறது படம். பிரச்சினையில் ஈடு பட்ட பெண்ணின் 'உண்மை காண் பயணமாகவே' படம் நிகழ்கிறது. அவள் பெறும் இன வெறி அரசியல் பற்றிய அனு பவத்திலிருந்தும் விமர்சனத்திலி ருந்தும் கோபம், துக்கம் போன் றவற்றிலிருந்தும் உடன்பயணி யான பார்வையாளன் தப்ப முடியாது. இதுவே இப் படத் தின் முக்கியத்துவத்திற்குக் கார ணமாகிறது.

கோஸ்டா காவ்ரஸின் கதை சொல்லும் பாணி (Charrative style) இந்திய / ஈழச் சினிமா சார்ந்தவையே: இரண்டு முக்கி யமான தேர்வுகளைக் கொண் டிருக்கிறது.

1. 'மிகச் சாதாரண மனித அனுபவங்களிலிருந்து மிக ஆழ் ந்த மிகத் தீவிரமான அரசியல் பிரக்ஞை' நோக்கியதாக இவர் படங்கள் அமைகிறது.

2. மிகப் பொதுவான மனி தர்களின் ஜீவனுள்ள வாழ்க்கை உறவுகளின் வழி (living human relationships) பார்வையாளன் பாத்திரங்களின் உடன்பயணி ஆகிறான்.

அரசியல் கொந்தளிப்புக்கள் சிதறுண்ட மனித உறவுகள். பரந்துபட்ட கல்வியறிவின்மை போன்றவை சூழ்ந்த நமது நாடு களில் கோஸ்டா காவ்ரஸின் கதை சொல்லும் பாணியில் இருந்து கற்றுக்கொள்ள நிறைய உண்டு.

கோஸ்டா காவ்ரஸ் துருக் கிய கம்யூனிஸ்ட் புரட்சியா ளன் இல்மஸ் குனேயின் சினி மாவின் மீது ஆழ்ந்த நேசம் கொண்டவர் மட்டுமல்ல அவ ரது நெருங்கிய தோழர் என்ப தையும் இச் சந்தர்ப்பத்தில் மறு படியும் ஞாபகம் கொள்ள விரும்புகிறேன்.

# அரங்கக் கலைஞன் சரத் சந்திர காலமானார்

சிறீலங்காவில் சிங்கள நாட கக் கலையின் முன்னோடி எனக் கூறப்படும் எதிர்வீர சரத்சந்திர சென்ற வாரம் காலமானார்.



லண்டன் பல்கலைக் கழகத் தில் 1949-ல் கலாநிதிப் பட்டம் பெற்ற சரத் சந்திர சிறீலங்கா வில் சிங்கள மேடை நாடகங்க ளுக்கு புத்துயிர் ஊட்டியவர் சிங் கள அரங்கக் கலைகள் நலிவ டைந்து மீட்பாரற்றுக் கிடந்த காலத்தில் அக் கலைக்கு ஒரு புதிய பரிணாமங்களை இணைத்து பரீட்சார்த்த முயற் சிகளை மேற்கொண்டனர். கிராமியக் கலைக்குள் மறைந்து கிடந்த கலாபாவங்களையும் பாரம்பரிய இசை வடிவங்க ளையும் செழுமைப்படுத்தி தமது அரங்க வடிவங்களுக்குள் புகுத்தியவர்.

இவரது 'மனமே' என்ற நாட கத்தின் மூலம் தூங்கிக் கிடந்த சிங்கள நாடகத்துறையை தட்டி எழுப்பி பலரின் பார்வையை யும் சிங்கள நாடகங்கள் நோக்கி திருப்புவித்த பெருமை அரங்கக் கலைஞர் சரத்சந்தி ரரையே சாரும்.

## உயிர்த்துணை

**இளந்திரையன்**

நிழலாயுமல்ல
உயிராய் என்னோடிணைந்து திரிந்து
என்னைப்புரிந்த துணையானாய்

நிகரற்ற
நின் துணையற்று இன்றேதும்
ஆகாதென்றாயிற்று
எனக்கு நீயும், உனக்கு நானுமாய்...
ரவைக்கு ரைபிளாய், ரைபிளுக்கு ரவையாய்...

சுட்டுவிரலசைப்பில்
கொடுமுடியின் படையொடுங்க
சடசடத்துக் கொதிக்கும் உன் தீரதனித்துவம்
எனை அசைக்கும்
உருக்கிரும்பின் உயிரே உனை
இறுகப் பற்றிய அணைப்பிலென்
கனவு மெய்ப்படும்!

கருமையென விரியும் பொழுதொழிய
அனல்பீறி ஒளிரும் உன்
கரிகுழலின் உள்ளிருந்தே
ஒளிபடரும்!

உன் இணைவில் கலந்து
பனையென நிமிர்ந்து
பயன்பல பொழிவதான பெருமை எனக்கு

நின் தொடுகை கொண்ட வாழ்வின் நீட்சியே
எம் அழிதலில்லா இருப்பின் உன்னதம்.

நன்றி: கவிதை

## ஒற்றை மயிரின் சரித்திரம்

– கருணாகரன்

நான் இறந்து போனதாக
என்றோ போய்ச் சொல்வார் ஒருவர்
நான் இறந்து போனேன் தான்
ஞாபகங்கள் சேரத்தொடங்கிய
அந்தநாட்களின் பிறகு நான்
வாழ்ந்ததாக ஞாபகமில்லை இன்னும்
பிறகெல்லாம் துக்கப்படுவதும்
கொந்தளிப்பதுவும் சலிப்பதுவும்
மறந்துபோய்ப் புன்னகைத்துத் திடீரென்று
நாக்கறுபட்டு இறுகிக் கல்லாவதும்
இதுநாள் வரையிலும் ஆகிவருகிறது.
பிணத்தைக் கண்ட பின்னும்
பிணமாகிப் போனபின்னும் கூடத்
தீரமல் பொருமுகிறது நஞ்சுக்கொடி
நஞ்சுக்கொடிக்கு நீர்விட்டுக்கொண்டிருப்பது
அற்றுப்போகும் நாளிலிருந்து
நான் வாழக்கூடும். பிறகு
நான் இருந்து இறந்ததாகவும் சொல்லக்கூடும்.

நன்றி: கவிதை

# யார் போய்ச் சொல்லுவார் – OFPRAவிடம் அகதி 'காட்' தந்த சோதனையை...!

சில பேருக்கு சில சோகங்களை ஆருக்கும் வாய்விட்டுச் சொல்ல முடியாது. ரகசியமா மனசுக்கை கிடந்து மனைஞ்சு மனைஞ்சு பொருமிக்கொண்டு கிடக்கும்.

சாமி வரங்குடுத்தாலும் பூசாரி இடங்குடாதெண்டு, வயசு வரப்பில ஏறி கண்டாயம் தாண்டினதுகள் அடிக்கடி சொல்லுறதுகள். எனக்கும் உது என்னெண்டு கனகாலமா விளங்கேல்லை; ஏதோ சாமி - பூசாரி எண்டு சொல்லக் கேட்டதோடை சரி. இப்ப கிட்டடியில அறிஞ்ச விசயமொண்டுதான் அந்தப் பழமொழியின்ரை சூட்சமத்தை கொஞ்சம் தெளிவாக்கிச்சுது. ஊருக்குப் புருசன் பெண்சாதியாயும் சட்டப்படி இரண்டு பேருக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லாதமாதிரியும், அதை வாய்விட்டு அகதியாப் பதிஞ்ச கந்தோரிலை சொல்ல முடியாமலும் இஞ்சை சில குடும்பங்கள் இருக்குது. பிரான்சிலைதான் இந்த நிலமை எண்டில்லை, அங்கிங்கெனாதபடி அகதித் தமிழன் இருக்கிற நாடெல்லாம் இப்பிடி ஒண்டிரண்டு பேருக்கு சொல்ல முடியாத சோகம் இருக்குதுங்கோ!

அகதியா வெளிநாட்டுக்கு வந்த சிலபேர், எப்பிடியெண்டாலும்- என்னத்தைச் சொல்லியோ - ஆரைச் சாக்காட்டியோ பொய்யோ புனைகதையோ எழுதிக் குடுத்து 'காட்' எடுக்கிறதுக்கு வழி பண்ணிப்போடுவினம். ஒண்டிரண்டுபோ இதுக்கு விதிவிலக்காய் இருக்கலாம். ஆனால் - மற்றவையின்ரை 'எப்பிடியாவது காட்' எடுக்கவேணுமெண்ட நினைப்புத்தான் சிலபேரின்ரை பிழைப்பைக் கெடுத்துப்போட்டுது.

அகதியளா வந்தவை எழுதிற கேசிலை பொதுவான அரசியல் பிரச்சனையளையும் அதின்ரை காரண காரியங்களையும் சிங்களக் கவுண்மேந்து எப்பிடியெல்லாம் எங்கடை சனத்தைக் கொண்டொழிக்குது எண்டதை எப்பவெண்டாலும் வலுவா எழுதவேணும். பத்திரியர்வார் அள்ளி சொரியிற குண்டுமழையிலை எத்தினை இளந்தாரிப் பெடிபெட்டையள் அள்ளுகொள்ளையா அழிஞ்சு போச்சதுகள். எத்தினை சனம் காலங்காலமா ஆண்டு அனுபவிச்ச சொத்துப் பத்துகளை விட்டுட்டு தின்னக்குடிக்க வழியில்லாமல் தெருத் திண்ணையா காடுகரம்பையெல்லாம் அலையுதுகள். யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்குமாய் குஞ்சு குருமனுகளோடை குடும்பங்கள் பிரிஞ்சு திக்கொண்டும் திசைக்கொண்டுமாய் கிடந்து தவிக்குதுகள். யாழ்ப்பாணத்துச்

## ஆருக்குச் சொல்லி அழ?

சனத்துக்கு அது செய்யிறன், இது செய்யிறன் இந்தாபார். வாரிவாரி அவைக்குத்தான் அள்ளிக் கொட்டுறன் எண்டு சந்திரிகா அம்மையாரும் சும்மா மாயமாலம் காட்டிக் கொண்டிருக்கிறார். அரிசிக் கப்பலும், மாக்கப்பலும் வரிசை வரிசையா

> **அங்கை சோறு, தண்ணிக்கு வழியில்லை எண்டது வேறை, இஞ்சை கட்டின புருஷனை புருஷன் எண்டும், பெண்சாதியை பெண்சாதி எண்டும் சொல்லமுடியாத பிரச்சினை**

யாழ்ப்பாணத்துக்கு போகுதெண்டு சொல்லினம் ஆனால் சனம், அந்த உழுத்துப்போன மாத்தைச் சம்பா அரிசிக்கும் நான்கலக்கா கியூவிலதான் நிண்டு இடிபடுகுதுகள். உப்பிடித்தான் அங்கை உண்மையான அகதியளின்ரை நிலமை இருக்குது. இஞ்சை நாங்களும் அகதிகள் எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறம். அங்கை சோறு, தண்ணிக்கு வழியில்லை எண்டது வேறை, இஞ்சை கட்டின புருஷனை புருஷன் எண்டும், பெண்சாதியை பெண்சாதி எண்டும் சொல்லமுடியாத பிரச்சினை சிலருக்கு, எல்லாம் அகதிப் பிரச்சினைதான்.

நான் சொல்லவந்ததை விட்டுட்டு வேற எங்கேயோ இழுத்துக் கொண்டு போகேல்லை. தேவையள் வரவரப் பெருகுது. புதுசா வந்தவைக்கு விசா வேணும், விசா எடுத்தவையளுக்கு காட் வேணும், காட் எடுத்தவையளுக்கு நைசினாலிட்டி வேணும்.. இப்பிடி ஒரு அம்பாரம் தேவையள் குமிஞ்சு கொண்டு வருகுது.

மலைவிழுங்கி மகாதேவனுக்கு சுதவு ஒரு அப்பளம் எண்டமாதிரி, எத்தினை தலை மாத்தி கண்டம் பாஞ்சு வாற எங்களுக்கு 'காட்' எடுக்கிறது எண்டது அப்பிடி ஒண்டும் பெரிய காரியமில்லை. நெருப்பு எண்டால் நாக்கு என்ன வெந்தே போகும்? அதால உயிரோடை இருக்கிறவை செத்துச் சிவலோகம் போனதாகவும் எழுதலாம். காசு வாங்கிக் கேஸ் எழுதிறவையும் எப்படியும் 'காட்' எடுத்துக் குடுத்தால் காசு கறக்கலாம் எண்டதால, ஒரு அரையை அடிச்சிட்டு, கற்பனைக்குதிரையை தட்டிவிட்டால், பிறகென்ன... அது கண்டபாட்டில கால் போன போக்கில திசையெல்லாம் பாயும் தானே. கற்பனைக்குதிரை கண்டபாட்டில பாய்ஞ்சதால சிலபேர் கந்தறுத்துபோய் நிக்கிறம்.

டென்மார்க்கில ஒருத்தர் நல்ல வியாபாரம். தொழில் நட்டத்தில போக மனிசியோட ஏசியா நாடொண்டுக்கு போனார். திரும்பி வரேக்கை தாடியோட சோகமாய் வந்தார். என்ன ஏதோ எண்டு விசாரிச்சால் 'ஐயோ... என்ரை மனிசி கார் அக்சிடெண்ட்-ஒண்டில என்னைத் தவிக்க விட்டுட்டுப் போட்டுதே...' எண்டு தலையில அடிச்சுப் புலம்பினாராம். இன்சூரன்ஸ் காசு எக்கச்சக்கமாக வந்திருக்குது. கடனைக் குடுத்துப் போட்டு அப்பாடா எண்டு நிம்மதியாயிருக்க, வந்துது வில்லங்கம்; மனிசி உயிரோடதான் இருக்கிறா எண்டு டெனமாக் பொலிஸ் கண்டுபிடிச்சுட்டுதாம். காசு எடுக்க ஆள் போட்ட நாடகம் இப்ப வெளிச்சத்துக்கு வந்திட்டுது. செத்துப் போன மனிசியும் இப்ப உயிரோட திரும்பிவிட்டுது.

வேறை ஒரு இடத்தில எப்படியாவது 'காட்' எடுக்க வேண்டும் எண்டதுக்காக மனுசன் ஆமி சுட்டுச் செத்துப் போச்சுது எண்டு எழுதிக் காட் எடுத்தாச்சு. இஞ்சை அவருக்கு விசா இல்லை. சட்டத்தைப் பொறுத்தவரை அவர் செத்துப் போனார். இப்ப கையில ஒரு விசாவும் இல்லை. விசா இல்லை எண்டதுக்காக கட்டின மனிசியை விட்டிட்டு இருக்க முடியுமே, ஒண்டாய் ஒருமிக்கத்தான் இருக்கினம். அந்தான் மனிசியோடை போறதை வழி, தெருவில கண்டால், 'ஐயோ! அக்கா ஆவியோடை திரியிறா' எண்டு பொடியள் பகிடி பண்ணுறாங்களாம்.

இதைவிட இன்னுமொரு சுவாரிசியமான விசயமொண்டிருக்குது; இந்த மாதிரி.. புருசன் செத்ததா சொல்லி மனிசிக்கு 'காட்' எடுத்தாச்சுது. அவையள் இஞ்சை ஒண்டாத்தான் இருக்கினம். ஆனால் அவர் இப்ப வேறை ஒரு 'செற்அப்' போட்டிட்டார். குடும்பத்தில ஒரே பொஸ்னியா கலவரம் கிளம்பியிட்டுது. அவர் 'நீயும் வேணும், அவவும் வேணும்' எண்டிட்டார். இவ 'உன்னை விடமாட்டன்' எண்டு நிக்கிறா. 'உன்னாலை என்ன செய்ய முடியும்? ஆசு மிஞ்சினால் பொலிசுக்குப் போவாய். போவன்..' எண்டு அவர் தினாவெட்டாச் சொல்லிப் போட்டார். அவ இப்ப கையைப் பிசைஞ்சு கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறா.

இந்த முறை இந்த விசயத்தை ஒருக்கால் எழுத வேணும் எண்டு நினைச்சுக்கொண்டு போனன். உலகச் செய்திக்காரன் ஏதோ குட்டிப் புழுகத்தில இருந்தவர் போல. ஒரு நாளும் இல்லாத திருநாளா... "ஊருக்கும் தெரியாது.. யாருக்கும் புரியாது.." எண்டு பாடிக்கொண்டு இருந்தார்.

"இனிமேல்... எப்பிடி உண்மை நிலையை ஒவ்றாக்குச் சொல்லுறது.." எண்டு நான் ராகம் பிசகாமல் அடுத்த அடியைப் பாடி பல்லவியை முடிச்சன். 'என்ன.. என்னத்தைப் போட்டு உந்தக் கடி கடிக்கிறாய்?'. எண்டு சாடையாய் எரிஞ்சார்.

'இல்லை... அகதி வாழ்வின் அவலங்கள் இப்பிடியும் இருக்குதுங்கோ?' என்டன். அலுவலை விட்டுட்டு 'ஆ!' வெண்டு வாயைப் பிளந்து 'என்னவாம்..?' எண்டு கதையைக் கேக்கத் தொடங்கிவிட்டார். ஆற்றையேன் விடுப்பெண்டால் பிறகென்ன..... சோறு தண்ணி... சொந்தச் சோலி எல்லாம் மறந்து– சரி..! சரி! நடக்கட்டும்..! நடக்கட்டும்!! நான் சொல்லி உலகம் என்ன திருந்தவே போகுது..?

**ஆசைத்தம்பி**


மேற்கு இலண்டன் மாநகரில்

**துவாரகா**

Cash & Carry

இல்லை என்பது இங்கில்லை

N°: 199, The BROADWAY,
Southall, Middx.
T.P: 0181 / 813 9126

(ADV)

லண்டன் மாநகரில்

**ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்**

கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை

SREE LAKSHMI ENTERPRISES

IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER

Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes

50 THE BROADWAY, SOUTHALL,
MIDDLESEX, UB1 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
- FAX: 0181-606 8709

(ADV)

இலண்டனில் நகைத் தெரிவுகளுக்கு...

**ராஜூ பட்னி அன் சன்**

PATTNI HOUSE

58-60 EALING ROAD
WEMBLEY,
MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859,
0181-902 0577
FAX: 0181- 903 4887

(ADV)

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
K. Kesenthiran

**Impression:**
IMPRIMERIE MEAULLE

*நிர்வாகி:*
*ப. வேலுப்பிள்ளை*
*ஆசிரியர்:*
*க. கேசேந்திரன்*

தபால் தொடர்புகளுக்கு:

**EELAMURASU**
**22, Rue Perdonnet,**
**75010 Paris,**
**France**

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
Tel.: 40 37 63 63
Fax: 40 37 64 64

ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 041333896

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

கலிஸ்:
மக்கள் கடை
Tel: 01-271 7374
தேசன் - 077 696592

லண்டன்:
ஜெயந்தன்:
Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து:
ராஜுவர்
Tel: 0223 680462

**சாரதி/வாகன சேவை**

உங்கள் சகல வாகனத் தேவைகளுக்கும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாகன சேவையும், தனியாக சாரதி சேவையும் நாம் வழங்குகிறோம்.
தொடர்புகளுக்கு:
எம். குமார் - 48 50 12 26

# தமிழகத்திற்கு அகதிகள் வருகை சிறீலங்காவிடம் இந்தியா கவலை

(கொழும்பு)

சிறீலங்கா இராணுவத்தின் பிடியிலுள்ள குடாநாட்டிலிருந்து பெருமளவு அகதிகள் தமிழ் நாட்டுக்குச் செல்லத் தொடங்கியிருப்பதையடுத்து சிறீலங்கா அரசிடம் இந்திய அரசு தனது கவலையை தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளரான ரஞ்சன் மத்தாய் சிறீலங்கா வெளியுறவு அமைச்சரான கதிர்காமரிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய அரசாங்கம் பெருமளவு தமிழ் மக்கள் இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகத்திற்கு வருவதை விரும்பவில்லை. அவ்வாறு அவர்கள் வருவது இந்தியாவின் இராணுவ விவகாரங்களுடன் சம்பந்தப் பட்டதாகவும் இதை இந்தியா விரும்பவில்லை என்றும் அகதிகள் தமிழகத்திற்கு செல்வதற்கான சூழ்நிலைகள் உருவாகாமல் தடுப்பதற்கு சிறீலங்கா அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என்றும் கதிர்காமரிடம் தெரிவிக்கப்பட்டதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

அகதிகள் தமிழகத்திற்குச் செல்வதைத் தடுக்க சாத்தியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தாம் முயற்சி எடுத்து வருவதாக கதிர்காமர் இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதற்கிடையில் இலங்கைத் தமிழர்களை அகதிகளாக ஏற்றி வரும் இந்திய படகுகளின் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்யப்போவதாக இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளதையடுத்து இராமேஸ்வரம் மீனவர்கள் அதற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

# 'யாப்பா பட்டுன'வும் 'புத்தொளியும்' அரசின் புதிய பிரச்சாரம்

சிறீலங்கா அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களிடம் நன் மதிப்பை பெறுவதற்காக வேறுவகையான பிரச்சார உத்தியைக் கையாண்டு வருகின்றது. அதில் ஒன்று யாப்பா பட்டுன என்ற வானொலி ஒலிபரப்புச் சேவை அத்துடன் கடந்த மே 22-ம் திகதி முதல் விசேட தொலைக்காட்சி சேவை ஒன்றையும் நடாத்தி வருகின்றது.

அத்துடன் சிறீலங்கா அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் புத்தொளி என்னும் பத்திரிகை ஒன்றும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இப்பிரச்சார சாதனங்கள் மூலம் தமிழருக்கு புதிய கட்சியொன்றுக்கான அவசியம், இராணுவத்தின் வெற்றி, தமிழ் மக்களின் வெற்றி, கது நெலும் இயக்கத்தின் செயற்பாடுகள் என்பவற்றை வலியுறுத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தற்போது உதயன் நாளிதழ் வெளிவரத் தொடங்கியுள்ளது. மேலும் வெளியிடத்தில் இருந்து அரச சார்புப் பத்திரிகைகளான தினகரன், டெய்லி நியூஸ் பத்திரிகைகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன எனத் தெரிய வருகின்றது.

கண்ணுக்கு முன்னால் சுற்றிவளைப்புக்களும் கைதுகளும் கட்டுக்கொல்லுதல், புதைகுழியில் புதைப்பதுமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டும், இளம் பெண்களை பாலியல் பலாத்காரம் புரிந்து கொண்டும், அத்தியாவசிய பொருட்கள் மக்களுக்கு கிடைப்பதைத் தடுத்துக் கொண்டும், இராணுவத்தின் வெற்றி தமிழ் மக்களின் வெற்றி என அரசு எமக்கே பிரச்சாரம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து அழுவதா சிரிப்பதா எனத் தெரியவில்லை என அங்கிருந்து ஒருவர் எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பத்தாயிரத்துக்கு..

சென்றதால் குவிந்த பணக் கட்டுக்களை ஒரு தொலைக்காட்சி நிறுவனம் மிகத் துலாம்பரமாகப் படம் பிடித்து வெளியிட்டது.

இம் மாபெரும் பேரணியில் பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டாலும் 'நடராஜா முரளிதரனை விடுதலை செய்' என்ற கோஷமே முக்கியத்துவம் பெற்றதைக் காணக் கூடியதாக இருந்தது. மாலை 3.00 மணிக்கு ஜெனீவா பிரதான புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் ஐ.நா. சபை முன்றலை அடைந்ததும் கூட்டம் ஆரம்பமாகியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பேச்சாளரும் மத்தியகுழு உறுப்பினருமான திரு.லோறன்ஸ் திலகர் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அதன் பின்பு திரு.லோறன்ஸ் திலகர், திரு.விஜயமானே, அருள் தந்தை இமானுவேல் மற்றும் பலர் உரையாற்றினர். திரு. அல்பேட் கூட்ட நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

திரு. விஜயமானே உரையாற்றுகையில், தாம் மூன்று வருடங்களாக ஜெனீவாவில் உலக தேவாலயங்களின் கூட்டமைப்பில் பணியாற்றியபோது ஐ.நா. முன்றலில் பல பேரணிகளைப் பார்த்திருப்பதாகவும் ஆனால், இப்படியானதொரு மக்கள் வெள்ளத்தைத் தான் பார்த்ததில்லை எனக் குறிப்பிட்டார். அருட் தந்தை இமானுவல் தமதுரையின் போது, யாழ்ப்பாண மண் சூறையாடப்பட்ட கொடுமையை விபரித்தார். உணர்ச்சிபூர்வமாக உரையாற்றிய திரு.லோறன்ஸ் திலகர், எமது போராட்டம் வெற்றி இலக்கை நெருங்கிவிட்டது என்றும் ஐ.நா. மன்றுக்கு வெளியே பறக்கும் தமிழீழத் தேசியக் கொடி மிகவிரைவில் ஐ.நா. மன்றத்தின் உள்ளேயும் பறக்கும் எனக் குறிப்பிட்டார். மனித உரிமைக்கான உப ஆணைக் குழுவிடம் கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்பட்டது.

இப் பேரணியில் குறிப்பிடப்பட வேண்டிய அம்சம், அங்கு கட்டுப்பாடாகவும் ஒழுங்காகவும் இப் பேரணி நடந்தது என பொலிசார் பாராட்டியதும், இவ்வளவு தொகை மக்கள் பெருந் தொகைப் பணத்தை வலிந்து கொடுக்கிறார்களே என சுவிஸ் மக்கள் வியந்ததுமாகும். பேரணியை முன்னிட்டு தமிழ்வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

கொழும்புக் குண்டு வெடிப்பு யாழ்ப்பாணக் குண்டு வெடிப்பு முல்லைத் தாக்குதல் ஆகியவற்றின் பின் அரசின் பழைய பிரச்சாரத் தந்திரம் பிசுபிசுத்துப் போய் விட்டதால் இப்போது புதிய பிரச்சாரத் தந்திரம் ஒன்று வகுக்கப்பட்டு வருகின்றது. சிறீலங்கா, உல்லாசப் பிரயாண ஹோட்டல் துறை உட்பட பத்து நிறுவனங்கள் இந்தப் பிரச்சார வேலைக்கான நிதியையும் வசதிகளையும் வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## அகதிகளுக்கான..

நீல நிறம் கொண்ட இந்தப் பிளாஸ்டிக் கூடாரங்களை தாண்டிக் குளத்தில் இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளனர். நீல நிறமான கூடாரங்கள் அமைப்பதால் வானத்தில் இருந்து அவற்றை அவதானிப்பது சிரமம் எனவும் வெள்ளை நிறக் கூடாரங்கள் மட்டுமே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் எனவும் இராணுவத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அகதிகளுக்காகக் கொண்டு செல்லப்பட்ட பிளாஸ்டிக் கூடாரங்கள் தாண்டிக் குளம் தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.,

ஆனால் அகதிகளின் தேவைகளுக்காக நீல நிறக் கூடாரங்களே உலகம் முழுவதும் பாவிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்சி)

## முல்லைத்தீவு...

சாட்டு அவர் முன் வைக்கப்பட்டுள்ளது. முன்னர் பூநகரி முகாம் தோல்வியினை ஏற்று அன்றைய இராணுவத் தளபதி லெப்ரினல் வைத்தியரத்தின பதவி விலகியதுபோல் முல்லைத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று தலுவத்தை பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோருகின்றன. இதேவேளை, இவ்வருட இறுதியில் ஓய்வுபெறவுள்ள இராணுவத் தலைமை உத்தியோகத்தர், உதவி இராணுவத் தலைமை உத்தியோகத்தர் கெமுனுகுலதுங்க போன்றவர்களின் இடத்திற்கு இளம் தலைமுறை உத்தியோகத்தர்கள் பதவியேற்கவுள்ளனர். கடற்படைத் தளபதியின் இடத்துக்கு வைஸ் அட்மிரல் சிசில் திசேரா நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரியவருகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## இராணுவத்தை.

அவர்கள் இராணுவத்திற்கு பயந்து விழுந்தெழுந்து ஓடுவதைப் பார்த்து கைகொட்டிச் சிரித்து தமது வக்கிரத்தைக் காட்டிக் கொள்கிறார்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலி எதிர்ப்பு...

தது. இந்த பிரச்சாரத் திட்டத்திற்கான ஒரு அங்கமாகவே இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமும் வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்வுத் திட்டம் வைக்கப்பட்ட அதே நேரத்தில் தமிழ் மக்களை அழிப்பதற்கான முழு அளவிலான யுத்தத்திற்கும் தயாரிப்புச் செய்யப்பட்டு வந்தது.

மேற்குலக நாடுகளில் உள்ள சில செய்தி முகவர் நிலையங்களுக்கு பணம் கொடுத்தும் அவர்களை சிறீலங்காவுக்கு வந்து போவதற்கான சலுகைகளை வழங்கியும் யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற தனது இன அழிப்பு நடவடிக்கை சமாதான நடவடிக்கையாக சர்வதேச செய்தி நிறுவனங்களில் பிரச்சாரப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வந்தது.

**வாடகைக்கு**

Colombes (92) இல் SNCF இற்கு மிகவும் அருகாமையில் மிகவும் நல்ல நிலையிலுள்ள 2 Pieces வீடு வீட்டுத் தளபாடத்துடன் வாடகைக்கு உண்டு. வாடகை 3177,50 பிராங் CC

Paris 9 இல் மெத்ரோ Poissonnier இற்கு மிகவும் அருகாமையில் மிகவும் நல்ல நிலையில் உள்ள Studio வாடகைக்கு உண்டு. வாடகை 2800 பிராங்.

சகல தொடர்புகளுக்கும்: சிவா
TEL: 46 71 66 91 / Mobile 09.91.12.66

*லாச் சப்பலில்* குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

**Errances Travels**

Tél: 42 09 70 00

*à partire de*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. | Londres | - | 650 Frs. |
| Delhi | - | 3,900 Frs. | New york | - | 2,400 Frs. |
| Bangkok | - | 3,350 Frs. | Montreal | - | 2,400 Frs. |
| Colombo | - | 4,150 Frs. | Oslo | - | 2,010 Frs. |
| Singapour | - | 3,350 Frs. | Toronto | - | 2,700 Frs. |
| Kualalumpur | - | 3,400 Frs. | Nepal | - | 4,820 Frs. |
| Madras | - | 4,750 Frs. | | | |

*மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது*

Fax: 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)




# இந்தோனேசியாவுக்கு அமெரிக்க ஆயுத விநியோகம் தாமதம்

இந்தோனேசியாவுக்கு அமெரிக்கா விற்பனை செய்ய இருந்த ஆயுத விநியோகம் இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படலாம் என்றும் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தோனேசிய சுதந்திரப் போராட்ட வீரரான சுகார்னோவின் மகள் சுகார்னோ புத்ரி இந்தோனேசியாவில் ஆட்சியில் உள்ள இந்தோனேசிய ஜனநாயகக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட விடயம், அமெரிக்க அரசின் இந்த முடிவின் பின்னணியில் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது பற்றிக் கருத்து வெளியிட்ட இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்ட்டோ தேவையேற்படின் ஆயுத கொள்வனவு ஐரோப்பிய நாடுகளில் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# தேவாலயக் கதவுகள் கோடரி கொண்டு தகர்க்கப்பட்டன மோசமான அயோக்கியத்தனம் பிரெஞ்சு மக்கள் கண்டனம்

கடந்த 23.08.96 வெள்ளி காலை 7.30 மணியளவில் பிரான்சின் தலைநகர் பாரிசில் உள்ள புனித பேர்னார்ட் தேவாலயத்தில் காலைப் பூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது தால் பிரான்சில் வாழும் உரிமை இழந்தவர்கள் கடந்த 50 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வந்தனர். அங்கு கண்ணில் பட்டவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் இரக்க சிந்தனையுடனும் பிரச்சினையை அணுகுவோம்" என உள் நாட்டமைச்சர் பகிரங்க அறிவித்தல் விடுத்த 24 மணி நேரத்துள் நிகழ்ந்த இந்த கொடுமையைக் கண்டித்து எதிர்கட்சியிருந்தும் அவர் மௌனமாக இருந்தது குறித்து கண்டனம் தெரிவித்த ஜனாதிபதி வேட்பாளரும் சோசலிசக் கட்சித் தலைவருமான லியனல் ஜொஸ்பன் அமெரிக்காவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றபோது வெற்றியீட்டியவர்களுக்கு நேரடியாக தொலைபேசி அழைப்பு மூலம் உடனடியாகவே வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதிக்கு மனிதாபிமான விடயத்தில் தலையிட நேரம் இருக்கவில்லை எனக் கண்டனம் தெரிவித்துள்ளார். (ஜனாதிபதி சிராக் தனது விடுமுறை இல்லத்தில் கோடை விடுமுறையை மகிழ்ச்சியுடன் கழித்துக் கொண்டிருக்கின்றார்) உண்ணாவிரதிகளில் பலரின் பெற்றோர் இரண்டாம் உலகப் போரில் பிரெஞ்சு நாட்டிற்காகப் போரிட்டவர்கள் என்ற கோசம் ஊர்வலத்தில் அங்காங்கே எழுப்பப்பட்டது.



தேவாலய படிகளில் உண்ணாவிரதிகளின் பேச்சாளர் தறதறவென இழுத்துச் செல்லப்படும் காட்சி.

கோடரிகளுடனும், பாரிய கட்டியல்களுடனும் நுழைந்தனர் பிரெஞ்சு அரசின் கலகம் அடக்கும் படையினர். தடுக்க முனைந்த பிரெஞ்சு மக்கள் பலர் அடித்துக் காயப்படுத்தப்பட்டனர்.

இந்த தேவாலயத்தில் 1993 ஆண்டு பஸ்குவாச் சட்டத்கொண்டு செல்லப்பட்டனர். கறுப்பு நிறத்தவர்கள் வேறாகவும், வெள்ளை இனத்தவர்கள் வேறாகவும் பிரிக்கப்பட்டு அடையாள பரிசோதனையின் பின் வதிவிட உரிமை "உடையவர்கள்" விடுதலை செய்யப்பட்டனர்.

"மனிதாபிமானத்துடனும், களான சோசலிசக் கட்சி, கம்யூனிசக் கட்சி உட்பட தொழிற் சங்கங்களும் உடனடியாகவே ஒழுங்கு செய்த கண்டன ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

தற்போதைய பிரெஞ்சு அரசின் போக்கு குறித்து தலையங்கம் தீட்டிய சோசலிசம் இன்ரர் நாசனல் என்ற பத்திரிகை "ஊத்தை அயோக்கியத்தனம்"எனக் குறித்துள்ளது.

பிரெஞ்சு ஜனாதிபதியை இவ் விடயத்தில் தலையிடுமாறு உண்ணாவிரதிகள் கோரி பெறுவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும் குழந்தைகளின் 18-வது வயது வரை அவர்கள் எந்த நாட்டுக் குடியுரிமையையும் பெறாதவர்களாகவும், 18 ஆவது வயதுக்கிடையில் சிறை செல்லக் கூடிய குற்றமிழைத்தால் குடியுரிமை அற்றவர்களாக்கவும் வழி வகுக்கின்றது.

இச் சட்டத்தை மனித உரிமைவாதிகள் எதிர்த்து வருகின்றார்கள். அரசின் இந்த கொடுமையைக் குறித்து கருத்து வெளியிட்ட பேர்னார்ட் குஸ்னேர் என்ற சமூக ஈடுபாடுடைய சோசலிசக் கட்சியின் முன்னாள் அமைச்சர் கருத்து வெளியிடுகையில் "நல்ல காரியங்களுக்காக ஒன்று சேர மறந்த எமது மக்கள் இன்று ஒரு அநியாயத்துக்கு எதிராக ஒன்று சேர்ந்திருக்கின்றார்கள். நல்ல காரியத்துக்காக நாம் முன்னர் ஒன்று சேர்ந்திருந்தால் இந்த




நன்றி: 'ஹுமேனைட்'

1993-ம் ஆண்டு பஸ்குவாச் சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் பிரான்சில் வலுத்து வருகின்றது. இச் சட்டத்தின் மூலம் பிரான்சில் வெளிநாட்டவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் இயல்பாக பிரெஞ்சு பிரஜா உரிமை அநியாயம் நிகழ்ந்திருக்காது" என்ற தன் கவலையை வெளியிட்டுள்ளார். 1943-ம் ஆண்டு Vichy ஆட்சிக் காலத்தில் யூதர்கள் இவ்வாறுதான் கடத்தப்பட்டார்கள் என்பதை நினைவு கூர்ந்து கவலை தெரிவித்துள்ளார் பேராசிரியர் அல்பேர்ட் ஜக்கே.

# அகதிகள் பலவந்தமாக வெளியேற்றப்படுவர்

## ஐயிர் அரசு அறிவிப்பு

ருவண்டாவில் ஏற்பட்ட இனக் கலவரத்தை அடுத்து ஐயிர் நாட்டுள் அடைக்கலம் புகுந்த இலட்சக் கணக்கான அகதிகள் விரைவில் பலவந்தமாக நாடுகடத்தப்பட உள்ளதாக ஐயிர் அரசு கடந்த 23.08.96 வியாழனன்று அறிவித்துள்ளது. 13 இலட்சத்துக்குமதிகமான ருவண்டாவைச் சேர்ந்த ஹூட்டு இன அகதிகள் ஐயிர் நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களை நாடு கடத்துவது தொடர்பான தீர்மானம் இரு நாட்டுத் தலைவர்களும் கலந்துகொண்ட மாநாட்டில் எடுக்கப்பட்டதாக அவ் அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. இது பற்றி ஐநா பிரதிநிதி கருத்து வெளியிடுகையில் இது பற்றி தமக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்துள்ளார்.

## தவறுக்கு வருந்துகின்றோம்

83 ஆவது முரசில் வெளியான செய்தியொன்றில் குத்துச் சண்டை வீரர் முகமதலி 1960 ஆம் ஆண்டு தனக்குக் கிடைத்த தங்கப் பதக்கத்தை வியட்னாம் போரை எதிர்த்து பெற மறுத்தார் என வெளியான செய்தி தவறானதாகும். வாசகர்கள் சுட்டிக்காட்டியபடி, அவர் தென்னாபிரிக்காவில் நிலவிய இனவாத ஆட்சியை எதிர்த்தே பதக்கத்தை பெற மறுத்தார் என்பதே சரியானதாகும்.

# சிகரட் ஒரு போதைப் பொருளாகப் பிரகடனம் பில் கிளின்டன் தேர்தல் பிரச்சாரம் ஆரம்பம்

சிகரட் போதைப் பொருள் வகைகளில் ஒன்று என்பதை சட்டபூர்வமாக பிரகடனம் செய்யும் ஆவணத்தில் ஜனாதிபதி பில் கிளின்டன் கடந்த 23.08.96 வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டுள்ளார்.

18 வயதுக்குக் குறைந்தவர்கள் சிகரட் வாங்குவதை தடை செய்யும் இச்சட்டம் மேலும் பல அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வரும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இது ஒரு புறமிருக்க எதிர் வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளரின் தேர்தல் நிதியில் பெரும் பகுதி சிகரட் விற்பனையாளர்களால் வழங்கப்பட்டுள்ளதால் இது ஒரு அரசியல் நோக்கம்கொண்ட நடவடிக்கை என்ற அபிப்பிராயும் வெளியாகியுள்ளது.

# உளவாளிக்கு 2 வருடச் சிறை வியட்னாம் நீதிமன்றத்தில் தீர்ப்பு

வியட்னாமிய கம்யூனிஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர்ரான லீ ஹொாங் ஹா பல உள்நாட்டு இரகசியங்களை வெளி நாடுகளுக்கு வழங்கினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் கடந்த வருடம் வியட்னாமிய கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இவருக்கெதிராக நடாத்தப்பட்ட வழக்கில் இவர் குற்றவாளியாகக் காணப்பட்டு இவருக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் கடத்தல் வியாபாரம்
## பெல்ஜிய அரச அதிகாரிகள் உடந்தையா ?

பெல்ஜியத்தில் கைது செய்யப்பட்டுள்ள மார்க் என்பவரின் சிறுவர்களைக் கடத்தி பாலியல் நோக்கங்களுக்கு வியாபாரம் செய்யும் நடவடிக்கையோடு தொடர்புடையவர்களாக பல அரச உயர் அதிகாரிகள் குற்றம்சாட்டப்படும் வாய்ப்பு அதிகரித்து வருகின்றது.

ஐந்து சிறுமிகள் மீது பாலியல் வன்முறை புரிந்த மார்க்குற்கு 13 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தார். இவர் 3 வருடங்களை மட்டுமே சிறையில் கழித்த நிலையில் 1992-ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார். ஏற்கனவே குழந்தைகளைக் கடத்திய இவரது வீடு பின்னர் குழந்தைகள் கடத்தப்பட்ட போது முழுமையாக சோதனைகளுக்குள்ளாக்கப்படவில்லை.

மேலும் இவரது வீட்டில் சிறுவர்களைச் சிறை வைப்பதற்கான நிலக் கீழ் அறைகள் கட்டப்படுவது பற்றி 1993-ம் ஆண்டு பொலிசாருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் அது பற்றி விசாரணை நடாத்தப்படவில்லை.

தற்போது இவ் விசாரணைகள் தொடர்பாக மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்றாம் உலக நாடுகளுக்கு உல்லாசப் பிரயாணிகளாகச் செல்லும் ஐரோப்பியர்கள் அங்



குள்ள வறுமையை பாவித்து சிறுவர்களை பாலியல் நோக்கங்களுக்கு பாவித்த பின் தமது நாடுகளுக்குத் திரும்பிய பின்னரும் தமது நோக்கங்களுக்கு இங்குள்ள சிறுவர்களை பயன்படுத்த முனைகின்றனர் என ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் உள்ள Norfolk கடற்கரைப் பகுதியில் இரு சிறுவர்கள் காணாமால் போயுள்ள சம்பவம் கடந்த ஞாயிறன்று நடைபெற்றுள்ளது. பெற்றோர்களே உங்கள் சிறுவர்களை உங்களருகில் வைத்திருங்கள் தனியாக விடாதீர்கள் எனத் தெரிவிக்கும் அறிவித்தல் அக் கடற்கரையோரத்தில் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளது.

# TWA விபத்திற்கு குண்டு வெடிப்பு காரணமாயிருக்கலாம்
## வெடி பொருள் தடயம் கண்டு பிடிப்பு ?

ஜூலை 17 ஆம் திகதி 230 பேரைப் பலிகொண்ட TWA விமான விபத்து வெடி குண்டால் அல்லது ஏவுகணை தாக்குதலால் நடைபெற்றிருக்கலாம் என்பதற்கான தடயங்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக அதிகாரிகள் கடந்த 22.08.96 வியாழனன்று தெரிவித்துள்ளனர்.

அவர்கள் PETN எனப்படும் இரசாயனப் பொருளின் படிமங்களை மீட்கப்பட்ட விமானத்தின் பகுதிகளில் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

பென்ரா எரித்திரிற்றோல் ரெற்றா நைத்திரேற் எனப்படும் இவ் இரசாயனப் பொருள் ஒரு பிரதான வெடி பொருள் அல்ல என்பதை ஏற்றுக்கொண்டுள்ள அதிகாரிகள் இது படிற வேறற்றர் பாவிக்கப்படும் வெடி அதிர்வுகளை ஆரம்பித்து வைக்கும் இரசாயனப் பொருள் என்பதை உறுதி செய்துள்ளனர்.

மேலும் இவ் இரசாயனப் பொருள் சம்பந்தமாக வெளியாகும் செய்திகளின் படி இது மருத்துவத் துறையிலும் உபயோகமாகும் இரசாயனப் பொருள் என்பதால் இந்தத் தடயம் சம்பந்தமாக மேலும ஆதாரங்கள் தேவை எனக் கருதப்படுகின்றது.

தமிழ் ஆவணக்காப்பகம்

# அன்னை திரேசா கடுமையாக நோயுற்றுள்ளார்



ஏழைகளுக்கு உதவியமைக்காக 1979-ம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற கத்தோலிக்க மத சேவகியான அன்னை திரேசா கடுமையாக நோயுற்ற நிலையில் கல்கத்தாவில் உள்ள வூட்லண்ட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

26.08.96 அன்று 86 வது வயதையடையும் அன்னை திரேசாவின் உடல் நிலை ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டதாக கல்கத்தாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# லிபியாவில் நச்சுவாயுத் தயாரிப்பு
## முன்சன் கிளப்பாக்கில் தொழிலதிபர் கைது

ஜேர்மனியில் உள்ள முன்சன் கிளப்பாக் எனும் நகரில் வசித்து தொழிலதிபர் ஒருவர் லிபியாவில் நச்சுவாயுத் தயாரிப்புத் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார்.

Sarin, Soman போன்ற நச்சுப் பொருட்களைத் தயாரிப்பதற்கான இயந்திரங்களை லிபியாவுக்கு ஏற்றுமதிசெய்தது தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். Siomons எனப்படும் ஜேர்மனியக் கம்பனியின் இயந்திரங்களை வாங்கிய இவர் லிபியாவுக்கு இவ் இயந்திரங்களை ஏற்றுமதி செய்திருக்கின்றார் என பூர்வாங்க விசாரணைகள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் நடத்தப்பட்ட நச்சு வாயுத் தாக்குதலில் Sarin பாவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சமாதான ஒப்பந்தத்தை அங்கீகரியுங்கள் - புதிய அரசுக்கு பெரெஸ் கோரிக்கை

பாலஸ்தீன இஸ்ரேல் சமாதான ஒப்பந்தத்தை அங்கீகரியுங்கள், இஸ்ரேலிய மக்கள் சார்பாக இந்தக் கோரிக்கையை விடுகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

சமாதானம் என்பது பாலஸ்தீன மக்களின் தேவையல்ல. இஸ்ரேலிய மக்களின் தேவையும், சர்வதேசத்தின் தேவையும் அதுவேயாகும் என பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் பதவிக்கு வந்த பிரதமர் நெட்டன்யாகு பாலஸ்தீனத் தலைவரைச் சந்திக்க மறுத்து வருவதுடன் சமாதான ஒப்பந்தம் தொடர்பாக பல முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

# வாரக் குறிப்பு

**18.08.96 ஞாயிற்றுக்கிழமை**

- அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கோடீஸ்வரரான Ross Perot போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளார்.
- பாகிஸ்தானில் ஷிற் இன முஸ்லிம்களின் மாநாட்டு மண்டபத்திற்குச் சென்ற இனம் தெரியாத நபர்கள் 18 பேரை வெட்டிக் கொன்றுள்ளதுடன் 70 இற்கும் மேற்பட்டவர்களைக் காயப்படுத்தியுள்ளனர்.
- மெக்சிக்கோ நாட்டில் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் 737 பொலிசார் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
- வட கொரியாவுடன் தென் கொரியா இணைக்கப்பட வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த பல்கலைக் கழக மாணவர்களை கலகம் அடக்கும் பொலிசார் கடுமையாக தாக்கி கைது செய்துள்ளனர்.
- ஹொண்டுரஸ் நாட்டுக் கடவுச் சீட்டுக்களுடன் ஹொங் ஹொங் நாட்டுக்குள் நுழைந்த அமெரிக்க அதிகாரி JERRY தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் அவருக்கு 15 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

**19.08.96 திங்கட்கிழமை**

- பிலிப்பைன்ஸ் இற்கு எதிராக போராட்டம் நடாத்தி வந்த மொறோ விடுதலைப் போராளிகள் தமது 26 வருடப் போராட்டத்தை நிறுத்த உடன்பட்டுள்ளார்கள். இப் போராட்டத்தில் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமானோர் பலியாகினர்.
- பிரித்தானிய அரச குடும்பம் தமது குடும்ப விதிகளில் மாற்றம் கொண்டு வந்துள்ளது. பெண் முடிக்குரியவராக வருவதையும், புரட்டஸ்தாந்து மதத்தை சாராதவர்களை இராஜ குடும்பத்தினர் திருமணம் செய்வதையும் அங்கீகரிப்பது என முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.
- ரஷ்ய சரக்கு விமானம் ஒன்று பெல்கிரேட்டில் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 12 பேரும் பலியாகியுள்ளனர்.
- பிரெஞ்சு அரசாங்க ஊழியர்களின் தொகையை 6000 ஆல் குறைப்பதென்ற அரசின் முடிவுக்கெதிராக பாரிய வேலை நிறுத்தம் ஒன்றை மேற் கொள்ள உள்ளதாக தொழிற் சங்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**20.08.96 செவ்வாய்க்கிழமை**

- தென்கொரியத் தலைநகர் சியோலில் உள்ள பல்கலைக் கழகத்தை முற்றுகையிட்டு பொலிசார் அங்கு கொரிய இணைப்பைக் கோரியதை ஆர்ப்பாட்டம் செய்த 3000 இற்கும் அதிகமான மாணவர்களைக் கைது செய்துள்ளனர்.
- சீ.ஐ.ஏ இன் தலைவர் இராஜினாமாச் செய்ய உள்ளது தொடர்பாக வெளியான செய்தியை அவர் மறுத்துள்ளார்.
- தென் ரஷ்ய குடிபரசான தர்க்கிஸ்தானில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் நால்வர் பலி. குண்டு தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை.
- ஜேர்மன் நீதி மன்றமொன்றில் சாட்சியமளித்த முன்னாள் ஈரானிய ஜனாதிபதி தற்போதய ஈரானிய அரசு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளார்.
- அமெரிக்காவின் FBI எனப்படும் பாதுகாப்புப் படையினர் தற்போது 23 நாடுகளில் உள்ளனர். இது போதாதெனவும் அவர்கள் 129 நாடுகளில் பலமாக நிலை கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இஸ்லாமாபாத், சியோல், சிங்கப்பூர், கெய்ரோ, நியூடெல்லி ஆகிய நகரங்கள் இப் புதிய அலுவலகம் திறக்கப்பட உள்ள நகரங்களில் அடங்குகின்றன.

**21.08.96 புதன்கிழமை**

- பர்மாவில் ஜனநாயக போராட்டம் நடாத்தி வரும் அவு சான் சுகி யின் ஆதரவாளர்கள் 11 பேருக்கு 7 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- இத்தாலிய மாபியாக் குழுவைச் சேர்ந்த Mallarado கைது செய்யப்பட்டுள்ளார்.
- ஈராக்கில் உள்ள குர்திஸ் இனத்தினரிடையே ஏற்பட்ட மோதலில் குறைந்தது 100 பேர் பலியாகியுள்ளனர்.
- ஜேர்மனியில் நாஜி இயக்க நடவடிக்கையில் ஈடுபட்டு இன மோதலைத் தூண்டியதற்காக அமெரிக்கரான Gary இற்கு நான்கு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

**22.08.96 வியாழக்கிழமை**

- தென்னாபிரிக்காவில் போராட்ட காலத்தில் தாம் நடத்திய வன்முறைகள் தொடர்பாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வெள்ளையர்களுக்கு தமது வருத்தத்தைத் தெரிவித்துள்ளது.
- அமெரிக்காவில் சமூக உதவிப் பணம் பெறுவது தொடர்பான விதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் பல வெளிநாட்டவர்கள் பாதிக்கப்பட உள்ளனர்.
- அல்ஜீரியாவில் அணு சக்தி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந் நாட்டில் அணு மின் சக்தி உற்பத்தி தொடர்பாக இக் குழு ஆய்வு செய்யும்.
- செங்கடலில் இருந்து எரித்திரியப் படைகள் வெளியேற வேண்டும் என ஐ.நா தீர்மானம் ஒன்று தெரிவிக்கின்றது.
- துருக்கி நாட்டில் சமூக நலத் திட்டங்களை மாற்றியமைக்கும்படி சர்வதேச நாணய சபை வற்புறுத்துகின்றது.

**23.08.96 வெள்ளிக்கிழமை**

- மாட்டுப் பைத்திய நோய் மனிதனுக்கு உணவு மூலம் தொற்றும் என்பதற்கு மேலும் ஆதாரங்கள் வெளியாகியுள்ளன.
- 10 கி.மீ தூரத்தை 26 நிமிடம்.38.08 செக்கன்டில் ஓடி உலகசாதனை நிகழ்த்தியுள்ளார் மொறோக்கோ நாட்டு இளைஞரான Salah Hissou.
- அமெரிக்காவைச் சேர்ந்த எழுத்தாளரான Edward எழுதி வெளியிட்ட பத்திரிகைக்கு பாலஸ்தீனத்தில் தடைவிதிப்பதாக யசீர் அரபாத் நிர்வாகம் அறிவித்துள்ளது.
- ரஷ்யாவுடன் இணைப்பு ஒப்பந்தம் செய்த Bielorussie எதிர்கட்சித் தலைவர்களுக்கு அமெரிக்காவில் அரசியல் அடைக்கலம் வழங்கப்பட்டுள்ளது.

**24.08.96 சனிக்கிழமை**

- நோர்வே, ஐரோப்பிய ஆணைக்குழுவுடன் இணைவதற்கான சாத்தியங்கள் 2000 ஆண்டுக்கு முன் காணப்படவில்லை என நோர்வே தொழிலாளர் கட்சித் தலைவர் Thorbjorn தெரிவித்துள்ளார்.
- ஜோர்டானில் கடந்த வாரம் பாணின் விலை இரட்டிப்பாகியதை எதிர்த்து நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் ஈராக் இருந்ததாக ஜோர்டான் குற்றம் சாட்டியுள்ளது.
- செச்செனியாவில் போர் நிறுத்தம் உறுதியாகி வரும் வேளையில் அங்கு அரசியல் பேச்சு வார்த்தை நடாத்த ஜெனரல் லெபெட் சென்றுள்ளார்.

# செச்செனியாவில் நிரந்தர அமைதி ஏற்படுமா?

செச்செனியாவில் மீண்டும் ஒரு போர்நிறுத்தம், படை விலகல் உலகின் முக்கிய செய்தியாக அடிபடுவது இதுதான், ஆனால் இது எது வரை என்பதுதான் முக்கியமானது.

சோவியத் யூனியன் உடைந்து போனபோது ரஷ்ய கூட்டமைப்புடன் கூட நின்ற செச்செனியா சில காலத்தில் பிரிந்து போக முயன்றபோது ரஷ்யா அதற்கு முட்டுக்கட்டை போட்டது. முதலில் மிரட்டிப்பார்த்த யெல்சின் பின் செச்செனியாவிற்குள் இருந்தே மாபியாக்கள் மொஸ்கோவிற்குள் வருகிறார்கள் என்றும் இது ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு ஆபத்தானது என்றும் கூறி 1994ம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது படையணிகளை அனுப்பினார். அன்று தொடங்கிய மோதல் இன்று வரை 20 மாதங்களாக தொடர்கிறது.

இந்த செச்சினிய யுத்தத்தில் இது வரை பல மாறுதல்கள் மாறி மாறி ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே பல தடவைகள் இது போன்று யுத்த நிறுத்தங்கள் ஏற்பட்டுத்தான் இருக்கின்றன, ஆனால் இம்முறை செச்செனியப் போராளிகள் தமது பலத்தை நிரூபித்துக்காட்டியுள்ளார்கள்.

செச்செனியாவிற்குள் இருந்து ரஷ்யப் படைகளை வெளியேற்ற பல முறை தாக்குதல்களை போராளிகள் மேற்கொண்டாலும் ஒவ்வொருமுறையும் அவை ரஷ்யர்களால் நசுக்கப்பட்டன. இது வரை நடந்த மோதல்களில் 30,000க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர், 90 விகிதமான கட்டடங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன, செச்செனியாவின் பெரும்பான்மையான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் கடந்த வாரம் அதாவது பொறிஸ் யெல்சின் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகப் பதவியேற்ற அதேதினம் செச்செனியப் போராளிகளால் மீண்டும் தலைநகர் க்ரோஸ்னி கைப்பற்றப்பட்டது. இரவோடு இரவாக நகருக்குள் நுழைந்த போராளிகள் அதிகாலை ரஷ்ய நிலைகள் மீது தாக்குதல்களை ஆரம்பித்தனர், சில மணிநேரங்களுக்குள் நகரின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய போராளிகள் பெருமளவிலான ரஷ்யப் படையினரைக் கொன்றதுடன் ஏராளமானோரை கைதிகளாகவும் பிடித்தனர். இம்முறை ரஷ்யப்படைகள் எதிர்பாராத தோல்வியைத் தழுவியதுடன் 9 உலங்கு வானூர்திகள், தாங்கிகள் உட்பட பெருமளவு ஆயுதங்களை இழந்துள்ளது. ரஷ்யப் படைகளினால் கொல்லப்பட்ட முன்னாள் செச்செனியத் தலைவர் 'டுடாயெவ்' சில மாதங்களுக்கு முன் ஒரு பத்திரிகைக்கு பேட்டியளிக்கும்போது இப்போது ரஷ்ய இராணுவம் வேண்டுமானால் பத்திரமாக வெளியேற முடியும், ஆனால் எதிர்காலத்தில் அதற்கு நான் உத்தரவாதம் அளிக்க முடியாது என்று கூறியிருந்தார். அவரது கூற்றின்படி க்ரோஸ்னி இன்று போராளிகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. முன்னாள் சோவியத் இராணுவத்தில் அதிகாரியாக இருந்த அஸ்லான் மஸ்காடோவ் இன்று செச்செனிய போராளிகளின் படைத்தளபதியாகச் செயற்படுகிறார், அவர் இம்முறை எந்த வகையிலேனும் க்ரொஸ்னியை போராளிகள் காப்பாற்றிக் கொள்வார்கள் என்றார். செச்செனியப் போராளிகளைப் பொறுத்த வரை எல்லோரும் இளைஞர்களாகவும் கட்டுப்பாடுடையவர்களாகவும் உறுதிவாய்ந்தவர்களாகவும் காணப்படுவதாக ஒரு பத்திரிகையாளர் குறிப்பிடுகிறார். இப் பத்திரிகையாளரிடம் ஒரு போராளி கூறுகையில் 94ம் ஆண்டு ரஷ்யப் படைகள் க்ரோஸ்னிக்குள் நுழைந்த போது எனக்கு 18 வயது விமானப் படையின் குண்டு வீச்சினால் எனது பாடசாலை சேதமாகியது, எனது வீடு இருந்த இடத்தில் இருக்கவில்லை, எனது குடும்பமே அழிந்துபோனது, இந் நிலையில் நான் எங்கு போவது இன்று இவர்கள் தான் எனது குடும்பம் என சுற்றியிருந்த போராளிகளைக் காட்டினார். இன்னுமொரு போராளி போர் தொடர்ந்தால் சில கிலோக்கள் வெடி மருந்துடன் மொஸ்கோவிற்குள் சென்று மக்கள் கூடும் இடத்தில் வெடிக்க வைக்கப் போவதாக கூறினார், சாதாரண மக்களைக் கொல்வது பிழையாகாதா என்றபோது ரஷ்யப் படைகள் இங்கு செய்வது மட்டும் சரியானதா என்றார்.

இன்றைய செச்செனியாவின் நிலைக்கு ரஷ்யாவே முழுக் காரணம், சோவியத் முஸ்லீம்கள் என்றுமே அடிப்படைவாத தீவிரவாதிகளாக இருந்ததில்லை ஆனால் ரஷ்யர்களின் தொடர்ந்த தாக்குதல்களினால் செச்செனியா சுடுகாடாக்கப் பட்ட போது மேற்கு நாடுகள் கை கட்டி மௌனமாக இருந்ததே வேயன்றி ரஷ்யாவைக் கண்டிக்க முயலவில்லை. இந் நிலையில் தமது இழந்த நாட்டை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளவும், அகதிகளான மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கவும் அவர்கள் முயன்றுகொண்டிருந்த வேளை கைகொடுத்தது இஸ்லாமிய நாடுகளே. இன்று பெரும்பான்மையான செச்சேனியர்கள் இஸ்லாமிய அடிப்படைவாதிகளாக மாறிவருகின்றனர். பல இஸ்லாமிய நாடுகள் இரகசியமான முறையில் ஆயுத உதவிகளை 20 வழிகளால் தொடர்ந்து விநியோகம் செய்து வந்துள்ளன. இது தவிர செச்செனிய செல்வந்தர்கள் இரகசிய ரஷ்ய ஆயுத விற்பனையாளர்களிடமிருந்தும் பெருந்தொகையான ஆயுதங்களை பெற்றுக்கொள்கிறார்கள். இம்முறை மோதலின் போது நவீன ஏவுகணை எதிர்ப்பு உலங்கு வானூர்திகள் 9 சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது செச்செனியப் போராளிகள் நவீன ஸ்டிங்கர் ஏவுகணைகளையும் பெற்றுக் கொண்டுள்ளதைக் காட்டுகிறது.

இவர்களது போர்முறை பற்றிக் குறிப்பிட்ட ஒரு பத்திரிகையாளர் 20 முதல் 25 வரையிலான போராளிகள் ஒரு பாரிய ரஷ்யப் படைப்பிரிவைத் தாக்குகிறார்கள் அவ்விடத்திற்கு விமான, எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்படும் முன்னதாகவே அவ்விடத்தில் இருந்து



செச்சேனியாவுக்கெதிரான போரில் ரஷ்ய இராணுவத்தினர்

விலகி மக்களுக்குள் கரைந்துவிடுகிறார்கள், இரவுகளை அவர்களே ஆக்கிரமிக்கிறார்கள் என்றார்.

இதேவேளை செச்செனியாவிற்குள் தங்கியிருக்கும் ரஷ்ய இராணுவத்தைப் பொறுத்த வரை இந்த யுத்தத்தை அவசியமற்ற ஒன்றாகவே கருதுகிறார்கள். பலர் விரக்தியடைந்த நிலையில் இருக்கிறார்கள். இது தவிர க்ரோஸ்னிக்கு அனுப்பப்பட்ட உள்துறை, பாதுகாப்பு அமைச்சுக்களின் படைகளுக்கு சரியான முறையில் உணவு, உடை மற்றும் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இதுவும் அவர்களது விரக்திக்கு காரணமாய் இருக்கலாம்.

மீண்டும் பதவியேற்ற யெல்சினுக்கு இருக்கும் பிரச்சினைகளுக்குள் செச்செனியாவும் பெரும் தலையிடியாகவே இருந்தது. ஏற்கெனவே பாதுகாப்பு அமைச்சருடன் தகராறு, ஆகையால் புதிய பாதுகாப்புச் சபையின் தலைவர் லியபெட்டை செச்செனியப் பிரச்சினைகளுக்காக நியமித்தார். லியபெட்டும் உடனடியாக குரோஸ்னிக்குப் பறந்தவர் முதலில் ரஷ்யப் படைகளுடன் பேசினார்; அத்துடன் செச்செனியத் தளபதி மஸ்காடோவுடனும் பேசிவிட்டு ஒரு தற்காலிக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி மொஸ்கோவுக்குச் சென்றவர் செய்த முதலாவது வேலை உள்நாட்டு அமைச்சர் அனத்தோலி கூலிகோவை பதவி விலக வைத்ததுதான்.


இம் முறை ரஷ்யப் படைகள் தோல்வியைச் சந்தித்தற்கு இவர்தான் காரணம் என்ற குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டது. தோல்வியைத் தாங்கிக் கொள்ளாத நிலையில் கடந்த வியாழக்கிழமை குரோஸ்னி மீது முழு அளவிலான தாக்குதலை நடாத்த உத்தேசித்த ரஷ்ய ராணுவம் பொதுமக்களை வெளியேறுமாறு இரண்டு நாள் அவகாசம் கொடுத்தது. ஆனால் வியாழனன்று மீண்டும் லியபெட் செச்செனியாவுக்குப் பறந்து செச்செனியருடன் இடைக்கால ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டு போர் நிறுத்தம் ஒன்றிற்கு வழி ஏற்படுத்தியுள்ளார். இவ்வாரம் செச்செனியாவின் எதிர்கால அந்தஸ்துக் குறித்து பேசப்படும் என்ற உடன்படிக்கையின்படி குரோஸ்னியில் இருந்து இரு சாராரும் விலகிக் கொள்வது என்றும் இரு சாராரும் இணைந்த ரோந்து நடவடிக்கைகள் மற்றைய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் இதற்கிடையே சிலசில சிறு மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் லியபட்டின் அரசியல் வருகையை எதிர்ப்பவர்கள் நிச்சயம் செச்செனியாவில் அமைதி ஏற்பட விடமாட்டார்கள் என்றும் கூறும் அவதானிகள் லியபெட்டின் நடவடிக்கைகளை முதல் முறையாக யெல்சின் குறை கூறியிருப்பதையும் குறிப்பிடுகிறார்கள்.

செச்செனியாவின் விடுதலையே அமைதியை ஏற்படுத்தும். ஆனால் ரஷ்யர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இந் நிலையில் செச்செனியாவின் இன்றைய அமைதி - எவ்வளவு நாட்களுக்கு என்பதுதான் இன்றைய பிரதான கேள்வி.

உலகக் கண்

உதயன்

KANNA Imports & Exports Ltd.
(New Ambiha Supermarket)
198 Archway road, London N6 5B13 (Archway கோவிலுக்கு அருகாமையில்)
இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான, உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும்
மலிவாகவும் விரைவாகவும் உங்கள் வியாபார நிலையங்களுக்கு (ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும்) விநியோகிக்கப்படும்
தொடர்புகளுக்கு: Tel: & Fax: 0181-348 3356



# சிறுவர் முற்றம்




## உங்கள் கை வண்ணம்

*இவ் வாரக் கைவண்ணம்*



### செல்வன் தர்மகுலசிங்கம் முகுந்தன்

வயது: 10 (20.03.1996)
இடம்: 75012 Paris, France.



## குட்டிக் கதை படிப்போம்...

### ரோஜாச் செடியும் நத்தையும்

ஒரு ஊரில் ஒரு அழகான ரோஜாச் செடி இருந்தது. அது தொடர்ந்து அழகான பூக்களை இந்த உலகத்திற்கு கொடுத்துக் கொண்டிருந்தது. அதன் அழகைப் பார்த்து மயங்காதவர்களே கிடையாது. ஒரு நாள் அந்த வழியாக ஒரு நத்தை வந்தது. அது அந்த ரோஜாச் செடியைப் பார்த்து,

"நீ என்ன செய்கிறாய்; இப்படியே இருந்து வாழ்வில் என்னதான் செய்யப்போகிறாய்?" என்று கேலி செய்தது.

அதற்கு ரோஜாச் செடி கூறியது "நான் வருடம் முழுவதும் பூக்களையே பூத்துக் கொண்டிருக்கிறேன். என்னால் செய்யக் கூடியது இது மட்டுமே" என்றது.

அதைக் கேட்டதும் நத்தை பலமாகச் சிரித்தது. "நான் உலகம் முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன். நீயோ இப்படியே இருந்து வெறும் பூக்களை மட்டுமே பூத்துக் கொண்டிருக்கிறாய்" என்று கூறியது.

அதற்கு ரோஜாச் செடி கூறியது "நான் ஒன்றையே செய்தாலும் அதை ஒழுங்காகச் செய்கிறேன். நான் உருவாக்கும் பூக்கள் மிக



அழகாகவும் பயனுடையதாகவும் இருக்கின்றன. நீ வெறுமனே ஊர் சுற்றித்தான் திரிகிறாய். உன்னால் எதையாவது உருவாக்க முடியுமா கூறுபார்ப்போம்?" என்றது.

பதில் சொல்ல முடியாத நத்தை வெட்கத்துடன் திரும்பிச் சென்றது.

*எழுதியவர்: செல்வி அஜந்தா - டென்மார்க்*
(நன்றி: புதிய குரல்)

## கவிதை பாடுவோம்



### அணில்

*பட்டுப் போல மேனியாம்*
*பார்க்க மூன்று குறியுமாம்*
*மென்மையான வாலுமாம்*
*குண்டுமணிக் கண்ணுமாம்*

*தொட்டுப் பார்க்க ஆசையே*
*கிட்டப் போனால் ஓடுமே*
*என்ன வென்று தெரியலையா*
*சின்ன அணில் பிள்ளைதான்.*

– பூரணன்

## - அறிந்து கொள்ளுங்கள் -

### இயந்திர மனிதன்

பிள்ளைகளே! இந்த மனிதன் யாரென்று பார்க்கிறீர்களா? இவன்தான் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட நவீன இயந்திர மனிதன். இதுவரை குறிப்பிட்ட சில வேலைகளை மட்டும் தானாகச் செய்துவந்த இயந்திர மனிதன், தற்போது தனது முகத்தில் உணர்ச்சிகளையும்



வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டான். பியூமியோ கரா என்ற ஜப்பானியர் கண்டுபிடித்த இந்த இயந்திர மனிதன் தனது முகத்தில் கோபம், சந்தோசம், ஆச்சரியம், வெட்கம், வெறுப்பு, விருப்பம் என ஆறுவகையான உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறான். கணணி (Computer) மூலம் இவன் இயங்குகின்றான்.

## எனது விடுமுறை நாட்கள்

பிள்ளைகளே! தற்போது உங்களில் பலருக்கும் பாடசாலை விடுமுறை நாட்களாகவே இருக்கும். இந்த நாட்களில் நீங்கள் உங்கள் விடுமுறையை கழிக்க எங்காவது சுற்றுலாப் பயணம் சென்றிருப்பீர்கள். உங்கள் சுற்றுலா அனுபவத்தை 10 வரிகளுக்குள் சுருக்கமாக உங்கள் கைப்பட எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் படத்தையும் சுற்றுலாப் பயண வேளையில் நீங்கள் பார்த்து ரசித்த பகுதியின் படம் இருந்தால் அதில் ஒன்றையும் எமக்கு அனுப்பிவைக்கவும்.

## - கண்டுபிடியுங்கள்! -

பிள்ளைகளே! கீழே உள்ள இரண்டு படங்களையும் உற்றுப் பாருங்கள். இரண்டுக்குமிடையே 10 வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அதனைக் கண்டுபிடித்து ஒரு தாளில் குறித்து வையுங்கள். அடுத்தவார சிறுவர் முற்றத்தில் பதில் உண்டு. சரிபார்த்துக் கொள்ளுங்கள்.





# புகலிட நிகழ்வுகள்

## நெதர்லாந்தில் புனர்வாழ்வுக் கலைமாலை

புலம் பெயர்ந்த தமிழீழ மக்களின் புனர்வாழ்வு நிதிக்காக, தமிழர் புனர்வாழ்வுக் கழக நெதர்லாந்துக் கிளையால் நடாத்தப்படும் புனர் வாழ்வுக் கலை மாலை நிகழ்ச்சி எதிர்வரும் 21.09.96 அன்று மாலை 4.00 மணிக்கு Cultureel Centrum. Bleyenhoevelaan-2, VELSEN NOORD. (Beverwijk புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்) என்ற முகவரியில் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு 0251 499300 அல்லது 072 5644442 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

இந் நிகழ்ச்சியில் மௌன அஞ்சலி, எழுச்சி நடனங்கள், நாடகம் - (குந்த ஒரு குடிநிலம்), அநிஷ்டவாபச் சிட்டிழுப்பு, புரட்சி இசையமுதம், சிறப்புரை என்பன நடைபெற உள்ளன.

## பாரிசில் தேர்த்திருவிழா

சித்தி மாணிக்க விநாயகர் ஆலயம் பாரிஸ் அலங்கார உற்சவமும், தேர்த்திருவிழாவும் நடைபெற உள்ளது.

06.09.96 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் உற்சவம் 15.09.96 மாலை தேர் நகர் பவனி, 16.09.96 திங்கள்கிழமை காலை சங்காபிஷேகம் என்பன நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு 40 34 21 89 அல்லது 42 09 50 45 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

## சூரிச்சில் கிருஷ்ண ஜெயந்திவிழா

கிருஷ்ண பக்திக்கழக ஸ்தாபக ஆச்சாரியர் அ.ச.பக்திவேதாந்த சுவாமி சிறீல பிரபுபாதக அவர்கள் தோன்றி இவ்வருடம் நூறு ஆண்டுகள் ஆகின்றன. இவ்வருடம் அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாட ஒழுங்குகள் செய்துள்ளனர்.

06.09.96 அன்று கிருஷ்ண ஆலயங்களில் அவருக்கு 1008 புனித ஸ்தலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட புனித நீரினால் அபிசேகம் செய்யப்பட உள்ளது. 05.09.96 அன்று கிருஷ்ண ஜெயந்திவிழா நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு

SWISS TAMIL KRISHNA SOCIETY, Postfach -116, 8030 ZURICH.

# முரளியின் விடுதலை கோரி சுவிசில் நடந்த பத்திரிகையாளர் மகாநாடு

(சூரிச்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பிரதிநிதி திரு. நடராஜா முரளீதரனை உடன் விடுதலை செய்யக்கோரி சுவிஸ் தமிழ் அமைப்புக்களின் சம்மேளனத்தினால் கடந்த 16.08.96 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பத்திரிகையாளர் மகாநாடு ஒன்று நடத்தப் பட்டுள்ளது.

இம் மகாநாட்டில் திரு முரளியின் சட்டத்தரணி திரு. மார்சல் பொசனே, திருமதி. றஞ்சி முரளிதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம் மகாநாட்டுக்குத் தலைமைதாங்கிய திரு. அன்ரன் பொன்ராசா தனது ஆரம்ப உரையில், திரு. முரளி கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக தடுப்புக் காவலில் உள்ளார் என்றும், அவர்மீதான புலன் விசாரணைகள் முடிவுற்ற போதிலும் அவரது தடுப்புக் காவல் நீண்டு கொண்டு போகின்றது. இது ஒரு அரசியல் பின்னணியைக் கொண்டது என்றும் தெரிவித்தார்.

இம் மகாநாட்டில் சுவிஸ் தமிழ் அமைப்புக்களின் சம்மேளனத்தின் அறிக்கை திரு. சுப்பிரமணியம் சிவாஜி அவர்களால் வாசிக்கப்பட்டது அதில், முரளிதரனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும், விசாரணைகள் முடிவடைந்த நிலையிலும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாது காலம் கடத்துவது ஏன்?, இவர் மீதான குற்றம் கண்டுபிடிக்க முடியாமல் தடுப்புக் காவலில் இருக்கும் காலத்தை நீடிப்பது நீதிக்கு முரணான விடயமாகும். இச்செயல் சிறிலங்கா அரசுக்கு மகிழ்ச்சிதரக்கூடிய விடயம். இது ஒரு அரசியல் காரணியாக இருக்கக்கூடும்.

சுவிசிலிருந்து தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் விடயத்திற்கும், முரளிதரன் உட்பட, 15 விடுதலைப் புலிகள் ஆதரவாளர் கைது செய்யப் பட்டதுக்கும் தொடர்பு இருக்கக்கூடியதாகத் தெரிகிறது. அரசியல் தஞ்சம் கோரி வந்தோர் மத்தியில் மீண்டும் ஓர் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்துவது மனிதாபிமானச் செயலுக்கு அப்பாற்பட்ட விடயமாகும். தற்பொழுது தமிழர் வாழும் பகுதிகள் மீது சிறிலங்கா அரசு தனது அரச பயங்கர வாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. கிளிநொச்சி என்னும் நகரம் தரைமட்டமாக்கப் பட்டுள்ளது. அங்கிருந்து 200,000 மக்கள் அண்மையிலுள்ள காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். பொருளாதாரத் தடையால் மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இன்று தமிழ்ப் பகுதிகளில் எட்டு இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக்கப் பட்டு சொல்லொணாத் துன்புறும் வேளையில், சுவிஸ் நாட்டிலும் தமிழருக்கு எதிரான அரசியல் நடவடிக்கை, நீதிக்கும் மனித நேயத்திற்கும் முரண்பட்டதாகும். சுவிஸ் ஒரு நடுநிலையான நாடு; போராடிச் சுதந்திரம் பெற்ற நாடு. தன் நடுநிலையையும், விடுதலையையும் மதித்து திரு. முரளிதரனை உடன் விடுதலை செய்ய வேண்டும். அத்துடன் அவர் சுவிஸ் வாழ் தமிழ் மக்களுக்கு வேண்டப்பட்டவர். அவரது உதவிகள் தமிழ் சமூகத்திற்கு இன்றியமையாதது. அதனால் உடனே அவரை விடுதலை செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமதி முரளிதரன் பேசும் போது, எனது கணவர் 10.04.96 அன்று அதிகாலை 1.00 மணிக்கு கைது செய்யப்பட்டார். பின்னர் காலை 6.00 மணிக்கு முகமூடி அணிந்து துப்பாக்கிகள் சகிதம் எனது பிள்ளைகளும், நானும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் கோடாரியால் கதவுகளை உடைத்து வீட்டினுள் நுழைந்த கோஷ்டி எம்மைத் துப்பாக்கி முனையில் இருத்தி விட்டு வீடு முழுவதையும் சல்லடைபோட்டுத் தேடினார்கள். மூன்று மணித்தியாலயங்களின் பின்னர் தம்மைப் பொலிஸ் என்று அறிமுகப் படுத்தினார்கள். இச் சம்பவம் நடந்தபோது நான் 9 மாதக் கர்ப்பிணி. எனது கணவர் கைதுசெய்யப் பட்டு 5 மணித்தியாலங்களின் பின் இந்தக் கொமாண்டோப் பாணியிலான தேடுதல் ஏன்? எனது கணவர் தேச விடுதலைக்காய் முழுமையான பணியை ஆற்றி வருகிறார். 'அவர் எந்தவித சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் போகமாட்டார். அவர் குற்றமற்றவர். அவரை உடன் விடுதலை செய்யக் கோருகிறேன் எனக் கேட்டிருந்தார்.

தேவாலய அமைப்பில் வெளிநாட்டவர்களுக்காக பணிபுரியும் திருமதி பிர்ஜிற் மோர்க்ன்தாலர் சுப்பிரமணியம் பேசும் போது, நான் பீல் என்ற நகரில் பல வருடங்களாக வசித்து வருகிறேன். எனக்கு அங்கேயுள்ள பல தமிழர்களைத் தெரியும். எனக்கு தெரிந்தவரை தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளை யாரிடமும் வற்புறுத்தியோ, வன்முறையிலோ பணம் சேகரித்ததில்லை. அத்துடன் முரளிதரன் அவர்களையும், அவர் தமிழ் மக்களுக்கு ஆற்றும் பணிகளையும் நான் நன்கு அறிவேன் எனவும் குறிப்பிட்டார்.

திரு. முரளியின் சட்டத்தரணி திரு மார்சல் கருத்துத் தெரிவிக்கையில், முரளிதரன் மேல் குற்றம் சுமத்திய 'பாஹெனாவ் காஸ்' என்ற கூட்டத்திலுள்ளோரின் சாட்சியங்கள் சரியானவை அல்ல. அவர்களின் மீதே பல குற்றங்கள் சுமத்தப் பட்டுள்ளன. அவை இன்னும் விசாரிக்கப் படவில்லை. ஆகவே அவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப் பட்டிருப்பது அரசியல் பின்னணியைக் கொண்டதாக இருக்கலாம் எனக் கூறிய அவர், தான் அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கப் போவதாகவும் தெரிவித்ததுடன் தொடர்ந்து பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு திரு.பொசேனே பதிலளித்தார்.

# ஜேர்மனி சோட்டன்ஸ் தமிழாலயம் நடாத்திய மெய்வல்லுனர் போட்டி

உதவி கல்விப் பணியின் கீழ் இயங்கும் சோட்டன்ஸ் தமிழாலயம் நடாத்திய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

சோட்டன்ஸ் நகர முதல்வர் திரு. சுமித் இப் போட்டிக்கு தலைமை தலைமை தாங்கினார். இப் போட்டியில் 400 மீற்றர், 100 மீற்றர், ஓட்டம், சாக்கோட்டம், நீளம் பாய்தல் ஆகியனவற்றுடன், உதைபந்தாட்டப் போட்டியும் புறம்பாக நடைபெற்றது.

100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று செல்வன் கஜந்தன் கணேசலிங்கம் சாதனை ஏற்படுத்தினார். முதல் பரிசாக WANGEROOGE என்ற சிறிய தீவை 30 நிமிடங்கள் விமான மூலம் சுற்றிப் பார்வையிட்டார்.

இந் நிகழ்ச்சியில் தமிழாலய ஆசிரியையான திருமதி சுசிலா தேவி யோகானந்தம், செல்வி தயானி சச்சிதானந்தன், விடுதலைப் புலிகளின் சோட்டன்ஸ் நகர பிரதிநிதி திரு. இராசையா லோகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



கஜந்தன் கணேசலிங்கம்





**தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையின் செய்திச் சேவை தொலைபேசி இலக்கங்கள்**

| | |
|---|---|
| Baden | 056/2229114 |
| Basel | 061/3210289 |
| Bern | 031/9410314 |
| Bern | 031/9913862 |
| Burgdorf | 034/530065 |
| Chur | 081/6515436 |
| Lausanne | 021/646749 |
| Langenthal | 063/228349 |
| Lugano | 091/9668884 |
| Luzern | 041/2601729 |
| Solothun | 065/254819 |
| Thun | 033/365492 |
| Wattwil | 071/9886527 |
| Zug | 041/7602392 |
| Zurich | 01/7307024 |
| Zurich | 01/2426359 |
| Zurich | 01/4516586 |

# லண்டனில் எழுச்சி கானங்கள்

முன்னொரு காலத்தில் லண்டன் மாநகரில் தமிழ் ஒலித்தால் அது ஒரு செய்தி. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியுடன் ஆயிரக் கணக்கான தமிழர்கள் இடம் பெயர்ந்து லண்டனுக்கு வந்தபின்னர் இங்கு 'தமிழ்றெகே' கூட வெளிவந்து விட்டது.

ஆனால் நான் இங்கு குறிப்பிட வந்தது தமிழ்றெகேயினைப் பற்றி அல்ல. நீண்ட நாட்களுக்குப் பின்னர் லண்டன் நகரிலே கேட்க தேகம் சிலிர்த்திட, உள்ளம் உருகிட



சுகிரஷ்ணி ரமேஷ்
'சின்னச் சின்னப் பாப்பா'

உள்வாங்கிக் கொண்ட ஒரு இசை நிகழ்ச்சியைப் பற்றித்தான். ஆம் கடந்த 17.08.96 ஞாயிற்றுக் கிழமை BRENT நகர மண்டபத்தில் இடம் பெற்ற அந்த இசை நிகழ்ச்சியைப் பற்றித்தான். பிரித்தானிய விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினர் ஒழுங்கு செய்திருந்த 'எழுச்சி கானங்கள்' இசை நிகழ்ச்சியைத்தான். ஆங்காங்கே சிறு சிறு பிசகுகள் இருந்தாலும் ஒட்டு மொத்தமாக நோக்கின், குறைகளை மறந்து கலைஞர்களை மனமாரப் பாராட்டக் கூடிய ஒரு இசைநிகழ்ச்சி அது.




நிகழ்ச்சி மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. இதனால நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னர் போய்ச்சேர்ந்துவிட வேண்டும் என்ற ஆவலில் 6.10 மணிக்கே மண்டபத்தினை அடைந்துவிட்டேன். நேரம் 6.30 மணியானபோது நிகழ்ச்சி ஆரம்பமாகப் போகிறது என உள்ளே சென்று அமர்ந்து கொண்டேன். ஆனால் நிகழ்ச்சி ஆரம்பமாகவில்லை. அன்று காலை நடைபெற்ற ஊர்வலத்திலும் மக்கள் பங்கு பற்றியிருந்தமையினால், சற்று இளைப்பாறி தாமதமாக மக்கள் வந்த காரணத்தாலோ என்னவோ 6.30 மணிக்கு மண்டபம் பாதிகூட நிறையவில்லை. இதனால் தானோ என்னவோ நிகழ்ச்சி அமைப்பாளர்கள் 7.00 மணிக்கே நிகழ்ச்சிகளை ஆரம்பித்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பின் கிளைகள் ஒழுங்கு செய்யும் நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும் என்ற எதிர் பார்ப்புக்களுடன் 6.30 மணிக்கு முன்னரே வந்திருந்த ஆர்வலர்களுக்கு இது ஏமாற்றத்தைத் தந்தது. இவ் விடயத்தில் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.,

ஆனால், நிகழ்ச்சி ஆரம்பமாகி நடைபெறத் தொடங்காதிருந்தமையினால் ஏற்பட்ட சலிப்பு நீங்கி நெஞ்சினிலே புத்துணர்ச்சி பொங்கத் தொடங்கியது. மக்கள் கூட்டமும் திரள் திரளாக உள் நுழைந்து நிகழ்ச்சி ஆரம்பித்தது. அரை மணிநேரத்தினுள் மண்டபம் நிறைந்தது. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் நிகழ்ச்சியினை சூடுபிடிக்க வைத்தது.

'ஏறுதுபார் கொடி ஏறுது பார்' என்ற பாடலே நிகழ்ச்சியின் முதல் பாடல். அப்பாடல் முழுமையானதாக வெளிவரவில்லை. ஒலிச் சீராக்கலுக்கு



அம்முதல்பாடல் பயன்படுத்தப் பட்டதும் சில இடங்களில் இருந்த சுருதிப் பிரச்சினையும் இதற்குக் காரணம். எனினும் தொடர்ந்து ஒலித்த பாடல்கள் இக் குறையினை நிவர்த்தி செய்தன. முக்கியமாக 7 வயதுச் சிறுமியான சிறுமணி ரமேஷ் பாடிய 'சின்னச்சின்னப்பாப்பா' என்னும் பாடல் இசை ஆர்வலர்களை வியப்புறவைத்தது. எந்தவித மேடைக் கூச்சமுமின்றி, சுருதி தாள பேதமுமின்றி கைகளை வீசித் தாளம் இட்டபடி அச் சிறுமி பாடிய பாடல் 'எழுச்சி கானங்கள்' நிகழ்ச்சியினை வெற்றிக்கு கட்டியம் கூறியது.

மொத்தமாக 31 பாடல்கள் இவ் இசை நிகழ்ச்சியில் இடம் பெற்றன. இவ் 31 பாடல்களில் ஒரு சில பாடல்களில் பாடல்களின் சுருதி தாளப் பிரச்சினைகள் தென்பட்டன. இருப்பினும் 'இசை' என்று நோக்கும் போது, இவ் இசை நிகழ்ச்சியின் இசை அமைப்பு அற்புதமாக இருந்தது. ஒவ்வொரு வாத்தியக் கருவிகளைப் பொறுத்தவரையிலும் லண்டனில் உள்ள சிறந்த கலைஞர்கள் ஒருங்கிணைக்கப் பட்டிருந்தனர். இவ் ஒன்றிணைப்பு 'தேசத்திற்கு கலைஞர்களின் பங்களிப்பு' என்ற உணர்வு கலைஞர்களுக்கு இருந்தமையால்தான் சாத்தியமாகியிருக்கின்றது. தமது இசைத் திறமையினை தேச விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்துகின்றோம் என்ற உணர்வோடு எவ்வித வருமான எதிர்பார்ப்புமின்றி இந் நிகழ்ச்சிக்கு இசையமைத்த கலைஞர்கள் பாராட்டுக்குரியவர்கள். இசைக் குழுவிற்குத் தலைமை வகித்து இசையைத் திறம்பட வழங்கிய கர்பாவின் திறமை பலரையும் அசரவைத்தது. இது மட்டுமின்றி இந் நிகழ்ச்சியில் பாடிய கலைஞர்களும், லண்டனில் உள்ள பாடகர்களில் முன்னணி வகிப்பவர்களே. அவர்களும் தேசத்திற்கு தாம்வழங்கும் பங்களிப்பு என்ற உணர்வுடன், எந்தவித எதிர்பார்ப்புமின்றி தமது திறமைகளை வெளிக் காட்டியிருந்தனர். இந் நிகழ்ச்சியின் வெற்றிக்கு தமது குரல் வளத்தால் பங்களித்த இக் கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

இந் நிகழ்ச்சியில் இடையிடையே காணப்பட்ட சுருதி, தாளப் பிரச்சினைகளுக்கு போதிய அளவு ஒத்திகைகள் மேற்கொள்ளப் பட்டிருக்காமையும் ஒரு காரணம் எனலாம். எனினும் இவ் இசைக் கலைஞர்கள் ஒரே இசைக்குழுவைச் சேராமல் இந் நிகழ்ச்சியில் மட்டுமே ஒன்று சேர்ந்தமையினால் இத்தகைய பிரச்சினைகள் எதிர்பார்க்கக் கூடியதே.எனினும் இது குறித்து எதிர்கால நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்தி போதிய ஒத்திகைகளை நடாத்தல் அவசியம்.

நிகழ்ச்சி முடிந்து வெளியே வரும்போது மனதில் ஒரு புத்தெழுச்சி கிளம்பியிருந்தது. நிகழ்ச்சியில் ஒலித்த பாடல்களை வாய் அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டது. நிகழ்ச்சியில் காணப்பட்ட சிறிய சிறிய குறைகள் மறைந்து போய், நிகழ்ச்சியின் நிறைவே நெஞ்சில் நிரம்பியிருந்தது. இத்தகையதொரு நல்ல இசை நிகழ்ச்சியினை லண்டனில் வெவ்வேறு இடங்களில் நடாத்துவது குறித்துச் சிந்தித்தல் அவசியம். இயந்திரமயமான வாழ்வின் மத்தியில், கலைஞர்கள் மேற்கொண்ட நல்ல முயற்சி ஒரே மேடையுடன் குறுகிவிடுவது நல்லதல்ல.



மேலும், இவ் இசை நிகழ்ச்சியில் ஒலித்த விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின் இரு சொந்தப் பாடல்களும் நன்றாகவே இருந்தன. ஒரு இசை ஒலித்தட்டு (CD) வர வேண்டும் என்பது இசைப் பிரியர்களின் விருப்பமாகும்.

சிறு, சிறு குறைகளைத் தாண்டி முழுமையான இசை நிகழ்ச்சி ஒன்றினை அடுத்த தடவையும் இக் கலைஞர்கள் தரவேண்டும் என்று வேண்டி, கலைஞர்களின் திறமையை வாழ்த்தி முடிக்கிறேன்.

- தமிழன்

## ஜேர்மனி DUREN ல் புனர்வாழ்வுக் கலைத் தென்றல்

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஜேர்மன் கிளையால் Duren மாநிலத்தில் நடத்தப்படும் புனர்வாழ்வுக் கலைத்தென்றல் எதிர்வரும் 31.08.96 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு Haus der Stadt, (Multi Kulti) von dem Haupt bahn Hof, 52321 Duren என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில், மௌன அஞ்சலி, வரவேற்புரை, பரத நாட்டியம், தமிழாலய மாணவர்களின் நிகழ்ச்சிகள், விடுதலை கீதங்கள் என்பன நடைபெற உள்ளன.

## ஜெனிவாவில் புனர்வாழ்வுக் கலைமாலை

தாயகத்தில் புலம் பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு நிதிக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழக சுவிஸ் கிளை நடாத்தும் புனர்வாழ்வுக் கலைமாலை எதிர்வரும் 07.09.96 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு Avenue de Jolimont, 15A, 1209 Geneve என்ற முகவரியில் நடைபெறும்.

இந் நிகழ்ச்சியில் தேசியக் கொடியேற்றம், மௌன அஞ்சலி, மங்கள விளக்கேற்றல், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், புரட்சி கானங்கள், வில்லுப்பாட்டு, சிறப்புரை, நாடகம் என்பன நடைபெற உள்ளன.

# சாளரம்

சோலைக்கிளியின் 'பனியில் மொழி எழுதி' கவிதை நூல் படிக்க கையில் கிடைத்தபோது அமெரிக்காவில் உள்ள அத்லாந்தா நகரில் நூறாவது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் தொடங்கியிருந்தன. தொலைக்காட்சியில் சின்னத் திரையில், பணவிளையாட்டாக மாற்றப்பட்டுவிட்ட அவ் ஒலிம்பிக் விளையாட்டை பார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு சின்ன அதிசயத்தைக் கண்டு வியக்க முடிந்தது. ஆடம்பரம் மிக்க கோலாகலமான ஒலிம்பிக் தொடக்கநாள் நிகழ்வில் அமெரிக்க கறுப்பினத்தாரின் மிதவாத தலைவராய் மிளிர்ந்து 'அம் மக்களின் குடியியல் உரிமைக்காய் போராடி சுட்டுக் கொல்லப்பட்ட மாட்டின் லூதர் கிங்கின் 'நான் கனவு காண்கிறேன்' என்னும் கவிதைவடிவான உரை படிக்கப்பட்டதுதான் அச் சின்ன அதிசயம். ஒலிம்பிக் ஒளி ஏற்றும் காட்சியின் பின்னணியில் 'மாட்டின் லூதர் கிங்'கின் (Martin Luther King) உருவமும்,

*"நான் மீண்டும் கனவு காண்கிறேன்*
*ஒரு நாள் சிங்கமும் செம்மறியாடும்*
*தமக்குள் நெருக்கமாய் இருப்பது*
*நிகழ்ந்துவரும்...."*

எனத் தொடர்ந்த இக் கனவு வரிகளும் நான் இவ் ஒலிம்பிக்கில் அர்த்தம் சேர்ந்த நிகழ்வுகளில் ஒன்றாகும். நிறவாதத்தாலும், இனவாதத்தாலும் பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மனிதனின் இக் கனவைப் போன்றே சோலைக் கிளியின் கவிதை நூலில் இடம்பெற்றுள்ள 'காக்கை நாய்ச்சவாரி' கவிதையும் எனக்குப் பட்டது.

*இன்னும் நாய் போகின்றது*
*அதன் தோளில்*
*இன்னும் காகம் இருக்கின்றது.*

*இது உலக சமாதானம் ஏற்படும் சகுனமா!*
*மனித அழிவுகள் தீர்க்கும் நேரமா?*

*ஓராயிரம் காகங்கள் பாடி மகிழட்டும்*
*பல்லாயிரம் நாய்கள் குரைத்துக் களிக்கட்டும்*
*ஒரு கவிஞன்*
*அது நான்தான்*
*தினமும் கண்ணீர் விடுகின்றேன்*
*மனித அழிவுகளுக்காக.*
*இந்த காக்கை நாய்ச் சவாரி*
*திருப்தி தருகின்றது*
*பார்க்க.*



எனச் சோலைக் கிளி கவிதையில் எழும்பும் காட்சிப் பரிமாணம் இனக் குரோத நிகழ்வினால் வெதும்பும் கவிஞன் ஒருவனின் கனவு மனத்தை ஓவியமாக்கி நமக்குக் காட்டுகின்றது.

U.L.M. அத்தீக் என இயற்பெயர் கொண்ட சோலைக் கிளியின் இக் கவிதைத் தொகுப்பை படிக்கையில் பல கவிதைகள் ஓவியப் பாங்குடன் மிளிர்ந்தன. சிலவற்றில் கவிதைக்கும் ஓவியத்துக்குமான இடைச் சுவர் தகர்ந்துமிருந்தன. ஈழத்துக் கவிதை உலகில் மட்டுமல்லாது தமிழ்க் கவிதைப் பரப்பில் புதிய பரிமாணங்களைத் தரும் சொல்லல் உத்தி முறைகளைக் கொண்ட முக்கிய கவிஞன் சோலைக்கிளி என்பதனை இத் தொகுப்பில் உள்ள பல கவிதைகள் மூலம் கண்டுகொள்ளலாம். 52 கவிதைகளைக் கொண்டதான இத் தொகுப்பு விடியல் பதிப்பகத்தால் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டுள்ளது. வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை ஆகியோர் சேர்ந்து முன்னுரை எழுதியுள்ள இத் தொகுப்பு "வெளியே வருவதற்கு மிக முக்கிய காரணமாக இருந்தவர்கள் (சுவிஸ்) புகலிட நண்பர்கள்" என என்னுரையில் சோலைக்கிளி எழுதியுள்ளதன் மூலம் அறிய முடிகின்றது. அதனால்தான் "பனியில் மொழி எழுதி" எனும் ஒரு கவிதையின் தலைப்பை புகலிடத்தார்க்கு கிளர்ச்சி ஊட்டுமென தொகுப்பு நூலுக்கு தலைப்பாக அவர் தேர்வு செய்தாரோ தெரியவில்லை. அவரது கணக்குப்படி இது ஆறாவது கவிதைத் தொகுதி.

நல்லதொரு ஓவியத்தை கவிதைபோல் உள்ளதென கிலாகிப்பதும், நல்லதொரு கவிதையை ஓவியமாய் காண்பதும் கலை இலக்கிய ஆர்வலர்க்கு இயல்பானதொன்று. அதேவேளையில் கவிதைக்கும், ஓவியத்துக்கும் இடையே உள்ள தடைச் சுவர் என்பதும் மிகமிக நுண்ணியதானது என்பதை அனுபவிப்பில்தான் பெறமுடியும். ஓவியம் கோடுகளாலும், வர்ணங்களாலும் கட்புலன்வழி ஊடுருவி உணர்வில் ஊறி கவிதையாகும் போது, கவிதை மொழியாலும், சொற்களாலும் உணர்வில் தொற்றி காட்சிப் பிம்பமாய் விரிந்து வெளியை அடைந்து ஓவியமாகின்றது. ஓவியத்தினதும் கவிதையினதும் வெளிப்பாட்டு ஊடகங்கள் வெவ்வேறு வகையினதாகக் காணப்பட்ட போதும் படிமங்களும், குறியீடுகளும், அகத்தூண்டல்களும் ஒன்றாய் ஒரே பொருத்தப்பாடுடையதாய் தொழிற்படுவதனால் ஒரு உயர்தளத்தில் சங்கமித்துக் கொள்கின்றன. சோலைக் கிளியின் கவிதைகள் ஓவிய உணர்வையும் அருட்டிவிடுகின்றன.

ஓவியம் பற்றிய பரிச்சயமும், புரிதல்களும் எனக்கு எட்டத் தொடங்கிய காலத்தில்தான் அகதியாவதற்கு ஐரோப்பாவினுள் நுழைந்துவிட்டேன் அதுவும் நல்லதாகப் போயிற்று. பாரிசில் தங்கலாம் என முடிவெடுத்த பின் ஓவியர்களை அவர்கள் படைப்புக்களைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டேன். ஆழ்ந்த அக்கறை கொள்ள முடியாவிட்டாலும் அறிமுகம் தன்னும் பெற முடிந்தது. பெயரை மட்டுமே கேள்வியுற்றிருந்த சல்வடோர் டாலி (Salvador Dali) எனும் ஓவியக் கலைஞன்தான் முதலில் என் கண்ணில் தட்டுப்பட்டான். அறுபட்டும், சிதைவுற்றும், நொய்ந்திருந்த எனக்கு டாலியின் ஓவியத் தரிசனம் ஒத்தடமாய் இருந்தது. நேர்த்தியாய் வண்ணங்களைக் குழைத்து, பிசிறுதட்டாமல் அழுத்தி கோடுகளாலும், பிம்பங்களாலும் ஒரு கட்டுக்குள் கொணரப்பட்ட எண்ணப் பாய்ச்சல்களான டாலியின் படைப்புகள் விசித்திரமாய் எனக்குப் பட்டன. சர்ரியலிச (Surrealisme) தத்துவார்த்த அடிப்படையிலான அப் படைப்புகள் சிதைவுகளின் அகோரங்களுடன், விகாரித்த உருக்களுடன், பிம்பங்கள், அருபங்கள், ஆழ்மனப் படிவுகளின் சிதிலங்களெனவும் அவை இருந்தன. அதேபோது நேர்த்தியான அழகுடன், ஒழுங்குடன், கட்டமைப்புடன் ஒருவகை ஓவியப் பாணியாய் புரியாததும், பிரமைகளும், புதிர்களுமாய் அவை எனக்குத் தென்பட்ட போதும் தொடர்ந்த தேடலின்போது பல எனக்குள் நெருங்கி வந்தன. சோலைக்கிளியின் சில கவிதைகளைப் படித்தபோது சல்வடோர் டாலியின் ஓவியப் பாணியும், சிந்தனைச் சாயல்களும் அவற்றில் தெரிந்தன.

சோலைக்கிளியின் கவிதைகளும், சல்வடோர் டாலியின் ஓவியங்களும் அச்சொட்டானவையா? ஒரே தளத்தில் சந்திக்கக் கூடியவையா என்பது விரிந்த ஆய்வின்பாற்பட்டது.

காட்சிகளும், நிகழ்வுகளும் தரும் அகத்தூண்டல்களே பெரும்பான்மையான கவிதைகள். ஆனால் சோலைக்கிளியிடம் இது எதிர்மாறாட்டம் கொள்கிறது. காட்சிகள் நிகழ்வுகள் தரும் அகத் தூண்டுதலை, பிறிதொரு காட்சிகள் நிகழ்ச்சிகளின் மேலேற்றி, ஏற்றியவற்றில் தானேறி அங்கிருந்து கவிதையைத் தொடங்கி நடாத்திச் செல்வதுதான் சோலைக் கிளியின் தனித்தன்மை. இவ்வகைக் கவிதைகளே புரியாததும், பிரமைகளும், புதிர்களும் கொண்டவையாக முதல் வாசிப்பில் நமக்குத் தென்படுகின்றன. அதனால்தான் சர்ரியலிச வகை ஓவியங்களை நினைவுக்குக் கொண்டுவரும் அவரது கவிதைகள் ஒருவகை சிந்தனைப் பாணியைக் கொண்டு விளங்குகின்றன.

## புரியாததும், பிரமைகளும், புதிர்களும்...?

வழமையாக கடற்கரைக்குச் செல்லும் கவிஞன் ஒழுங்குமுறை தடைப்பட்டு சில நாள் கழித்து செல்கிறான். பார்க்கிறான். கவிதை தொடங்கிவிடுகிறது.

*"ஒரு பாம்போல் சுருட்டி*
*தென்னைகள் கடலை*
*வைத்திருக்கன தலையில்*
*என் அறைக்கு கொண்டுவர.."*

தென்னந்தோப்பு அதுவும் கடலோர தென்னந்தோப்பில் நின்றிருக்கின்றீர்களா? தென்னைகள் உயிர்பெற்றுவிட்டன பார்த்தீர்களா? கவிதைக்கும் ஓவியத்துக்குமான இடைச்சுவர் இங்கே சரிகின்றது.

*"நச்சு மரம்*
*அப்படித்தான் துப்பும்*
*நீ கவலைப்படக் கூடாது"*

எனத் தொடங்கும் இக் கவிதை யாரோ ஏசிவிட்டார்கள் என்பதற்காய் தடம்மாறிவிடும் கவிஞனுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் தன்னையே தேற்றிக் கொள்வதற்கானதாக அமைந்துள்ளது.

அவலங்களும், கொடுங்கரங்களும், கொலையும், சிதைவுகளும் கொண்டதுதான் போரும் போராட்டமும். போராட்டக் கனவு கண்டவர்களால் கூட போராட்டம் நிஜமாகும்போது சகித்துக் கொள்ள முடிவதில்லை. தீயை மூட்ட எல்லாருக்கும் விருப்பம் தான். ஆனால் வெந்து தணியும் காட்டை யாரும் எதிர் கொள்வதில்லை. மரணத்தை, வதையுறும் அதிலை மனிதம் மிக்கேலால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. 'குதிரைக்கும் எரிந்த அரை உயிர்ப் பிணத்தைக் கண்டுவிட்ட வந்த' கவிஞன்.

"பாம்பு பாம்பு பாம்பு
கண்ணுக்குள் ஒன்று
காதுக்குள் ஆறேழு
மூக்குக்குள் இரண்டு
பிடரியில் நாலைந்து..."

என கவிதையில் அலறுகிறான். பாம்பைப் பற்றியா சொல்கின்றது இக் கவிதை. ஒரு மனித அழிவு மனதில் ஏற்படுத்தும் அருவருப்பு, அவதி, அச்சம், கொடூரம், இவற்றை நாம் நடுநடுங்கிப் போதும் பாம்பினூடே தன் உணர்வை வெளிக் கொணர முயல்கின்றான்.

"எனது கண் உருண்டுபோகின்றது கடலுக்குள்" எனத் தொடங்கும் கவிதையொன்று

*"என் முகத்தில் அது இருக்க*
*உலகம் தரவில்லை.*
*ஒரு தரமான உலகத்தை*
*தேடி எனது மனம்*
*வெண்புறாவின் வாலினிலே*
*தொங்கி திரிகின்றது.*
*அது வரைக்கும்*
*என் கண்*
*தானாக கழன்று*
*உருண்டு வந்த*
*என் கண்."*

இப்படி முடிகின்றது. தரமற்ற உலகத்தையும் சகித்துக் கொள்ளலாமே என்றும் கவிஞனை மறுத்துவிடுகின்றது அவனது உறுப்பான கண். அது சுயமான இயக்கம் கொள்கிறது. அது தானாகவே கவிஞனிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொள்கின்றது. சோலைக் கிளியின் கவி ஆற்றலால் ஒரு உறுப்பு உயிராகி கவிதா பாத்திரம் பெற்றதாகி விடுகின்றது.

சோலைக் கிளியின் கவிதைகள் தன்னுணர்வு சார்ந்தவை. அவற்றிலும் மென்னுணர்வின் வெளிப்பாடுகள், கவிப் பொருள்களும் நுண்மையானவை. அதனால்தான் பல கவிதைப் பொருள்கள் சாதாரண வாசிப்பில் தட்டுப்படுவதில்லை. ஆனால் எல்லாக் கவிதைகளும் பொருள் பொதிந்தவைதானா என்பதும் சந்தேகமே. எண்ணப் பாய்ச்சல்கள் எல்லாவற்றையும் ஒரு கட்டுக்குள் அடக்கிவிடத்தான் படைப்பாளிகள் முயற்சிக்கிறார்கள். அதற்கு மொழி, வடிவம், உத்தி என்பவற்றை பயன்படுத்துகிறார்கள். சில கட்டுக்குள் அடங்கி கவித்துவ அழகு பெறுகின்றன. சில கட்டுக்குள் அடங்காமல் திமிறிவிடுகின்றன. அவ் வேளைகளில் மொழியும், வடிவமும், உத்தியும் மிஞ்சி வெற்றுச் சொற்களாகி விடுகின்றன. இது சோலைக் கிளியிடமும் நிகழ்ந்துவிடுகின்றன. கவிதை சரிந்து விடுகின்றது. இது பற்றி படைப்பாளி கவலை கொள்வதில்லை. ஆனால் வாசகன் தலையைப் பிய்த்துக் கொள்கிறான். 'கோழிமுட்டைக் கோது வீதி', 'அவள் கூந்தலில் சூடிய தென்னம்பிக்க காற்று' என்பவற்றை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். வேறுசில கவிதைகளும் உண்டு.

சோலைக்கிளியின் கவிதை மொழியில், அறிவியல் சொல்லாக்கங்களோ, ஆங்கில சொற்பதங்களோ, இத் தொகுப்பில் உள்ள கவிதைகளில் காணக் கிடைக்கவில்லை. வேறு கவிதைகளிலும் வாசித்ததாய் நினைவில்லை. இதுவும் அவரின் சிறப்புத்தான். எல்லாம் பேச்சும் நடைமுறையும் கொண்டதான நாம் கேட்டுப் பழகிய சொற்களும் மொழியும்தான். ஆனால் அவற்றில்தான் மந்திரம் ஏற்றி பிரமைகளையும், புத்துயிர்களையும் உருவாக்குகின்றார் சோலைக்கிளி. 'மந்திரம் போல்சொல் வேண்டுமடா' என்னும் பாரதியின் வேண்டுதலை, கட்டளையை சோலைக்கிளியிடம் பரக்க காணலாம். அவரது மந்திரம்

### சோலைக்கிளியின் கவிதைகள்

போன்ற சொற்கள் கொண்ட மொழிக்கு,

*"அடித்த மரிக்கு சவாமாக இறைக்கிறது*
*சரியான இளந்தாரி வெயில்..."*

*"பெருவிரல் முறிந்து நொண்டித் திரிகிறது காற்றும்*
*காகமும்ப தோதில்லை..."*

*"சுருட்டு நிலா வானத்தில்*
*ஓடாமல் உசும்பால் துப்பாக்கிச் சூட்டுக்கு*
*இலக்காகி கிடக்கின்றது..."*

*"முளைத்திருந்த இந்தப் படை வீட்டின்*
*கிழங்கை கூடத் தோண்டு*
*மழைவந்தால்*
*பொச்சென முளைக்காத விதமாய்"*

*"கொத்து சூரியனே உன் பலத்தையெல்லாம் கூட்டி*
*வானத்தில்*
*வெயில் விதைக்க வேண்டும்."*

இப்படிப் பல உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். ஆனாலும் இடறிவிழும் சொற் சொற்தொடர்களையும் அவர் உருவாக்காமலில்லை. 'எறும்புக்கும் இன முத்திரை இடு' எனும்போது எறும்புகள் இனங்களாக பிரிபடாமல் இருக்கின்றது எனச் சொல்ல வருகின்றார். உண்மை அப்படி அல்லவே.

தொகுப்பின் தயாரிப்புப் பற்றியும் கொஞ்சம் கவனத்தில் கொள்ள வேண்டி இருக்கின்றது. சோலைக்கிளி இது தனது ஆறாவது தொகுதி என அறிவிக்கின்றார். 52 கவிதைகள் கொண்டதான இத் தொகுப்பில் 20 கவிதைகள் 'ஆணிவேர் அறுந்த நான்' தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகள். அதேவேளையில் 'ஆணிவேர் அறுந்த நான்' தொகுப்பின் பின் 'பாம்பு நரம்பு மனிதன்' எனும் ஒரு தொகுதியும் வெளிவந்துள்ளதாய் சோலைக்கிளி அறிவிக்கின்றார். அத் தொகுப்பு என்னிடம் இல்லை. அதனால் அத் தொகுப்பில் இருந்து ஏதேனும் கவிதைகள் இதில் இடம்பெற்றுள்ளதா என அறிய முடியவில்லை அதிலிருந்தும் கவிதைகள் இதில் இடம்பெற்றிருக்குமானால் ஒரு புதிய தொகுதிக்கான கவிதைகள் எத்தனை மிஞ்சி இருக்கும்? கேள்விதான். கவனப் பிசகாகவோ, அச்சுப் பிழையாகவோ இரண்டு கவிதைகள் எழுதிய ஆண்டுகள் மாற்றமாகி உள்ளன. 92-ம் ஆண்டு எழுதப்பட்டதான 'பாம்பு பாம்பு பாம்பு', 'பிள்ளைத்தாச்சி கவிஞன்' ஆகிய கவிதைகள் 95-ம் ஆண்டு எழுதப்பட்டதாய் தேதி இடப்பட்டுள்ளது.

இத் தொகுதியில் உள்ள கவிதைகளை இரண்டு காலகட்டமாக விரித்துப் பார்க்கலாம் போல் தெரிகின்றது. 93-ம் ஆண்டுக்கு முந்தியவை ஒரு பகுதியும் அதற்குப் பிந்தியவை மறு பகுதியும் எனக் கொண்டால் கிலாகித்து பேசக் கூடிய கவிதைகளாக முற்பகுதிக் கவிதைகளே காணப்படுகின்றன. பிற்பகுதியில் 'கண்', 'மூடப்படும் கடற்கரைப் படைவீடு', 'இதயமுள்ள பிரிய தென்னைகள்' போன்ற விரல்விட்டு எண்ணக் கூடிய கவிதைகளே கவி ஆற்றல் கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஏனையவை அவர் அறிக்கை செய்வது போல் 'உயிரற்ற ஜடப் பொருட்கள் உயிர் பெற்று என்னோடு பேசத் தொடங்கி இருக்கின்றன. இந்த முக்கியமான காலகட்டத்தில் எழுதப்பட்டவையாதலால் அவருடன் பேசிய ஜடப் பொருட்களின் குரலை மொழி மாற்றம் செய்ததில் ஏற்பட்ட இடறலாகவும் இருக்கலாம்.

*கி.பி. அரவிந்தன்*

# பெண்கள் பலவிதம்

# தாய்மையின் சிறப்பு தாய்ப்பாலூட்டுவதே

தாய்மையடைந்த சில சகோதரிகளிடம் குழந்தைக்குத் தாய்ப்பாலூட்டுவதைப் பற்றி விசாரித்தால் அவர்கள் தயாராக வைத்திருந்து அளிக்கும் பதில் 'பால் சுரக்கவில்லை' என்பதாகத்தான் இருக்கும். இதேவேளை தற்போது பத்திரிகைகளில் வரும் செய்திகள் கூட வேடிக்கையாகவும், அதேவேளை வேதனையாகவும் இருக்கின்றன. தாய்ப்பாலூட்டும் அன்னையருக்குக் கூட கௌரவமும், பரிசுகளும் கொடுக்கப்படுவதாக தெரிவிக்கின்றன.

பகுத்தறிவற்ற மிருகங்கள் கூட தமது வழித் தோன்றல்களுக்கு விருப்புடன் பாலூட்டுகின்றன. ஆனால் அறிவியல் ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள மனித சமூகத்திற்கு மட்டும் பாலூட்டுவதற்கு ஒரு பாராட்டும் தேவைப்படுகின்றது. ஒரு பச்சிளம் சிசு தாய்ப்பாலை எதிர்பார்ப்பது அன்பின் இணைப்போடு மட்டுமல்லாது அதன் அடிப்படை உரிமையும் ஆகும் என்பதனை அன்னையர் அறிவுபூர்வமாக உணர வேண்டும்.

விதிவிலக்கான சில மருத்துவக் காரணங்களைத் தவிர தாய்மையையும் ஒவ்வொரு வேளையிலும் தாய்ப்பாலூட்டுவது இன்றியமையாததாகும். தரவுகளின்படி கிராமிய பின்னணியிலுள்ள அன்னையரை விட நகர்ப்புற நாகரிகத்திலும், பொருளாதாரச் சிக்கல்களிலும் மூழ்கியுள்ள தாய்மாரே தாய்ப்பாலூட்ட பின்னிற்பவர்களாகின்றனர். ஆனாலும் வளர்ந்து வரும் 'தொலைக்காட்சிக் கலாச்சாரத்தினால்' இன்று கிராமிய அன்னையரிடையேயும் இவ் வியாதி பரவத் தொடங்கியுள்ளது.



தமது மார்பழகு கெட்டுவிடும் என்பதால் சிசுவிற்குத் தாய்ப்பாலை ஊட்டாது புட்டிப் பாலினை கரைத்துப் பருக்கி குழந்தையினை ஏய்ப்பவர்கள் கூறும் நொண்டிச்சாட்டு, பால் தனக்குச் சுரப்பதில்லை என்பதாகத்தான் அமையும். இதே வேளை வேலைக்குச் செல்லும் அன்னையர் நேரம் கிடைப்பதில்லை என்று கூறுகின்றனர்.

உடலியக்கத் தொழிற்பாட்டின்படி ஒரு சிசு பேறாகி வரும் போது, அச் சிசுவிற்கான பால் உற்பத்தியாக்கம் கூட உடலில் ஆரம்பித்து விடுகின்றது என்பதனை அன்னையர் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தாய்ப்பால் சுரக்கவில்லை என்று சொல்வதைவிட பாலூட்டுவதற்கு முயற்சி செய்யவில்லை என்று கூறுவதே பொருத்தமானதாகும். இயல்பாக குழந்தை தன் வாயினால் தாயின் முலைக் காம்பினை சப்புகின்றபோது ஏற்படுகின்ற உணர்ச்சித் தூண்டல்களினாலேயே மார்பகங்களில் பால் சுரத்தல் ஆரம்பமாகிறது. குழந்தையானது தாயின் மார்பிற்கு தூண்டுதலை அளிக்கும்போது அத் தூண்டுதல நரம்புகள் வழியாக தலைமைச் சுரப்பிக்கு அளிக்கப்பட்டு பால் இறக்கம் நடைபெறும்.

சிசுவினை பாசத்தோடு மார்போடு அணைத்து திரும்பத்திரும்ப பாலூட்ட முயற்சிக்கும் போது நிச்சயம் பால் சுரக்கவே செய்யும். பால் சுரக்கவில்லை என நாமே முடிவுசெய்து ஒதுக்கிவிட்டால் பாலும் சுரக்காது போய்விடும். பாலூட்டும் அன்னையர் நல்ல சத்தான ஆகாரங்களை உண்பது அவசியமானது. நிறைவற்ற ஆகாரம்கூட பால் சுரப்பு வேகத்தினை மந்தப்படுத்துகின்றது. நலிந்த பொருளாதார நிலையிலுள்ள குடும்பத்து அன்னையரது மனோநிலையில் உள்ள பாலூட்டும் விருப்பு வசதியான குடும்பத்துப் பெண்களுக்கு இல்லை என்பதே உண்மையானதாகும்.

சில சகோதரிகளுக்கு பிறவியிலேயே முலைக்காம்பு உள்ளிழுக்கப்பட்ட நிலையில் (Retracted) காணப்படுவது பாலூட்டுவதற்குச் சற்று சிரமமானதாக அமைந்துவிடுகின்றது. மார்பகத்தில் முலைக் காம்புகள் தட்டையாக இருந்தால் அவற்றைச் சில பயிற்சிகள் மூலம் வெளிக் கொண்டு வரலாம். தினசரி மார்பகத்தின் அடிப் பாகத்தை விரல்களால் இழுத்து உருட்டிவிட்டு முலைக் காம்பினை இழுத்து நீவி வெளிக் கொணரும் பயிற்சியினை மேற்கொண்டால் தட்டையான முலைக் காம்புகளை வெளிக் கொண்டு வரலாம். நீராடும்போது இப் பயிற்சியைச் செய்வது சிறப்பானது.

இதேவேளை முலைக் காம்புகளைச் சுற்றி சிலருக்கு முடி வளர்வதுண்டு. மார்பகங்களின் வளர்ச்சி, அக்குள் முடிபோன்ற சார்புடை பாலினப் பண்புகள் (Secondary sexual characters) சரியாக அமைந்திருக்குமானால் இக் குறைபாட்டைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. முடி அகற்றிகள் கொண்டு மார்பகத்திலே காணப்படும் முடியினை அகற்றிவிடலாம்.

தாய்ப்பால் ஆரோக்கியமான ஒரு சமூகத்திற்கு அடித்தளம் அமைக்கின்றது என்பதனை அன்னையர் கருத்திற்கொண்டு, தாய்ப்பாலூட்டலினை தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும்.

**வர்ஷிகா - வைஷ்ணவி**

## அழகுக் கனவினை நனவாக்கிய ஹேமமாலினி



காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளத் தெரிந்தவர் நடிகை ஹேமமாலினி. ஏராளமான ரசிகர்களைக் கொண்டிருந்த ஹேமமாலினியின் மனதில் ஒரு அழகுக் கனவு நெடுநாளாக இருந்ததாம். தற்போது அதனை நனவாக்கியது மட்டுமல்ல வெற்றிகரமாக நடாத்தியும் வருகின்றார் ஹேமா.

தனது நடிப்புத் தொழிலின் மூலமாக சம்பாதித்த பணத்தினை அழகுசாதனப் பொருட்கள் தயாரிப்பில் முதலீடு செய்த ஹேமாவிற்கு தற்போது இலாபம் கொட்டுகிறது. தலைமுடிக்குப் பாவிக்கும் அழகுப் பொருட்களில் இருந்து நகப்பூச்சு வரையும் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவியுள்ள இவருக்கு வட இந்திய காலநிலை கை கொடுப்பதால் விற்பனையும் அமோகம்தான்.

தற்போது இந்தியாவில் மட்டுமே விற்பனையாகும் அழகுத் தயாரிப்புக்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்தவும் முயன்று வருகின்றார்.

பளபளக்கும் அழகுப் பொருட்களைப்போல உங்கள் மங்காத எழிலின் சூட்சுமம் யாது? என வினாவினால், முழுமையான சைவ போசனம், தோலிற்கு அழகுப் பூச்சு, வாரம் இரு முறை எண்ணைக் குளியல் அத்துடன் நடனப் பயிற்சி என்று சொல்லிச் சிரிக்கிறார் ஹேமா. இல்லை இல்லை பிரபல தொழிலதிபர் ஹேமமாலினி.

## மணமகள் இருக்கை தங்கம் தலையில் ஜொலிக்கும் கிரீடம் வைரம்

உலகின் முதற் பணக்காரர் புருணை சுல்தானின் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி முப்பது பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலானது. இவருக்கு இரண்டு மனைவியரும் பத்துக்



குழந்தைகளும் உள்ளனர். இவரது மூத்த மகளான இருபத்தாறு வயதுடைய இளவரசி ரஷீதா அண்மையில் திருமணம் செய்துகொண்டார்.

புருணை அரச மாளிகையில் கடந்த பத்து வருடங்களாக எதிர்பார்க்கப்பட்ட இத் திருமணம் மிகவும் ஆடம்பரமான முறையில் கொண்டாடப்பட்டுள்ளது. இளவரசி ரஷீதா தங்கச் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க வைரங்கள் இழைக்கப்பட்ட தலைக் கிரீடம் சூட்டப்பட்டது. தனது தாயாரான ஹஜ்ஜா சலூகாவினால் ஆசிர்வதிக்கப்பட்டு முடிந்தவுடன் மணவிழாவிற்கு அனுமதிக்கப்பட்டார்.

மண விழா எப்படி நடாத்தப்பட வேண்டும் என்பதை தம்பதிகளே சுயமாகத் தீர்மானித்து நடைமுறைப் படுத்தினர். உலகின் முக்கிய பிரமுகர்களும் சில அரச தலைவர்களும் கலந்துகொண்ட இம் மணவிழாக் கொண்டாட்டங்கள் சில நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெற்றன. விழாவின் ஒரு அம்சமாக பிரபல பாடகி விஸ்னி கூஸ்டனின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

உலகெங்கும் கொடிய போர்களாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் அடிப்படை வசதிகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் ஏராளமான மக்கள் வாடும்போது இவ்வாறான அரச திருமணங்கள் நடைபெறுவதானது அவர்களின் மாளிகைக் கதவுகளும், மனங்களில் மனிதாபிமானமும் மூடிக் கிடப்பதை புலப்படுத்துகின்றதோ என்னவோ?

வானிசைத் திலகங்கள் **மோகன்-ரங்கன்** இணைந்த **அப்சராஸ்** குழுவினரின்

**08.09.96** **இன்னிசை வார்ப்புகள்** ஞாயிறு மாலை 6 மணிக்கு


என். ரகுநாதன் (TMS குரல் பாடகர்)


மோகன்


வித்யாவினி மோகன்ராஜ்


ரங்கன்


ஜி. பாலசுப்பிரமணியம் (J.P. சந்திரபாபு குரல் பாடகர்)


பிறேமானந்


ரதிதேவி


'வானொலிக் குயில்' ராஜேஸ்வரி சண்முகம்


லில்லி மயில்வாகனம்


எஸ். செல்லத்துரை

பாரிசில்: **TRIANON** கலையரங்கில் - 80, Bld Rouchechouart, 75018 Paris. M°: Anvers - 08.09.96

14.09.96 Fredericia, Denmark

20.09.96 வெள்ளி மாலை 6.30 மணிக்கு Samfunns-Huset. Cont: Drammen / Ravi

05.10.96 Essen, Germany Cont: Rajah

12.10.96 London

Ramy Records வழங்கும் 28-29-30-31.9.96 Swiss

13.10.96 Palermor, Italy

விபரங்கள் அனைத்திற்கும்: Tel: (33-1) 39 93 30 96 / Fax: (33-1) 39 86 55 08



**காணத் தயாராகுங்கள்**

J.R.Productions

*ராசநாயகம் ஜேசுதாசன் வழங்கும்*

# மௌனம்



**01.09.96 ஞாயிறு**

**பி.ப. 3.00 மணி / 6.00 மணி**

**இரு காட்சிகள்**

***Cinema Trianon***


*80, Bld Rochechourt,*

*75018 Paris - M°: Anvers*

# பத்தோடு பதினொன்று

## மீன்தொட்டித் தொலைக்காட்சி

வீடுகளில் மீன் வளர்க்கப் பலருக்கும் ஆசைதான். ஆனால் அவைகளுக்கு உணவிடுவதற்கும் அதன் தொட்டியைக் கழுவுவதற்கும் நேரமிருப்பதில்லை. இப்படியான கஷ்டங்களை கவனத்தில் கொண்டு ஜப்பானிய நிறுவனம் ஒன்று புதிதாக தயாரித்துள்ள மீன் தொட்டியை கழுவிச் சுத்தப்படுத்த வேண்டிய அவசியமோ மீன்களுக்கு உணவிட வேண்டிய அவசியமோ இல்லை.



காரணம் அது தயாரித்துள்ளது உண்மையான மீன் தொட்டியோ, அதற்குள் இருப்பது உண்மையான மீன்களோ அல்ல. Sakanna Hakkei என அழைக்கப்படும் இது ஒரு தொலைக்காட்சிப் பெட்டியே. இதற்குள் வைக்கப்பட்டுள்ள லேசர் படக் கருவி மூலம் மீன் காட்சிகள் ஓடவிடப்படுகின்றன. பார்ப்பதற்கு உண்மையான மீன் தொட்டியைப்போல் காட்சியளிக்கும் இதற்கு ஜப்பானில் பெரும் கிராக்கியாம். 32 அங்குலமான இத் தொலைக் காட்சியின் விலை 15,000 அமெரிக்க டொலர் அல்லது 200 டொலர் மாத வாடகையாம். இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொலைக்காட்சிகள் விற்பனையாகியோ அல்லது வாடகைக்கோ விடப்பட்டுள்ளதாக அதன் தயாரிப்பாளர்கள் கூறுகிறார்கள்.

# குளிர்பானப் போட்டி விண்வெளியிலுமா!




உலகின் மிகப் பெரிய குளிர்பானத் தயாரிப்பாளர்களான அமெரிக்க கொக்கோகோலாவும், பெப்சியும் தமது வர்த்தக விஸ்தரிப்புக்களுக்கான நடவடிக்கையை விண்வெளியிலும் ஆரம்பித்திருக்கிறார்கள். கொக்கோகோலா நிறுவனத்தினர் குளிர்பான விநியோக கருவியொன்றை விசேடமாகத் தயாரித்து 'NASA' வின் விண்வெளி ஆய்வுக்கான 'ENDEAVOUR' இல் பொருத்தியுள்ளனர். இனி வரும் காலங்களில் ஆய்வாளர்களின் தாகத்தைத் தீர்க்கும் என்பதைவிட தமது குளிர்பானங்களுக்கான விளம்பரமாகவே இக் கருவியை இந் நிறுவனம் அமைத்துள்ளது. ஆனால் இக் கருவி விண்கலம் பயணம் செய்யும்போது சரியான முறையில் தொழிற்படுமா என்பது சந்தேகமே. இதேவேளை மற்றைய நிறுவனமான பெப்சி இன்னுமொருபடி மேலேபோய் தமது குளிர்பான டப்பா வடிவிலான மாதிரியொன்றை தயாரித்து ரஷ்ய விண்வெளி நிறுவனம் ஒன்றினூடாக விண்ணுக்கு அனுப்பப்பட்டு மிர் விண்வெளி ஆய்வு நிறுவனத்துடன் கட்டப்பட்ட நிலையில் விண்வெளியில் மிதந்துகொண்டிருக்கிறது.




ரஷ்ய ஆய்வாளர்களால் விண்வெளியில் படமாக்கப்படும் இந்த 'பெப்சி' விளம்பரப் படம் அடுத்த வருடம் முதல் உலகம் முழுவதும் திரையிடப்படவிருக்கின்றது. இந்த பெப்சி விளம்பரமே அண்டவெளியில் எடுக்கப்பட்ட முதலாவது விளம்பரப் படமாக அமையவிருக்கின்றது.


ஜேர்மனி RECKLINGHAUSEN, DATTELN இல்

# மாபெரும் திறப்புவிழா !!

Y&S

ஏசியன் சொப்

Recklinghausen, Oer Erkenschwick, Castrop Rauxel, Ahsen, Waltrop, Olfen, Marl, Haltern, Selm, Herten, Lunen, Datteln மற்றும் டற்றெல்ன் சுற்றாடலிலுள்ள நகரங்களில் வாழ் தமிழ் மக்களே, நண்பர்களே, வாடிக்கையாளர்களே. நீங்கள் அனைவரும் இலகுவாக வந்தடையக்கூடிய Datteln வியாபாரக் கேந்திர நிலையத்திலுள்ள Wittener Str-65A இல்

**09.09.1996 திங்கட்கிழமை பகல் 1 மணிக்கு**

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திட
சகல வசதிகளுடனும் ஆரம்பிக்கவுள்ளோம்.

எங்களிடம்

பட்டுப் புடவைகள், ரெடிமேட் உடுப்புக்கள், சேட், டெனிம் வகைகள், அன்பளிப்பு, அலங்காரப் பொருட்கள், எவர்சில்வர் பொருட்கள், மளிகைப் பொருட்கள், மரக்கறி, கடலுணவு, ஓடியோ, வீடியோ, அசல் 22 கரட் தங்கநகைகள்

அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

Wittener Str-65A, 45711 Datteln
Tel: 020 1480138 - Fax: 07425/8415

ஈழமுரசு
Eelamurasu Weekly

# பரீட்சைக்காக போர்நிறுத்தம் ஓநாய்கள் அழுகிறது

மீண்டும் போர் நிறுத்தங்களும் பேச்சுவார்த்தைகளும் வரும் என நாம் முன்னர் குறிப்பிட்டது போலவே கால வரையறையுடன் கூடிய போர் நிறுத்தம் ஒன்றுக்கு அரசாங்கம் செஞ்சிலுவைச் சங்கத்தை அணுகியுள்ளது. இந்தப் போர் நிறுத்தத்தை வன்னிப் பகுதியில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையை நடாத்துவதற்கான அவகாசமாக காரணத்தையும் தெரிவித்துள்ளது. செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் விடுதலைப் புலிகளிடம் தொடர்பு கொள்ளும்படி அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பரீட்சையை நடாத்துவதன் மூலம் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தாம் மிகவும் அக்கறை கொண்டவர்களாக வெளி உலகிற்கும் தமிழ் மக்களுக்கும் காட்ட சந்திரிகா அரசு விரும்புகிறது என்பது ஒருபுறமிருக்க திடீரென தமிழ் மாணவர்கள் கல்விமேல் சந்திரிகா அரசுக்கு இந்தளவுக்கு கரிசனை வர வேறு காரணங்களும் இல்லாமல் இல்லை.

முக்கியமாக முல்லைத்தீவு இராணுவப் படைத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான படையினர் அழித்தொழிக்கப்பட்டு விட்டனர். பெருந்தொகையான ஆயுத தளவாடங்கள் புலிகள் எடுத்துச் சென்றுவிட்டனர். நவீனரக கனரக ஆயுதங்களும் இதில் அடக்கம். இந்த நிலையில் ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி நோக்கி நடாத்திய 'சத்ஜய' இராணுவத் தாக்குதல் நடவடிக்கையும் விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பு காரணமாக பிசு பிசுத்துப் போய்விட்டது. அச் சமரிலும் குறிப்பிட்டளவு கனரக தாங்கிகளை விடுதலைப் புலிகள் அழித்து விட்டனர். யாழ் குடா நாட்டிலும் தொடர்ச்சியாக அங்கொன்றும் இங்கொன்றுமாக படையினர் மீதான தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

குடா நாட்டுக்கு வெளியே இழந்த படையினரின் வெற்றிடங்களை நிரப்பி மேலதிகமான படையினரைக் கொண்டு சென்று சேர்ப்பதற்கும், இராணுவத் தளபாடங்களை அங்கு அனுப்பி வைப்பதற்குமான தரை வழிப் பாதைகள் எதுவும் இல்லை. இந் நடவடிக்கைகளை விமான மூலம் செய்வதற்கும் தற்போதய சூழலில் சாத்தியம் மிகவும் குறைவாகவே உள்ளது. இருக்கின்ற ஒரே வழி கடல் மார்க்கமான தொடர்புதான். அதுவும் முல்லைத்தீவு தாக்குதலுக்குப் பின் மிகவும் கடினமான ஒரு பாதையாகிவிட்டது. இந் நிலையில் களத்தில் இருக்கின்ற படையினரும் தொடர்ச்சியான யுத்த நடவடிக்கையால் சோர்வடைந்துள்ளதுடன், பலர் கொல்லப்பட்டும் கொண்டிருப்பதால் விரக்தியடைந்தும் உள்ளனர். புதிய படையணியைக் களத்தில் இறக்கி ஏற்கனவே உள்ள படையணிக்கு ஓய்வு கொடுக்க வேண்டிய அவசியம் இராணுவத் தரப்பில் எழுந்துள்ளது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் வெளியில் இருந்து புதிய படையணிகளை கொண்டு வந்து களத்தில் இறக்குவதற்கான சாத்தியங்கள் எதுவும் இல்லை.

இந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்கான வழியாகவே வடபகுதி மாணவர்களுக்கு பரீட்சை நடாத்த வேண்டும், அதற்கான போர் நிறுத்தம் ஒன்று அவசியம் என்ற ரீதியில் அரசு காய் நகர்த்துகின்றது. உண்மையில் வடபகுதி மாணவர்களின் பரீட்சையை நடாத்துவதற்காக ஒரு போர் நிறுத்தம் அவசியம் என அரச தரப்பில் கூறப்படுவது ஒரு இராணுவத் தந்திரோபாயத்தை உள்ளடக்கியதே.

தமிழ் மாணவர்களின் கல்வி பற்றியோ அவர்களின் உயிர் காத்தல் பற்றியோ எந்தவிதமான அக்கறைகளும் அற்றிருந்த, இருந்து கொண்டிருக்கின்ற சந்திரிகா அரசாங்கம் முன்பு பாடசாலைகள் மீது குண்டு வீசிக் கொன்றொழித்ததையும், மாணவர்களைக் கைது செய்து சித்திரவதை செய்வதையும், சுட்டுக் கொல்வதையும், அவர்களுக்கான உணவு, உடை, உறைவிடம், மருத்துவம், எரிபொருள் என வாழ்வின் அனைத்து அடிப்படைத் தேவைகளையும் மறுத்துவிட்டு இப்போது அவர்களின் எதிர்காலம் பற்றி திடீர் கரிசனையுடன் அக்கறை காட்ட முற்படுவது ஆசை காட்டி மோசம் செய்யவே என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆடுகள் நனைந்தால் ஓநாய்கள் அழுது கொண்டுதானிருக்கும்.

# சூரியக்கதிருக்கு பட்டாசு கொழுத்தியவர்கள் முல்லைக்கு காற்றுப்போன பலூனாகினார்கள்

**கேள்வி:- முல்லைத்தீவில் ஏன் புலிகளை எதிர்க்கவில்லை?**

**பதில்:- அங்கு தோட்டாக்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது.**

சிறீலங்காவின் படையணிக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளுக்கு அரசு பல வழிகளிலும் பிரச்சாரம் செய்து வருகின்றது. எனினும் அரசு எதிர்பார்த்த அளவுக்கு சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன்வரவில்லை. தற்போது இராணுவத்தில் பெரும் ஆட்பற்றாக்குறையும் நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் இருந்து வெளியாகும் 'லங்காதீப' எனும் சிங்களப் பத்திரிகை இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் சரத் முனசிங்கவை பேட்டி கண்டிருந்தது. அப் பேட்டியில் இராணுவத்துக்குத் தோன்றியுள்ள நெருக்கடிகளை சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் இருந்து சில பகுதிகள்;

**கேள்வி: சிலர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்கிறார்கள். வேறு சிலர் தொடர்ந்து நடத்த வேண்டும் என்கிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

சரத்:- இந்த யுத்தத்தை 1991ம் ஆண்டு புலிகள்தான் ஆரம்பித்தார்கள். இந்த யுத்தத்தில் வெல்வதற்கு களத்தில் சண்டையிடும் இராணுவத்தினரால் மட்டுமே முடியும். அவர்களைத் தவிர வேறுயாராவது இதைச் செய்ய முடியாது. அவர்களை உற்சாகப்படுத்தும் செயற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இன்று தீர்வுத் திட்டம் வேண்டாம், சமாதானமும் வேண்டாம் என்றுதானே அநேகர் கூறுகிறார்கள். அப்படிக் கூறிவிட்டு படையினரின் மனோதைரியம் குன்றும்படியான கதைகளைச் சொல்கின்றார்கள். இப்படியான நிலையில் தான் இராணுவம் இன்று களத்தில் நிற்கின்றது.

**கேள்வி:- அப்படியானால் யுத்தத்தை தொடர்ந்து நடந்த எவ்விதமான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றீர்கள்?**

சரத்:- இராணுவத்தினரை சண்டையிடச் செல்ல அனுமதியுங்கள். அவர்கள் பற்றிய விமர்சனங்களை முன்வைப்பதை விடுங்கள். விமர்சகர்களால் ஆலோசனைகளை மட்டும்தான் சொல்ல முடியும். ஆனால், அவர்களுக்கு கள அனுபவம் இல்லை. அப்பபடியான நிலையில் அவர்கள் எப்படி சரிபிழை பற்றிக் கூற முடியும். படையினருக்கு ஆள் பற்றாக்குறை உள்ளது. அதனை நிவர்த்தி செய்யும் வழிகளில் இந்த விமாசகர்கள் செயலாற்ற முடியும்.

**கேள்வி:- இந்த யுத்தத்தை தொடர்ந்து நடத்த இப்போது இருக்கும் இராணுவம் போதாதது என்று கூறுகிறீர்களா?**

சரத்:- உண்மையும் அதுதான். இன்று 100 பேர் தேவையான ஒரு இடத்துக்கு 25 பேரை வைத்துக்கொண்டுதான் நாம் யுத்தம் செய்கிறோம். எமக்குத் தேவையான 100 பேர்களும் இருந்தால் யுத்தத்தை எப்படி நடாத்துவது என்பது எமக்கு நன்கு தெரியும். யாரும் அதைப்பற்றி எமக்கு அறிவுறுத்தத் தேவையில்லை.

**கேள்வி:- முப்படைகளிலும் ஒரு இலட்சம் பேர் உள்ளனர்தானே?**

சரத்:- ஒரு இலட்சம் இருந்தாலும் அதில் 15 ஆயிரம்பேர் தப்பி ஓடிவிட்டனர். அதில் 4200 பேர் திரும்பி வந்துள்ளனர். அதைவிட இராணுவத்தின் பல துறைகளில் பலர் கடமையாற்றுகிறார்கள். அவர்கள் எல்லோரையும் வைத்துக்கொண்டு போரை நடத்த முடியாது.

**கேள்வி:- முல்லைத்தீவில் புலிகள் தாக்கியதை பார்க்கும்போது இனியும் படையிற் சேர இளைஞர்கள் முன்வருவார்கள் என எண்ணுகிறீர்களா?**

சரத்:- அப்படியானால் தாங்கள் வெற்றிபெற்ற போதெல்லாம் வந்து சேர்ந்தார்களா? நாங்கள 'சூரியக் கதிர்' இன் மூலம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினோம். தோல்வியடையும் போது படையில் சேர வர மாட்டார்கள் என்றால் வென்றிருக்கும்போது வந்திருக்க வேண்டும் அல்லவா.

இங்கு பிரச்சனை அதுவல்ல; 'சூரியக் கதிர்' மூலம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது நாடு முழுவதும் பட்டாசு கொழுத்தி சந்தோஷப்பட்டார்கள். ஆனால், முல்லைத்தீவுத் தோல்வியின் பின் நாடு முழுவதும் காற்றுப்போன பலூன் போல் நிலைமை வந்துவிட்டது. யுத்தம் முடிந்தால் எல்லாப் பிரச்சினைகளும் முடிந்துவிடும். ஆனால் இன்னமும் முடியவில்லையே.

களத்தில் உள்ள படையினருக்கு மனதைரியம் கொடுப்பதுபோல் தென்பகுதியில் உள்ள செல்வந்தர்கள், கல்விமான்களின் பிள்ளைகள் படையில் சேர வேண்டும். அப்படியான தொரு நிலைமையை எதிர்பார்த்தே அங்குள்ள படையினர் ரூபவாஹினியையும் பத்திரிகையையும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி:- முல்லைத்தீவில் ஏன் விடுதலைப் புலிகளை எதிர்த்துத் திருப்பித் தாக்கவில்லை?**

சரத்:- கட்டளையிடும் அதிகாரி காயமடைந்து விட்டார். அதைவிட முகாமில் தோட்டாக்களுக்கும் தட்டுப்பாடு நிலவியது.

**கேள்வி:- முல்லைத்தீவு பற்றி உண்மையை மறைத்துப் பேசுவதாக எல்லோரும் கூறுகிறார்களே?**



சரத் முனசிங்க

சரத்:- இறந்தவர்களின் உடலை கண்ணால் காணாமல் அவர்கள் இறந்ததாக நாம் எப்படிக் கூற முடியும்?

**கேள்வி:- முல்லைதீவிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான ஆயுத தளபாடங்களை புலிகள் கொண்டு சென்றனரா?**

சரத்:- இதுபற்றி பத்திரிகையில் வெளியான பத்திரிகைச் செய்திகளில் எதுவிதமான உண்மைகளும் இல்லை. அவ்வளவு ஆயுதங்கள் அங்கிருக்கவில்லை. இருந்த ஆயுதங்களையும் எமது வீரர்கள் சேதப்படுத்தி விட்டார்கள். மிகுதியானவற்றை பதுக்கி வைத்துள்ளனர்.

**கேள்வி:- புலிகள் யுத்த தாங்கிகளைக் கொண்டுசென்றதாக சொல்கிறார்களே?**

சரத்:- யுத்த தாங்கி எதுவும் அங்கு இருக்கவில்லை. 3 பவல் கவச வாகனங்கள் மட்டுமே இருந்தன.

**கேள்வி:- நீண்ட தூர ஏவுகணைகளை எடுத்தார்களா?**

சரத்:- 122 மி.மி. பிரங்கிகள் இரண்டு இருந்தது. ஆனால் அவற்றை எமது வீரர்கள் நாசப்படுத்தி விட்டார்கள்.

**கேள்வி:- முல்லைத்தீவு முகாம் அகற்றப்பட்டபின் கடற்படையினருக்கு பாதகமான சூழல் ஏற்படவில்லையா?**

சரத்:- ஏற்படலாம். ஆனால் அதற்கான எதிர் நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகின்றோம். அதனை வெளியில் சொல்ல முடியாது.

**கேள்வி:- முல்லையில் கைப்பற்றிய ஆயுதங்கள் மூலம் புலிகள், பிற இராணுவ முகாம்களைத் தாக்கலாமல்லவா?**

சரத்:- பூநகரியில் யுத்த தாங்கியைக் கொண்டு சென்றார்கள்; கொண்டச்சியில் பவல் கவச வாகனத்தைக் கொண்டு சென்றார்கள்; மாங்குளம், கொக்காவிலில் பெருமளவு ஆயுதங்களை எடுத்துச் சென்றார்கள், அப்படியிருந்தும் நாம் யாழ்ப்பாணத்தைப் பிடிக்கவில்லையா?

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

## முதலாம் ஆண்டு நினைவு



### லெப். வேங்கை மார்பன்

இராஜேந்திரம் விமலசேகர் (விமலன்)

அன்னையின் மடியில் 31.10.1973 — மணலாறு மண்ணில் 28.07.1995

*பெற்றோர்க்கும் உற்றார்க்கும்*
*விமலனாய் வாழ்ந்து*
*வேங்கைகள் அணியிலோர்*
*வீரனாய்ச் சேர்ந்து*
*மணலாறு மண்ணிலோர்*
*வரலாறு படைத்து*
*மாவீரர் வரிசையில்*
*உன்னையுமிணைத்தாய்*
*மக்கள் மனங்களில்*
*என்றும் நிலைத்தாய்*

தகவல்: இராஜசேகர் (பாரிஸ்) - 40 45 73 75

(ADV)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் சேரன்

(ஜயாத்தம்பி குமாரேந்திரன் - எழுதுமட்டுவாள்)

பயிராய்: 02.03.1969 விதையாய்: 22.08.1994

*பல களம் கண்ட சேரனே*
*எமது மக்களின் விடிவிற்காக*
*பயத்தை வென்று சுயத்தை கொன்று*
*சாவை அணைத்து சாகாவரம் பெற்றாய்*
*சத்தியம் உனக்கு சாட்சி சொல்லும்*
*தர்மம் நீதி சொல்லும்*
*சரித்திரம் உனது இலட்சியத்தை சாகவிடாது.*

*உனது உன்னதப் பாதையில்*
*புலிகளின் வீரப் பயணம் தொடர்கிறது.*

பூநகரி வரலாற்றுப் போர்க்களத்தில் அவனுடன் விதையாகி வீழ்ந்த உயிரிலும் மேலான வீரர்களுக்கு எமது கனத்த இதயக் காணிக்கை சேரனின் நினைவுடன் கலப்போம்.

தாய், தந்தை,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்

தகவல்: குமாரதாஸ் (பிரான்ஸ்)
Tel: 39 80 81 47 / 47 64 46 56

(ADV)

## 6ம் மாத நினைவஞ்சலி



### பிரேமநாயகி தம்பிப்பிள்ளை

தோற்றம்: 30.03.1970 மறைவு: 27.02.1996

பாலூட்டி சீராட்டி பக்குவமாய் வளர்த்தெடுத்து
பல்கலையும் கற்க வைத்து பாவையுன் அறிவு பெருக்கி
காவலனையே கணவனாக கைப்பிடித்து தந்துவிட்டு
கண்ணீரால் அர்ச்சித்து கதறுகிறோம் உனை நினைத்து
இவ்வுலகில் இனி வேண்டாம்
எவ்வுயிர்க்கும் உன் நிலைமை கண்மணியே - இது
கண்ணீர் அஞ்சலி அல்ல, கண்ணீர் அருவி

உன் பிரிவால் துயருறும் அப்பா, அம்மா
மற்றும் சகோத, சகோதரிகள்

கிரியைகள் நடைபெறும் இடம்:
Haus Ueltmann Restaurant
*Mettinger Str-76, 49492 Westerkappein,*
*Langenbruck, Germany. Tel: 05404 / 2297*

தகவல்: S. Kanthan
*Kappelisacker Str - 111, 3063 I Ttigen,*
*Switzerland - Tel: 031 / 9220223*

(ADV)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### செல்வி சுஜிதா புவனேஸ்வரன்

மலர்வு: 30.05.1980 உதிர்வு: 26.05.1993



### *தமிழ் மகளே வாராயோ?*

*கங்குல் விலகி வர*
*காலை மலர்ந்து வர*
*மங்களம் பொங்கிவர*
*மங்கையே நீ எங்கு சென்றாய்*

*தங்கையே உன் புகழ்*
*தரணியெல்லாம் மணம் பரப்ப*
*தமிழீழ மக்களெல்லாம்*
*தங்கை புகழ் பாடிவர!*

*உத்தமியே எங்கு சென்றாய்*
*உருகுதம்மா எம் நெஞ்சம்*
*உன் நெஞ்சம் உருகாதோ - எம்*
*உள்ளத்தைப் பாராயோ!*

*தங்கையைக் காணாது*
*தமிழீழ மக்களெல்லாம்*
*தவிக்கின்றார் தங்கையே*
*தமிழ் மகளே வாரயோ!*

*சோகத்தால் சொக்கிப்போய்*
*சொல்ல மொழி ஏதுமின்றி*
*செல்ல மொழிதேடி நிற்கும்*
*சோதரரைப் பாராயோ!*

*சோதரியே நீயின்றி*
*சோதனையில் வீழ்ந்து விட்டேன்*
*சொர்க்கத்தைத் தேடி நீ*
*சொல்லாமல் சென்ற தென்ன*

*இறப் பென்ற பிரிவு வந்து*
*மூவாண்டு சென்ற தம்மா*
*இறப்பில்லை எம் நெஞ்சில்*
*இருப்பதுந்தன் இன்முகமே.*

தங்கைக்குக் கவிதை பாடி தமிழீழ
விடுதலைக்கு நன்னுயிர் தந்த வீரவேங்கை
சுபாஜினி கனகரத்தினம்.

*என்றும் உனது நினைவுடன்*
*அப்பா, அம்மா, சகோதரிகள்*
52441 Linnich, Germany.

(ADV)

# பாலியல் வன்முறையை எதிர்த்த மாணவி கொலை

கடந்த 15.08.96 அன்று மட்டுவில் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்த 18 வயது மாணவியின் மீது பாலியல் வன்முறையை மேற்கொள்ள முனைந்துள்ளனர்.

இராணுவத்தினர் மேற்கொண்ட இம் மிருகத்தனத்தை அம் மாணவி எதிர்த்தபோது, இராணுவத்தினர் அவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர்.

இதேபோல் தென்மராட்சிப் பகுதிகளில் பல்வேறு இடங்களிலும் பல வீடுகளில் இராணுவத்தினர் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளை மேற்கொள்ள முயற்சித்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## மாணவர்கள் இல்லாமல் பல்.கழக பரீட்சை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள்எவரும் இல்லாமல் வெறுமையான மண்டபங்களுக்குப் பரீட்சை நடாத்தப்படுகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கைதியாக்கப்பட்டுள்ள யாழ் பல்கலைக்கழக உப வேந்தர், பெரும்பாலான மாணவர்கள் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள நிலையில் அரசினதும் இராணுவத்தினதும் அழுத்தங்கள் காரணமாக, வெறுமையான மண்டபங்களில் பரீட்சைகளை நடாத்திக் கொண்டிருக்கின்றார் எனத் தெரிய வருகிறது.

## விசர்நாய் கடித்து 5 பேர் மரணம்

மல்லாவிப் பகுதியில் விசர் நாய் கடிக்கும், பாம்பு கடிக்கும் மூன்று நாட்களில் ஐந்து பேர் மரணமடைந்துள்ளனர். இவற்றுக்கான தடுப்பு மருந்துகள் இல்லாமையாலேயே இம் மரணங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது.

வன்னிப் பகுதியில் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துப் பொருட்கள் கொண்டுசெல்வதை இராணுவம் தடை செய்துள்ளதால் அங்கு மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### இராணுவ வாகனத்தை..

வில் பெண்கள் இணைந்து நேருக்கு நேர் நின்று மோதத் தொடங்கியுள்ளனர்.

மேற்படி சம்பவம் நடைபெற்று மூன்று நாட்களின் பின் கைதடிப் பகுதியில் வைத்து மூன்று இளைஞர்கள் முகமூடியால் காட்டிக் கொடுக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டார்கள். அப்போது அப்பகுதியில் உள்ள பெண்கள் இராணுவ வாகனத்தைச் சூழ்ந்துகொண்டு இராணுவத்தை நகரவிடாமல் மறியல் செய்தனர். அந்த அப்பாவி இளைஞர்கள் மூவரையும் கைதுசெய்து கொண்டு செல்வதைவிட தம்மை சுட்டுக் கொல்வதே மேல் என அவர்கள் இராணுவத்துடன் வாக்குவாதம் புரிந்ததைத் தொடர்ந்து வேறு வழியின்றி அவ் இளைஞர்கள் மூவரையும் இராணுவத்தினர் உடனடியாக விடுதலை செய்துள்ளனர். இது அப் பெண்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகின்றது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பௌத்தபிக்குமாருக்கு...

தைக் கற்றவர்களை இங்கிருந்து உருவாக்க முடியும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

இது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.நீலன் திருச்செல்வம் உரையாற்றுகையில் பிக்கு பல்கலைக் கழகங்களில் சங்க வரையறைகளுக்குள் பிக்கு பட்டதாரிகளுக்கு சிருஷ்டிப்புத் திறனுடன் செயற்படத் தக்க கல்வி முறையை அரசாங்கம் ஆரம்பிக்காவிடில் பலர் தமது அங்கிகளைக் கழற்றி விடுவார்கள் எனவும், மத சார்பற்ற உலகில் பல சந்தர்ப்பங்கள் அவர்களுக்காக காத்திருக்கின்ற எனவும் அதனால் பிக்கு பல்கலைக் கழகம் அவசியமானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கொழும்புத் தமிழ்க்...,

கொண்டு இக் குழுக்களையும் கழற்றி விட அரசு தீர்மானித்திருப்பதாலேயே அரசாங்கத்திற்கு 'அன்புத் தொல்லை' தரவே இந்தச் சத்தியாக்கிரகம் என கொழும்பில் உள்ள தமிழ் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### அரச அலுவலகத்தில்...

தில் குண்டு செயலிழக்க வைக்கும் படையினருடன், விமானப்படை, விசேட அதிரடிப்படை இராணுவத்தினர் என அனைத்து பிரிவினரும் அந்த திணைக்கள வளாகத்தை சல்லடை போட்டுத் தேடினர். அலுவலக மேசைகள், மேசை லாச்சிகள், அலுமாரிகள் என எல்லா இடங்களும் அக்குவேறு ஆணி வேறாக சோதித்தும் குண்டு எதுவும் கிடைக்கவில்லை. இறுதியில் அது வெறும் புரளி எனத் தெரிய வந்தது.

ஆனால் அலுவலகத்தை விட்டு வெளியேறிய ஊழியர்களில் பெரும் பகுதியினருக்கு அதில் நம்பிக்கை ஏற்படவில்லை. அவர்களில் பலர் சுகயீன லீவில் வீட்டுக்குச் சென்று விட்டனர். வேலைக்கு திரும்பி வந்த ஏனையோரும் கூட எதுவும் நடந்தால் ஓடுவதற்குத் தயாரான நிலையிலேயே வேலை செய்தனர்.

## 1ம் ஆண்டு வீரவணக்கம்

தாயின் மடியில் 20.07.1974



தாயக மண்ணில் 28.07.1995

### 2ம் லெப். வேங்கை
(வேலுப்பிள்ளை ரஞ்சன்)

28.07.95 அன்று மணலாற்றில் நடந்த சமரில் வீரச்சாவை தழுவிக் கொண்ட 2 ஆம் லெப்டினன்ட் "வேங்கை" வேலுப்பிள்ளை றஞ்சன் அவர்களுக்கு றைலாந் வாழ் தமிழீழ மக்களின் அஞ்சலிகள் நாளை மலரும் தமிழீழத்திலே கனவு நினைவாகும்.

*தகவல்: நவரட்ணம்*
*மன்காம், ஜேர்மனி*

– ஜெர்மனி றைலாந் தமிழீழ மக்கள்

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கொக்குவிலில்...

இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தபோது, இராணுவத்தினரின் பிறிதொரு படைப்பிரிவு மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளதாகவும் அதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டு பலர் படுகாயமடைந்ததாகவும், போராளிகள் தரப்பில் இழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.


# மாபெரும் ஆர்ப்பாட்ட ஒன்றுகூடல்

## 02.09.1996 (திங்கள்)

மாலை 2.00 மணி – 6.00 மணி

இடம்: Place St. Augustin (M°: St. Augastin

இரண்டு லட்சம் மக்களை அகதிகளாக்கிய கொடும் துயரம். எமது இனத்தை அழித்துவிட நிற்கும் சந்திரிகா அரசின் கோர வெறித்தனத்தை உலகின் முன் ஓங்கி ஒலிப்போம் வாருங்கள். உணவையும், மருந்தையும் தடை செய்து தமிழ் இனத்தை அடிமைகொள்ள நிற்கும் சிறீலங்கா பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பை தோலுரித்துக்காட்ட அணி அணியாய் திரண்டு வாருங்கள்.

எமது மண்ணின் வளமும், எமது மக்களின் வாழ்வும் இனவெறியாளர்களின் கால்களில் மிதிபடச் சகித்திருப்போமா?

மேலதிக தொடர்புகட்கு: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு – 43 58 11 42

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 40 37 63 63
Fax: 40 37 64 64

உங்கள் தேவையறிந்து எங்களின் சேவை
Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 35 10
Fax: 42 59 35 00
K.T.C. Jewels
193, Rue du Fg. S'Denis,
75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 42 05 41 36

குமார்ஸ்
Kumars
Jewels S.A.R.L.
80, Bld. Barbes,
75018 Paris.
M°: Marcadet
Poissonniers
Tél: 42 59 11 52
Fax: 42 59 35 00

# கொக்குவிலில் இராணுவம் சுற்றிவளைப்பு 600 பேர் கைது செய்யப்பட்டனர்

கடந்த 19.08.96 திங்கட்கிழமை கொக்குவில் கிழக்குப் பிரதேசத்தைச் சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் சுமார் 250 பெண்கள் உட்பட 600 பேரைக் கைது செய்துள்ளனர். இவர்களில் மாணவ மாணவிகளும் அடங்கியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பல மாணவிகள் சுட்டுக் கொல்லப்பட்டோ, அல்லது காயப்படுத்தப்பட்டோ உள்ளனர். இது பற்றி சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் 250 பெண்களும், 350 ஆண்களும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தச் சுற்றிவளைப்பின் போது பல பொதுமக்கள் காயமடைந்ததாகவும், அவர்கள் யாழ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சுதந்திரமான தகவலின்படி இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் தேடுதல் நடவடிக்கை இதுவென்றும், பெரும்பாலும் பதினைந்து வயது தொடக்கம் முப்பது வயதுக்கு உட்பட்டவர்களே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் எனவும் அறியப்படுகிறது.

இதேவேளை, கொக்குவில் கிழக்குப் பகுதி முழுவதையும்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## அரச அலுவலகத்தில் குண்டு புரளி படையினர் வரழைக்கப்பட்டு சோதனை

கொழும்பிலுள்ள அரச அலுவலகம் ஒன்றில் வெடிகுண்டு இருப்பதாக புரளி கிளம்பியதால் கடந்த 22.08.96 வியாழக்கிழமை பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

கொழும்பு சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வெடி குண்டு வைக்கப்பட்டிருப்பதாகவும் இன்னும் ஒரு மணி நேரத்தில் அந்தக் குண்டு வெடிக்கப் போவதாகவும் மேற்படி திணைக்கள் ஆணையாளருக்கு அனாமதேய தொலைபேசி அழைப்பொன்று வந்தது.

உடனடியாக பாதுகாப்புப் படையினருக்கு தகவல் தெரிவித்த ஆணையாளர், ஊழியர்களுக்கு விசயத்தை சொல்லி அவர்களுடன் அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேறிவிட்டார். சிறிது நேரத்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## பௌத்த பிக்குமாருக்கு தனியான பல்கலைக்கழகம்

(கொழும்பு)

பௌத்த மதப் பிக்குகளுக்கு தனியானதொரு பல்கலைக் கழகத்தை அமைக்க சிறீலங்கா அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக அநுராதபுரத்தில் உள்ள புத்த சிராவக தர்மபீடத்தை பிக்குகளின் பல்கலைக்கழகமாக்கும் சட்ட மூலம் ஒன்று பாராளுமன்றத்தில் உயர் கல்வி அமைச்சர் றிச்சரட் பத்திரனவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பௌத்த கோட்பாடுகளைக் கற்றுவரும் பிக்குமார் பிற பல்கலைக் கழகங்களுக்குள் நுழைவதால் அங்கு தனியாக பௌத்த கோட்பாடுகளைக் கற்பதைவிட, வேறு பயிற்சி நெறிகளில் தான் அவர்கள் அதிகமாக ஆர்வம் காட்டுகின்றார்கள். பிக்கு பல்கலைக் கழகத்தை அமைப்பதன் மூலமே பௌத்த மதத்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கொழும்புத் தமிழ்க் குழுக்கள் சத்தியாக்கிரகம் செய்யப் போகின்றனவாம்?

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் யுத்தத்தை நிறுத்தி விரைவில் சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கோரி தமிழ்க் குழுக்கள் சத்தியாக்கிரகத்தில் இறங்கப் போவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வவுனியாவிலும் கிழக்கு மாகாணத்திலும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களில் இந்தச் சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ள இக் குழுக்கள் தீர்மானித்துள்ளதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் அரசியல் தீர்வு என்று சொல்லிக் கொண்டு இந்தத் தமிழ்க் குழுக்களை பாவித்துவிட்டு தற்போது இராணுவத் தீர்வை மட்டுமே நடைமுறைப்படுத்திக்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## இராணுவ வாகனத்தைச் சூழ்ந்து பெண்கள் நடத்திய போராட்டம்

தென்மராட்சிப் பகுதியில் இளைஞர்களைக் கைதுசெய்து கொண்டுபோக முயன்ற இராணுவ வாகனத்தைச் சூழ்ந்த கொண்டு பெண்கள் நடத்திய போராட்டம் காரணமாக இராணுவம் அவ் இளைஞர்களை விடுதலை செய்துள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; கடந்த 18.08.96 6 அன்று வறிய குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை சாவகச்சேரியில் வைத்து இராணுவம் சுட்டுக் கொன்றது. பலசரக்குக் கடை ஒன்றில் வேலை செய்யும் அவரது குடும்பத்திற்கு வருமானம் பெற்றுத் தருபவர். அவ் இளைஞரே. இவரது கொலையின் பின்னரே தென்மராட்சிப் பிரதேசங்க

(தொடர்ச்சி 31ம் பக்கம்)



சுவிசில் நடைபெற்ற உர்வலத்திலிருந்து....

## ஆனையிறவில் இருந்து எறிகணை வீச்சு

கடந்த 21.08.96 அன்று மாலை 3.45 மணி முதல் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து கண்டாவளையை நோக்கி எறிகணை வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றபடியால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத்தெரியவருகிறது. எனினும் பெருமளவு சொத்துக்களும் உடைமைகளும் சேதமடைந்துள்ளன.

தமிழ் வீடியோ, ஓடியோ கசட், கொம்பக் டிஸ்க் மற்றும் புடவை வகைகள், மளிகைச் சாமான்களுடன் கடல் உணவுகள், மரக்கறிகள் போன்ற உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
S.K.TRADING
Gasometer Street 31,
8005 Zurich,
Switzerland
Tel: 01-2724336
077-782201
Fax: 01-2732377

# தமிழர் நிலத்தை அபகரித்து திருமலையில் சிங்களக் குடியேற்றம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டம் மட்டக்கழி கிராமத்திலுள்ள 11049 ஹெக்டேர் நிலத்தை சுவீகரித்து இடம்பெயர்ந்த சிங்கள மீனவர்களுக்கான குடியேற்றத் திட்டம் ஒன்றை அமைப்பதற்கு சிறீலங்காவின் மீன்பிடி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்துக் கோவில்களுக்கும், தர்ம நிதிக்கும் தமிழ் மக்கள் சிலருக்கும் சொந்தமான தற்போது மக்கள் இல்லாத தரிசு நிலமாக இருக்கின்றது. முன்பு சிறீலங்காப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகளால் இந்நிலத்தில் குடியிருந்த தமிழ் மக்கள் அனைவரும் வவுனியா, மன்னார், தமிழ்நாடு பகுதிகளுக்கு அகதிகளாகச் சென்று விட்டனர்.

தற்போது இந்த நிலத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கான மீன்பிடிக் கிராமம் ஒன்றை அமைத்தல் என்ற பெயரில் சிங்களக் காடையரைக் கொண்டு வந்து குடியேற்ற சிறீலங்கா அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# யாழ்ப்பாண மக்களுக்கு மாதுரி தீட்ஷித் படங்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் புதிதாக பல இடங்களிலும் தொலைக்காட்சி மூலம் ஒலி, ஒளி நிகழ்ச்சிகளை தமிழ் மக்கள் நலன் கருதி இராணுவத்தினர் காட்டி வருகின்றனராம். பலாலி இராணுவ தளத்தில் இருந்தே இந்த ஒலி, ஒளி பரப்பு சேவை நடாத்தப்படுகின்றது.

மின்சாரம் உள்ள இடங்களில் மட்டுமே சத்தியில் வைத்து இந் நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்றது. இதற்காக ரூபவாஹினி போன்ற சிறீலங்கா தொலைக்காட்சியின் தமிழ்ப் பிரிவில் இருந்து தமிழ் நிகழ்ச்சிகள் தயாரித்துத் தரும்படியும் இராணுவத்தினர் கேட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இவ் வேண்டுகோளில் தமிழ்த் திரைப்படங்கள் அல்லது மாதுரி தீட்ஷித் நடித்த ஹிந்தி திரைப்படங்கள் அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. இந்த ஹிந்திப் படங்களின் கீழ் இக் காலத்தில் அடிக்குறிப்பு (சப் டைட்டில்) செய்யப்பட்டுள்ளதால் யாழ்ப்பாண தமிழ் மக்களைக் காரணம் காட்டி சிங்கள இராணுவத்தினர் தமது கனவுக் கன்னியான மாதுரி தீட்ஷித்தின் படங்களை யாழ் மக்கள் மிகவும் விரும்புவதாகக் கூறி இவ் வேண்டுகோளை அரசுக்கு விடுத்துள்ளனராம். அடுத்த கணம் உயிர் வாழ்வதற்கான எந்தவித நம்பிக்கையையும் வழங்க முடியாத அரசாங்கம், யாழ்ப்பாண மக்களை தம் வசம் வென்றெடுக்க இராணுவத்தின விருப்பத்துக்காக ஹிந்திப் படங்களை அனுப்பத் தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

# கடவுச் சீட்டு இல்லாததால் வைத்திய உதவி மறுப்பு

சிறீலங்காவின் தென்பகுதியில் உள்ள ஆயுர்வேத வைத்திய சாலையொன்றுக்கு தமது மகனை வைத்தியத்துக்காகக் கொண்டு சென்ற பெற்றோர் மகனுக்கு கடவுச்சீட்டு இல்லாத காரணத்தால் வைத்தியம் செய்ய மறுக்கப்பட்டுள்ளது.

ராஜகிரிய பகுதியில் உள்ள வைத்தியசாலை ஒன்றுக்கு காலில் சுகயீனம் காரணமாக தமது மகனை பெற்றோர் கூட்டிச் சென்றனர். அங்கு சென்ற பெற்றோரிடம் மகனுக்குரிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பாஸ்போர்ட் முதலியவற்றை வைத்தியசாலை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். பிரதம வைத்திய அதிகாரி அச்சிறுவனை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு பணித்த பின்பும் மேற்குறிப்பிட்ட ஆவணங்களைக் காட்டுமாறு மருத்துவத் தாதி வற்புறுத்தியுள்ளார்.

அவர் கேட்ட ஆவணங்கள் எதுவும் இல்லாத காரணத்தால் அச் சிறுவனுக்கு அங்கு வைத்திய வசதி அளிக்க முடியாதென அந்த சிங்களத் தாதி கூறியதுடன் அவர்களை வைத்திய சாலையை விட்டு வெளியேறுமாறு கடுமையாக உத்தரவிட்டுள்ளார். இதனால் அப் பெற்றோர் மனமுடைந்து வைத்திய வசதி இன்றி வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர்கள் என்பதற்காக அரச வைத்தியசாலையில் ஒரு சாதாரண மருத்துவதாதியே அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கடவுச்சீட்டு, கேட்டுத் திருப்பி அனுப்பும் நிலை உருவாகியுள்ளது. இனி வரும் காலங்களில் படையினர் செய்யவேண்டிய வேலைகளை சிங்களப் பொது மக்களும் செய்ய முனையும் அளவுக்கு சிறீலங்காவில் இனவாதம் வளர்க்கப்பட்டு வருகின்றது என்பதையே இச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது.

# பிரேமதாசா கொலை வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா 01.05.93 அன்று கொழும்பு ஆமர் வீதியில் வைத்து குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட வழக்குக் கடந்த 21.08.96 அன்று கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது சாட்சியங்கள் வராததால் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் பிரேமதாசாவின் கொலைக்கு உடந்தையாக இருந்ததாக துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த விமலம் விஜேந்திரன் என்ற இளைஞர் மீது குற்றம் சாட்டப் பட்டிருந்தது. தற்போது பிணையில் விடப்பட்டிருக்கும் விஜேந்திரன் சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்தின் அனுசரணையுடன் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

அவரது குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்ததாகச் சொல்லப்படும் பொலிஸ் அத்தியட்சகர் மென்டிசும் மற்றும் சில அரச சாட்சியங்களும் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காததால் வழக்கு செப்டம்பர் மாதம் 19-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# புலிப் போராளிப் புரளியால் புகையிரதம் தாமதமாகியது

(கொழும்பு)

கடந்த 20.08.96 செவ்வாய்க்கிழமை கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து களுத்துறையைச் நோக்கி மாலை 5.45 மணிக்கு புறப்பட்டுச் சென்ற புகையிரதம் இரத்மலானை புகையிரத நிலயத்தில் நிறுத்தப்பட்டபோது அதில் கரும்புலிப் பெண் போராளி ஒருவர் இருப்பதாக கிளம்பிய வதந்தியால் புகையிரத நிலையம் பெரும் அல்லோல கல்லோலப்பட்டது.

புகையிரதத்தில் இருந்த பிரயாணிகள் எல்லாம் புகையிரத மேடையில் குதித்து அவலக் குரல் எழுப்பிக் கொண்டு கொண்டு ஓட ஆரம்பித்தனர். புகையிரத நிலைய அதிபர் இரத்மலானைப் பொலிசுக்குத் தகவல் கொடுக்க அவர்கள் குண்டு வெடிக்க வைக்கும் படைப்பிரிவினர் சகிதமாக அங்கு வந்து மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் பிரயாணிகள் அடையாளம் காட்டிய பெண்ணை தயக்கத்துடன் நெருங்கியபோது அவர் பயந்து நடுங்கியவாறு தனது அடையாள அட்டையை நீட்டியதுடன் சிங்களத்தில் பதில் கூறினார்.

கடைசியில் அப் பெண் தமிழ்ப் பெண்ணின் முகச் சாடையை கொண்ட சிங்கள யுவதியென்றும் சிறிதுகாலமாக மனநிலை சரியில்லாமல் அங்கொடை மனநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் என்றும் தெரியவந்தது. புகையிரதம் 20 நிமிட தாமதத்திற்குப் பின் இரத்மலானை நிலையத்தை விட்டுப் புறப்பட்டது.

# காட்டுப் பன்றி வேட்டையாடியவர் புலியெனக் கைது செய்யப்பட்டார்

நுவரெலியா மாவட்டம் தலவாக்கொல்லையில் தோட்டமொன்றில் உள்ள தொழிலாளி ஒருவர் அருகிலுள்ள காட்டுக்குச் சென்று பன்றிகளை வேட்டையாடி தோட்டத்திலுள்ளவர்களுக்கு விற்பனை செய்து வந்தார்.

இந்த விசயத்தை அறிந்த சிங்களவரான தோட்டக் காவலாளி பன்றி இறைச்சியில் தனக்கும் பங்கு வேண்டும் எனக் கேட்டார். தோட்டத் தொழிலாளியும் பன்றி இறைச்சியில் பங்கு கொடுத்து விட்டு அதற்குரிய பணத்தைக் கேட்டார்.

அதற்கு நீ என்ன பன்றி உனது வீட்டிலா வளர்க்கிறாய் அவை காட்டில் வளரும் பன்றிகள் தானே உனக்கு காசு தர முடியாது என்று காவலாளி சொல்லிவிட ஆத்திரமடைந்த தொழிலாளி அவனை அடிக்கப் போய விட்டார்.

உடனே அந்தக் காவலாளி தலவாக்கொல்லை பொலிஸ் நிலையத்துக்குச் போன் செய்து அந்த தொழிலாளியைப் புலியெனக் காட்டிக் கொடுத்து விட்டான.

வயிற்றுப் பிழைப்புக்காக பன்றியை வேட்டையாடி விற்ற தொழிலாளி இப்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் புலியாக சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்.

# ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் காலமானார்

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற சபாநாயகரும் அமைச்சருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கடந்த 22.08.96 அன்று தனது 77 ஆவது வயதில் காலமானார்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கோட்டே தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். இவர் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் ஒரு வருட காலம் சபாநாயகராகப் பதவி வகித்தார். பின்னர் தகவல் ஒலிபரப்பு ராஜாங்க அமைச்சராகவும் வடமேல்மாகாண ஆளுனராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ORIENT TEXTILIEN & SCHMUCK

KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836

* தரமான தங்கநகைகள் (916/22K உத்தரவாதத்துடன்) தாராள தெரிவில் சிங்கப்பூர்விலையில் 1 பவுண் S $ 158,-

*உயர்ரக பட்டுப்புடவைகள், பட்டுவேட்டி சகலருக்குமான ரெடிமேட் ஆடைகள், *தரமான எவர்சில்வர் வீட்டுப் பாவனை பொருட்கள்,

* அன்பளிப்புப் பொருட்கள், * பரதநாட்டிய உடுப்புக்கள் மற்றும் அலங்கார நகைகள், * உங்கள் பழைய பவுணிற்கு (சிங்கப்பூர் / இலங்கை) உடனடியாகவே புதிய சிங்கப்பூர் நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்!

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

# வன்னியில் அடைமழை அகதிகளுக்கு கஷ்டம்

(வவுனியா)

கடந்த வாரம் முழுவதும் வன்னிப் பிரதேசம் எங்கும் பெரு மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. இதனால் 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையால இடம்பெயர்ந்து வன்னிக் காடுகளில் உள்ள மர நிழல்களின் கீழும், காட்டுக் கிராமங்களிலுள்ள பொதுக் கட்டிடங்களிலும் தங்கியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

படுத்து உறங்குவதற்குக்கூட இடமில்லாமலும், குளிருக்கு போர்த்திக்கொள்ள போதிய துணி இல்லாமலும், விறகுகள் ஈரமாகிப் போனதால் சமைப்பதற்குக்கூட முடியாமலும் அம்மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். காட்டுப் பகுதியில் பெய்த பெரும் மழையைத் தொடர்ந்து மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புத் தொல்லை அதிகரித்திருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வெளியேறிய 16 400 குடும்பங்களையும் சேர்ந்த 64 400 பேருக்கும் கூடுதலானோர் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே தஞ்சமடைந்துள்ளதாக இன்னொரு தகவல் தெரிவிக்கின்றது.

# தடை முகாமில் நோயாளிகள் அவதி

முல்லைத்தீவுத் தோல்வியின் பின்னர தாண்டிக்குளம் தடை முகாமில் உள்ள இராணுவத்தினர் தமது நடைமுறைகளில் மிகவும் கடும்போக்கைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

வன்னிப் பகுதியில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா கொண்டுசெல்லப்படும் நோயாளிகள் இராணுவச் சோதனைகளின்போது சாதாரணமாக அவர்கள் செல்லும் வண்டியிலேயே இருக்க அனுமதிப்பதுண்டு. ஆனால் தற்போது அவர்களும் வண்டியைவிட்டு இறங்கி நடந்துதான் சோதனைச் சாவடியைக் கடக்க வேண்டும் என இராணுவத்தினர் கட்டளையிட்டுள்ளனர்.

இதனால் நடக்க முடியாத நோயாளிகளை அவர்களது உறவினர்களோ அல்லது பொது மக்களோதான் தூக்கிச் சென்று தடை முகாமிற்கு மறு புறத்தில் நிற்கும் வாகனத்தில் ஏற்றிவிடுகின்றனர்.

# கைதானவர்கள் பற்றிய தகவல்கள் இல்லை

தனங்கிளப்பு, மறவன்புலோ போன்ற பகுதிகளில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்ட இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும என்ன நடந்தது என்பது தொடர்ந்தும் மர்மமாகவே இருந்து வருகின்றது.

04.07.96 அன்று இரண்டு இளம் பெண்களும், 30.07.96 அன்று ஐந்து இளைஞர்களும் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர். இதேபோல் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட செல்லத்துரை சிவராஜாவுக்கு (வயது 27) என்ன நடந்ததென்றும் தெரியவரவில்லை. அப் பகுதி இராணுவ முகாம்களில் பல தடவைகள் இதுபற்றி விசாரித்தபோதும் தாம் அவர்களைக் கைது செய்யவில்லை என்ற பதிலே தொடர்ந்து கிடைத்து வருகிறதாம்.

# குண்டு வீச்சால் பெண் காயம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2.08.96 அன்று புக்காரா விமானம் ஒன்று மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுகளை வீசியதால் பல வீடுகள் மோசமான சேதமடைந்துள்ளன.

இவ் விமானக் குண்டுவீச்சின் போது, சிவமணி கந்தசாமி (வயது 53) என்பவர் காலில் காயமடைந்துள்ளார். இத்துடன் பல கால்நடைகளும் கொல்லப்பட்டுள்ளன.

# விசுவமடுவில் குண்டுவீச்சு

23.08.96 அன்று காலை ஏழு மணியளவில் விசுவமடு கிராமத்துக்கு மேல் தோன்றிய புக்காரா ரக குண்டுவீச்சு விமானம் குடியிருப்புப் பகுதிகள் மீது குண்டுகளை வீசியுள்ளது.

மக்கள் குடியிருப்புப் பகுதி மீதும், வயல் வெளிகள் மீதும் பல குண்டுகளையும் ராக்கெட்டுக்களையும் இவ் விமானம் ஏவியுள்ளது. எனினும் அதிஷ்டவசமாக யாரும் மோசமான காயங்களுக்கு ஆளாகவில்லை எனத் தெரியவருகிறது.

# புகலிடத் திரைப்படங்களை கொஞ்ச நாட்களாகக் காணவில்லையே?

இ. குட்டி ஐயா - 75007 பாரிஸ்.

♣ **எனது உறவினர்கள் இங்கு குடும்பமாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு இங்கு அரசு எல்லா உதவிகளையும் வழங்குகிறது. இருந்தும் கனடா போயே தீரவேண்டும் என நிற்கின்றார்கள். அப்படி என்ன தான் அங்கு உள்ளது?**

சிகு:இக்கரைக்கு அக்கரைப் பச்சை.

- க. ஈஸ்வரன், லியோன்.

♣ **தமிழர் பிரச்சனைக்கு ஜே.வி.பி நியாயமான தீர்வை முன் வைக்குமா?**

சிகு:சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் இணைந்து ஒன்றுபட்ட சிறீலங்காவுக்குள் வாழ வேண்டும் என்கிறார்கள். அப்படி வாழ்வதற்கான சாத்தியங்கள் ஏன் இல்லாமற் போனது என்பதை ஆராய மறுக்கிறார்கள். ஜே.வி.பியும் சிங்களத் பெருந் தேசியவாதத்தின் இன்னொரு வடிவம்தான்.

- எஸ். யோசப், பேர்ளின்.

♣ **இளைய ராஜாவை தற்போது காணமுடிவதில்லையே. ரகுமான் அலைக்குள் அமிழ்ந்துபோனாரா?**

சிகு:'கோட்டை இல்லை, கொடியும் இல்லை .எப்பவும் நான் ராஜா' என்று இளையராஜாவே ஒரு முறை பாடியுள்ளார்.

- செல்வன், பாரிஸ் 18.

♣ **அகதிகளைத் திருப்பி அனுப்ப ஐரோப்பிய நாடுகள் முயலுவது நியாயமானதாகப்படுகிறதா?**

சிகு:மனிதாபிமானமான அடிப்படையில் நியாயமில்லைத்தான். ஆனால், அகதிகளாக இங்கு வந்தவர்கள் வராமல் அங்கிருந்தபடியே தம -க்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக இணைந்து போராடியிருந்தால் பிரச்சனை விரைவில் தீரவும் வாய்ப்புண்டு அல்லவா.

- ஞானம், பொந்துவாஸ்.

♣ **வாசிப்புப் பழக்கம் நம்மவர் மத்தியில் குறைந்து வருகிறதே என்ன காரணம்?**

சிகு:பத்து பிராங் வீடியோ கசட்டுடன் மனைவி கோயாலாவை வீட்டில் பார்க்கலாம் என்பதால்.

- ராஜன், சூரிச்.

♣ **இராணுவத்தினர் தமிழ்ப் பெண்களை திருமணம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வருகிறதே உண்மையா?**

சிகு:ஆம், சிறீலங்கா அரசின் இன ஐக்கியத்தை வளர்ப்பதற்கான புதிய வேலைத் திட்டங்களில் இதுவும் ஒன்று.

- திருமதி சிறீதரன், சூரிச்.

♣ **புகலிட நாடுகளில் தமிழர்களின் முன்னேற்றம் பற்றி என்ன கூறுகிறீர்?**

சிகு:ஒருவர் காலை இன்னொருவர் பிடித்து இழுத்துக் கொண்டிருப்பதால் நகராமல் அப்படியேதான் இருக்கின்றனர்.

- வி. பரமேஸ்வரன், பாரிஸ் 13.

♣ **பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த முல்லைத்தீவுத் தோல்விக்குப் பின் என்ன செய்து கொண்டிருக்கின்றார்?**

சிகு:மருமகன் அநுரா பண்டாரநாயக்காவின் பிறப்புப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றார்.

## சித்திரகுப்தனார் பதில்கள்

- தமிழ்நேசன், இத்தாலி.

♣ **சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டு வருட சாதனை என்ன?**

சிகு:பேச்சு வார்த்தை நாடகமாடியது, நவாலி தேவாலயத்தினுள் குண்டு வீசியது, நாகர் கோவிலில் பாடசாலை மேல் குண்டுவீசியது, யாழ் குடா நாட்டு மக்களை சூரியக் கதிர் நடாத்தி விரட்டியது. மிகுதியானோரை திறந்த வெளிக் கைதியாக்கியது. உணவுக்கும், மருந்துக்கும் எரி பொருளுக்கும் தடைவிதித்தது. சத்ஜெய நடாத்தி ஏற்கனவே அகதியானவர்களை ஓட ஓட விரட்டியது. இப்படி நிறையப் பட்டியல் போடலாம். ஒட்டுமொத்தமாக நிரந்தர சமாதானத்துக்காக தமிழ் மக்களில் கணிசமானோரைக் கொன்று குவித்ததே அந்த சமாதானப் புறா பறவையின் சாதனைதானே...

# வவுனியா தொலைபேசி இலக்கத்தில் மாற்றம்

வவுனியாவில் பாலவனையில் இருக்கும் தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் செய்வதற்கு சிறீலங்கா தொலைத்தொடர்பு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

தற்போது பாவனையில் உள்ள இலக்கத்துக்கு முன்பாக '2' என்ற இலக்கத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், தற்போது உள்ள இலக்கத்தில் 'அழைப்பு ஒலி' கிடைக்க ஏற்படும் தாமதம் இந்தப் புதிய மாற்றத்தின் பின் இருக்காது என்றும் தொலைபேசித் திணைக்கள செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.


ASCE இனது புதிய வகுப்புக்கள்

பாடசாலை மாணவர்கட்கான வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பம்

Maths, Chimie, Physique, Anglais, ...

செப்டம்பர் ஞாயிறு 8-ம் திகதி
பிற்பகல் 2 மணி முதல் ஆரம்பம்

பிரெஞ்சு:
07.09.96 சனி காலை 10 மணி
08.09.96 ஞாயிறு மாலை 4.00 மணி - பேச்சு வகுப்பு.
பிரெஞ்சு ஓரளவு தெரிந்தவர்களுக்கு உகந்த வகுப்பு.

ஆங்கிலம்:
08.09.96 ஞாயிறு காலை 10 மணி - பி.ப 1 மணி
07.09.96 சனி பி.ப 1 மணி பேச்சுப் பயிற்சி வகுப்பு

கம்பியூட்டர்:
08.09.96 ஞாயிறு காலை 10 மணி
ஞாயிறு 3.00 மணி
07.09.96 சனிகாலை 10 மணி Access ஆரம்பம்

கேக் அலங்கார வகுப்பு
பிரதி ஞாயிறு தோறும் பி.ப.2 மணிக்கு

சிறுவர்களுக்கு இலவசமாக தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம், கணிதம் கற்பிக்கப்படுகின்றது.

வகுப்புக்கள் நடைபெறும் இடம்
41 Rue Didrot, 750 14 Paris.
மெத்ரோ: Pernety (Direction 13)



DÉFENDEZ VOUS AVEC LE KARATÉ
கராத்தே மூலம் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்



COURS FEMININ
ET MASCULIN
* ENFANTS
* ADULTES
* VETERANS

UN ART MARTIAL
UNE GYMNASTIQUE
UN SPORT DE COMBAT
UNE SELF DEFENSE
UN ART DE VIE

கராத்தே
இது ஒரு: * கலை
* தேகப்பயிற்சி
* சண்டைப்பயிற்சி
* தற்காப்பு
* வாழ்க்கைச் சித்திரம்

வகுப்புக்கள்:
பெண்கள்
ஆண்கள்
சிறுவர்
இளைஞர்
வயோதிபர்

புதிய கராத்தே வகுப்பு
பிரெஞ்சு தமிழ் இரு மொழிகளிலும் ஆரம்பம்
07.09.96 சனிக்கிழமை நேரம் மாலை 4 மணி, 5.30
தொடர்ந்து சனி ஞாயிறு நடைபெறும்.

தொடர்புகட்கு:
Johnston - 60067279

வகுப்பு நடைபெறும் இடம்
Sall Mathe - 6, Rue Hanovre, Paris 75002 - 7ème Etage

# தாண்டிக்குளத்தில் புதிய கெடுபிடி

தாண்டிக்குளம் இராணுவத் தடை முகாமைத் தாண்டி வெளியேறக் காத்திருக்கும் பொதுமக்கள் அத் தடைமுகாமில் புதிய கெடுபிடி நடைமுறைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

தாண்டிக்குளத்தை விட்டு வெளியேறும் பயணிகளை மூன்று பிரிவினராகப் பிரித்து விசாரணைகள், சோதனைகள் போன்றவற்றை படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதில் வவுனியா நகருக்குப் போக வேண்டியவர்கள் முதலாவது பிரிவினராகவும், கொழும்புக்கு செல்லவுள்ளவர்கள் இரண்டாவது பிரிவினராகவும், வர்த்தக நடவடிக்கைகளுக்காகச் செல்பவர்கள் மூன்றாவது பிரிவினராகவும் வகைப்படுத்தப்படுகின்றனர்.

இதன்பின்னர் அவர்களை நான்குபேர் கொண்ட குழுவாக அல்லது தனித்தனியாக புகைப்படங்களும் வீடியோவும் எடுக்கின்றனர். பின்னர் ஒருவருடன் ஒருவர் தொடர்புகொள்ள முடியாதவாறு தனித்தனியாக தடுத்து வைக்கப்பட்டு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புச்செய்து வெளியேற அனுமதிக்கின்றனர்.

இவற்றுக்கிடையில் அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றும் அப் பயணிகளிடம் கொடுத்து நிரப்பி கையெழுத்து வாங்குவதுடன் உடற் பரிசோதனைகளையும் மேற்கொண்ட பின்னரே கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த புதிய கெடுபிடிகளுக்கு முகங்கொடுத்த பின்னரும், கொழும்பு செல்லும் பயணிகளை பல மணி நேரம் தாமதிக்க வைத்து, சொந்த இடம், செல்லும் இடம், கொழும்பில் உள்ளவர்கள் பற்றிய விபரம், உறவினர் தொடர்பான பூரண தகவல்கள் என துருவித் துருவி விசாரித்த பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கின்றனர். இதனால் கொழும்பு செல்லவுள்ள பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளுகின்றனர்.

# மட்டு. பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவருகிறது. இம் மாவட்டத்தில் உள்ள 327 பாடசாலைகளில் 4316 ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டி இருந்த போதிலும் 3330 ஆசிரியர்கள் மட்டுமே தற்போது கடமையாற்றிவருகின்றனர். இந்த ஆசிரியர் பற்றாக்குறை பற்றி அரசுக்குப் பல தடவைகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் அரசாங்கம் அது பற்றி எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இவற்றிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும், கல்வி பயிலும் மாணவர்களும் இராணுவத்தினரின் எறிகணைவீச்சு போன்ற உயிராபத்துக்கு மத்தியிலும், கைதுகள் சித்திரவதைகள் போன்ற கெடுபிடிகளுக்கு மத்தியிலும் பாடசாலைகளுக்கு செல்லவேண்டியுள்ளது.

# மீண்டும் குண்டு வீசும் கிபீர்

பரந்தனில் நிலைகொண்டுள்ள 'சத்ஜய' துருப்பினர் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி முன்னேறாமல் இடைநடுவில் தரித்து நின்றாலும், விமானங்களும் எறிகணைகளும் தாக்குதலை தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

இரவிலோ அல்லது பகலிலோ ராணுவத்தின் எறிகணைகள் எப்போதும் விழ்ந்து வெடிக்கலாம் என்ற அச்சத்தில் மக்கள் இருக்க, ஒருவார இடைவெளியின் பின் விமானக் குண்டு வீச்சு ஆரம்பமாகியுள்ளது.

கடந்த 19.08.96 அன்று இரண்டு கிபீர் விமானங்கள் பகல் 12 மணியளவில் கிளிநொச்சிப் பகுதிக்கு வந்து குண்டு வீசிய பின் சிறிது நேரத்தில் இரண்டு கிபீர்களும் அதே பகுதியில் மக்கள் வாழும் இடங்கள் மீது குண்டுகளை வீசின. இதனால் மக்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. முழுமையான சேத விபரங்கள் இச் செய்தி எழுதப்படும்வரை கிடைக்கப் பெறவில்லை.

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் உதைபந்தாட்டம் ?

உதைபந்தாட்டத்தில் சிறந்த வீரர்களை யாழ் மாவட்டம் முன்னர் கொண்டிருந்தது. தற்போது அங்கு உதைபந்தாட்டம் நலிவடைந்துள்ளது. அதற்கு மீண்டும் உயிர்கொடுக்கப் போவதாக சிறீலங்கா உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் மணிலால் பெர்னாண்டோ அறிவித்துள்ளார். இதன் மூலம் மீண்டும் யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்டம் செழிப்புறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராக உயிரோடு ஒளிந்து விளையாடிக்கொண்டிருக்கும் இவ் வேளையில் உதைபந்தாட்டம் அவசியம்தானா என முன்னாள் யாழ் மாவட்ட உதைபந்தாட்ட வீரர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# முல்லைத்தீவு மீண்டும் சகஜ நிலைக்குத் திரும்புகிறது

முல்லைத்தீவுப் பகுதி மீண்டும் சகஜ நிலைக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளது. தமிழீழப் போக்குவரத்து நிறுவனம் முல்லைத்தீவிலிருந்து மாங்குளத்துக்கும், கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவுக்குமான போக்குவரத்து சேவையினை ஆரம்பித்துள்ளது.

இதன்படி மாங்குளத்திலிருந்து தினமும் காலை புறப்படும் பேருந்து ஒட்டுசுட்டான் - முள்ளியவளை - சிலாவத்தை ஊடாக முல்லைத்தீவைச் சென்றடைகின்றது. மீண்டும் இப் பேருந்து அங்கிருந்து புறப்பட்டு அதே பாதை வழியாக மீண்டும் மாங்குளத்தை வந்தடைகிறது.

இதேபோன்று, புளியம்பொக்கணையில் இருந்து புறப்படும் பேருந்து புதுக்குடியிருப்பு - செம்மலை ஊடாக முல்லைத்தீவைச் சென்றடைகிறது. பின் மீண்டும் அதே பாதைவழியே திரும்புகிறது. சில வாரங்களில் இப் போக்குவரத்து சேவை அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

அதேவேளை, முல்லைத்தீவுக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் மக்கள், தாம் இவ்வாறு மீண்டும் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பக் காரணமாயிருந்த போராளிகளுக்கு நன்றி தெரிவித்துவருகின்றனர். தமது சொந்த இடங்களுக்கு தாம் மீண்டும் திரும்புவோம் என தாம் எண்ணியிருக்கவில்லை எனவும், அதனைச் சாத்தியமாக்கிய போராளிகளுக்கு தாம் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளதாகவும் பலர் மனநிறைந்து தெரிவிக்கின்றனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# முல்லைத்தீவு நகரில் பல்பொருள் அங்காடி

முல்லைத்தீவு பிரதேசம் மீட்கப்பட்டபின் மக்கள் அங்கு திரும்புவதைத் தொடர்ந்து, முல்லைதீவு நகரத்திலுள் புதிய பஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அமைக்கப்படவுள்ள பஸ் நிலையத்துக்கு முன்னால் 'பாண்டியன் பல் பொருள் அங்காடி' ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இங்கு உணவுப் பொருட்கள், பாற்பொருட்கள் ஆடைவகைகள் என்பன மலிவு விலையில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.


Neuss ORIENTAL SHOPPING CENTRE ம்

Dussel dorf INDO - CEYLON HOUSE ம்

இணைந்து வழங்கும்

காலவரையறையற்ற மாபெரும் மலிவு விற்பனை

தரமான பொருட்களை குறைவான விலையில் பெற்றுக்கொள்ள முந்துங்கள்

இதோ மலிவிற்கு இங்கே உதாரணங்கள் சில....

- 100g கடுகு 0.49Pf,100g வெந்தயம் 49Pf, 100g பெ.சீரகம் 0.59Pf, 100g சி.சீரகம் 0.59Pf, 100g மிளகு 99Pf, 200g மல்லி 99Pf 454g புளி (தாய்லாந்து) 99Pf, 500 கிராம் மைசூர் பருப்பு 1.25Dm, 500g கிராம் கடலைப் பருப்பு 1.25Dm, 5Kg பசுமதி அரிசி (No1) 22.50 Dm மட்டும். 500g உடபருப்பு 1.25 Dm இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உடன் றோஸ் பாண், பனிஸ் வகைகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- வீடியோ வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக வெளிவந்த அனைத்து வீடியோ பிரதிகளும் அரைக் கட்டண வாடகைக்கு (1Dm) வழங்கப்படும். அத்துடன் நீங்கள் விரும்பும் படத்தின் வீடியோப் பிரதிகளும் மலிவு விலையில் தரப்படும். சிறைச்சாலை, தேவராகம், எஜமான், மன்னன், குருதிப்புனல் பிரதி 6.90Dm மட்டுமே.
- ORIENTAL PARTY SERVICE அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் நீங்கள் விரும்பிய உணவு (சைவ, அசைவ) வகைகளை தயார் செய்து நிகழ்ச்சி நடைபெறும் மண்டபம்வரை விநியோகம் செய்யப்படும். அத்துடன் உணவு பரிமாறுவதற்கான எவர் சில்வர் பாத்திரங்கள் (சில்வர் கோப்பை, ரம்ளர், ஐஸ்கிறீம் கப்) போன்றவை குறைந்த வாடகையில் தரப்படும்.
- உங்களது எந்தவிதமான கொண்டாட்டங்களுக்கும் தேவையான சமையல் பொருட்கள் அனைத்தையும் எம்மிடம் வாங்கினால் காஸ் அடுப்புக்கள், பெரிய RICE COOKER, சமையல் பாத்திரங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
- எமது விஷேட சேவைகள்: உலகின் எப்பகுதிக்கும் குறைந்தவிலையில் விமான பயணச்சீட்டு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.(அவசர பயணம் மேற்கொள்வோரின் நலன் கருதி விமான நிலையத்திலும் ரிக்கற்றுகள் விநியோகம் செய்யப்படும்)
- பிறந்தநாள், திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றிற்கான அழகான அழைப்பிதழ்கள், மண்டப சோடனைகள், மாலை வகைகள், ஐயர், வீடியோ, புகைப்படபிடிப்பு அனைத்தும் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

ORIENTAL SHOPPING CENTRE
Meerer Hof-L 11.12, 41460 Neuss.
Tel: 02131/278157 - Fax: 02131/278170

INDO - CEYLON HOUSE
Worringer Str-107, 40210 Dussel Dorf.
Tel: 0211/365317 - Fax: 0211/1649382

# இராணுவத் தளபதிக்கு எதிராக படையினர் எழுப்பும் கோஷம்

முல்லைத்தீவு இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதற்கான பொறுப்பினை ஏற்று இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ரோஹான் தலுவத்தையும், முகாம் மீது தாக்குதல் நடந்த வேளையில் உரிய காலகட்டத்தில் மேலதிக படையினரை கடல் மார்க்கமாக கொண்டு சென்று தரை இறக்கத் தவறிய குற்றத்திற்காக கடற்படை தளபதி ரியல் அட்



தலுவத்த

மிரல் மோஹான் சமர சேகரவும் பதவி விலகுவார்களா என்பதே இன்று இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் எழுந்துள்ள கேள்வியாகும்.

இலங்கை இராணுவ வரலாற்றில் படுமோசமான தாக்குதல் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதல் என வர்ணிக்கப்படுகிறது. 1500க்கு அதிகமான படைவீரர்கள் கொல்லப்பட்டார்கள். 500 கோடிக்கும் மேற்பட்ட பெறுமானமுள்ள நவீன ரக ஆயுதங்களை இழந்தார்கள். இந்த இராணுவ முகாம் தாக்குதல் சம்பந்தம் தொடர்பாக பூரண விசாரணை நடாத்துவதற்கான இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது விசாரணைகளும் ஆரம்பமாகிவிட்டன. இந்த விசாரணை ஆரம்பத்தோடு இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் ரோஹான் தலுவத்தையும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோஹான் சமரசேகராவும் பதவிகளை இராஜினாமா செய்யவேண்டும் என , பாதுகாப்பு உயர்மட்டத்திலும், கீழ்மட்டத்திலும் கோரிக்கைகள் எழுந்துள்ளன. பூநகரி, நாகதேவன் துறை இராணுவ, கடற்படை முகாங்கள் நிர்மூலமாக்கப்பட்டதற்கான பொறுப்பினை ஏற்று அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்னா பதவி விலகியதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். பூநகரித் தாக்குதலை விட முல்லைத்தீவுத் தாக்குதல் மிகவும் மோசமானது. முகாமே நிர்மூலம் செய்யப்பட்டுவிட்டது. பூநகரி ராணுவ முகாமைப் பொறுத்தளவில் அங்கு மீண்டும் முகாமை அமைக்கக்கூடியதாக இருந்தது. முல்லைத்தீவைப் பொறுத்தளவில் முகாமைக்

## தளபதிகள் பதவி விலகல் நிலைமையைச் சீர் செய்யுமா?

**கொழும்பிலிருந்து தமிழரசன்**

கைவிடவேண்டிய நிலைமையே ஏற்பட்டது. பல வருடகாலம் இருந்த பாரிய முகாமை மூடிவிட்டதால இராணுவததிறகுப் பெருத்த அவமானத்தையும் இராணுவ ரீதியான பின்னடைவையுமே ஏற்படுத்தியிருக்கிறதென ஞாயப்படுத்தும் இராணுவத்தினர் தளபதி பதவி விலக வேண்டும் எனற கோசத்தை வலுப்படுத்தி வருகிறார்கள். இந்த ராஜினாமா கோஷத்திற்கு இராணுவ உயர் அதிகாரிகளின் ஆசிர்வாதமும் அனுசரணையும் கிடைத்து வருவதாக தெரிய வருகிறது.

யாழ்ப்பாணத்தின் மீது இராணுவ நடவடிக்கை மேறகொள்ள வேண்டாம் என ஆலோசனை வழங்கியவர் அப்போதைய வடபகுதி கமாண்டரும், இப்போதைய இராணுவத் தலைமை (Cheif of staff) அதிகாரியுமான மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவரட்னா. ஏன் யாழ்ப்பபாணத்தின் மீது படையெடுக்கக்கூடாது என்பதற்கு அவர் பின்வரும் காரணங்



ரத்வத்தை

களை முன்வைத்தார்.

1. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற போதிய ஆள்பலம் இல்லாமை.
2. கைப்பற்றிய இடங்களில் முகாம்களை அமைக்க படையினர் பற்றாக்குறை.
3. போக்குவரத்து மற்றும் உணவு வீநியோக நடவடிக்கைகளில் உள்ள சிக்கல்.



செனவிரத்ன

மேஜர் ஜெனரல் செனிவரட்னாவின் ஆலோசனையைக் கேட்ட பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த சீறி எழுந்தார். உடனடியாக வட பகுதி கமாண்டர் பதவியிலிருந்த செனிவரட்னாவை விலக்கி, அப்போதைய இராணுவத் தலைமை அதிகாரியும் தற்போதைய இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் ரோஹான் தலுவத்தைக்கு வடக்கு கமாண்டர் பதவியைக் கொடுத்து யாழ்ப்பாணம் மீதான சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார் ஜெனரல் ரத்வத்தை. ஆனால், இன்று வடக்கில் இராணுவத்தினர் திணறும்பலியாகி வருகிறார்கள். யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதினால் ஆத்திரமடைந்த புலிகள் முல்லைத்தீவு முகாமை துவம்சம் செய்துவிட்டார்கள். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவு முகாம் பறிபோனது இராணுவத் தளபதி ரோஹான் தலுவத்தையினால்தான் என இராணுவத் தரப்பில் பலமாக குற்றம் சுமத்தப்படுகிறது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோஹான் சமரசேகராவைப் பொறுத்தளவில் அவரின் பதவிக்காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 16ம் திகதியுடன் முடிவடைகிறது. இப்போது எழுந்துள்ள உக்கிரமான நிலைமை காரணமாக அவர் ஓய்வுபெறும் காலத்திற்கு முன்பே பதவி விலகக்கூடும் என அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## பரந்தனில் தரித்து நிற்கும் 'சத்ஜய' இராணுவம்

பாதுகாப்பு மட்ட உட்பூசல்களும், கொந்தளிப்பும் இப்படியிருக்க 'சத்ஜய' இராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் பரந்தனிலேயே தரித்து நிற்கிறது. கிளிநொச்சியை நோக்கி நகர படையினர் விரும்புகிறார்கள் இல்லையாம். இதற்குக் காரணம் புலிகளின் மோட்டார், ஷெல் தாக்குதல்களினால் தமது உயிர்களை இழக்க முடியாது என கூறுவதாக கொழும்பில் சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் காதோடு காதாகக் கூறியுள்ளார். இராணுவத்திற்கு தோல்விக்கு மேல் தோல்வி. இத்தோல்வியை ஓரளவு மூடி மறைக்க கிழக்கு மாகாணத்தில்



ஜெரி டீ சில்வா

இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த இராணுவ நடவடிக்கைக்கு முன்னோடியாக புலிகளின் முகாங்கள் இருக்கும் இடங்களிலிருந்து ஒரு மைல் தூரத்திற்கு இடம் பெயர்ந்து செல்லுமாறு துண்டிப்பிரசுரங்கள் மூலம் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள கன்னன்குடா, கொக்கட்டிச் சோலை, இலுப்படிச்சேனை கொத்தியாவளை, முதலைக் குடா, பெரிய கொலனி மடு ஆகிய பிரதேச மக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகப்பட்டுள்ளன. படையினர் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக துண்டுப்பிரசுரங்களிலே குறிப்பிட்டுள்ள இடங்களில் புலிகள் இருந்தால் தொடர்ந்து அங்கு இருப்பார்களா? இராணுவ இரகசியங்களை முன்கூட்டியே அறிவிக்கும் படையினரின் செயல் யானையை விட்டு எலியைப் பிடித்த கதையாகப் போகிறது.

09.07.96 முதல் விற்பனையாகின்றது




இதோ வெளிவந்துவிட்டது. வூட்லன்ஸ்சின் புதிய தொலைபேசி அட்டை WORLD CALL CARD உங்கள் வீடுகளில் இருந்தோ, அல்லது நீங்கள் நிற்கும் இடத்தில் இருந்தோ எவ்வித செலவுமின்றி N° de Vert பாவித்து எதுவித தடங்கலும் இல்லாமல் Mci நிறுவனத்தால் முதன் முதலாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளுக்கு மட்டும் பாவிக்கக்கூடிய விசேட தயாரிப்பு இதுவே.

இலங்கை 15 நிமி. - பாகிஸ்தான் 15 நிமி, - பங்களாதேஷ் 15 நிமி. - இந்தியா 18 நிமி.

குறிப்பு: N° de Vert பாவிப்பதால் ஏற்படும் நன்மை, நீங்கள் முதல் தடவை 5 நிமிடம் பாவித்த பின்பும் மிகுதி 10 நிமிடத்தை பாவிக்கும் போது மேலதிகமாக பணம் செலவிடத் தேவையில்லை.
வர்த்தக ஸ்தாபனங்களுக்கு விசேட விலை உண்டு.

Woodlands Tele communication Centre

70, RUE LOUIS BLANC, 75010 PARIS. Tel: 46 07 76 04 - Fax: 40 07 76 90
மேலதிக விபரங்களுக்கு: 08 24 31 43 – 08 51 90 54

(ADV)

# வேலை வாய்ப்பில் மலையக இளைஞர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

மலையகத்திலுள்ள தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை சேரத்துக் கொள்வதில் மலையக இளைஞர்களும் யுவதிகளும், புறக்கணிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மலையகத்திலுள்ள தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு கடிதங்கள் அனுப்பும்போது அடையாள அட்டை வாக்காளர் பதிவுச் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. மலையகத் தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகள் பலருக்கு அடையாள அட்டை மற்றும் வாக்காளர் பதிவுப் பத்திரம் என்பன உரிய முறையில் கிடையாது என மலையகத் தலைவர்கள் பலர் சுட்டிக் காட்டியும் மத்திய மாகாணக் கல்வி அமைச்சு இதற்கான மாற்று ஏற்பாடுகள் எதையும் செய்யாது இந்த இளைஞர்களையும் யுவதிகளையும் புறக்கணித்து விட்டு கண்டி, நுவரெலியா, மாத்தளை முதலான நகரப் பகுதிகளிலுள்ள வசதி படைத்தவர்களின் பிள்ளைகளுக்கே இந்த ஆசிரியர் நியமனங்களை வழங்க ஏற்பாடுகள் செய்வதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதை விட சமீபத்தில் நுவரெலியா மாவட்டத்தில் நடந்த ஆசிரியர் தேர்வுக்கான நேர்முக பரீட்சாக்கான தேர்வு நடந்த போது தோட்டப் பாடசாலைகளுக்கு தமிழ் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க சிங்கள இளைஞர்களுக்கும் முஸ்லீம் இளைஞர்களுக்கும் மட்டும் அழைப்பு அனுப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இது பற்றி கல்வித் திணைக்களத்திடம் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் கேட்ட போது அவர்கள் தான் அரசாங்கத்தின் நம்பிக்கைக்குரியவர்கள். நீங்கள் புலிகளா இல்லையா என்று எப்படி நம்புவது என்று பதிலளிக்கப்பட்டதாக மலையகத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

# கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எவ் நடாத்தும் வசூல் வேட்டை

மட்டக்களப்பில் கடை முதலாளிகள், லொறிச் சொந்தக்காரர்கள் போன்றோரிடம் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஐச் சேர்ந்த ராஷிக் குழுவினர் மீண்டும் கப்பம் கேட்டு வசூல் வேட்டை நடாத்தத் தொடங்கியுள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தொழில் நிமித்தம் சென்று வரவேண்டியவர்களிடம் இவ்வளவு தொகை பணம் கப்பமாகத் தரவேண்டும் எனக் கட்டாயப்படுத்தி வசூல் வேட்டை நடாத்தி வருகின்றனர்.

இப் பணவசூலுக்கு ரெலோவின் முன்னாள் உறுப்பினரான தயாநிதி என்பவர் பயன்பட்டு வருவதாகவும் தயாநிதியால முடியாதவிடத்து ராஷிக் செல்வதாகவும் தெரிய வருகிறது.

இதே வேளை இவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி இவர்களுடன் புதிதாக சேர்ந்த சில இளம் உறுப்பினர்களை வவுணதீவு இராணுவமுகாமில் உள்ள சோதனைச் சாவடியில் காட்டிக் கொடுப்பதற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

ராஷிக் குழுவினர் ஈ.பி.ஆர். எல்.எவ்.-இன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து பின் சுட்டுக் கொல்லப்பட்ட சாம். தம்பிமுத்துவின் வீட்டில் தமது முகாமை அமைத்து கப்பம் வசூலித்து வருகின்றனர் எனவும் தெரியவருகின்றது.


# பிறைட்டன் வீடியோவின் இவ்வார மாபெரும் வெளியீடு

நவரசநாயகன் கார்த்திக், கனவுக்கன்னி நக்மா, கவுண்டமணி, செந்தில், மணிவண்ணன், கவிதா, திலகன், உதயபிரகாஷ், ஜெமினி கணேசன் மற்றும் பலரின் நடிப்பில்

'உள்ளத்தை அள்ளித் தா' சூப்பர் ஹிட் படத்தை இயக்கிய C.சுந்தரின் கைவண்ணத்தில் இன்னிசை இளவரசன் சிற்பியின் இசையில்

## மேட்டுக்குடி



01.09.96
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல்
2.30 மணி
THETER CAMERA
MALLINCKRODT STR - 279,
44147 DORTMUND

தொடர்புகளுக்கு:
BRIGHTAN VIDEO & ASIA SHOP JEWELLERY & TEXTILES
OESTERMARSCH 37, 44145 DOUTMUND
Tel: 0231 819431, 838703 Fax: 0231-811858

20.Kg Tilda Brocken பசுமதி அரிசி 24.90 Dm மட்டுமே

இத் திரைப்படத்துடன் 'சிவசக்தி' டிரெயிலர் காண்பிக்கப்படும்

ADV


# அடையாள அட்டை இருந்தும் மலையக இளைஞர்கள் கைது

மலையக இளைஞர்கள் இருவர் சிறிலங்கா ஆட்பதிவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான அடையாள அட்டைகளை வைத்திருந்த போதிலும் தமிழர்கள் என்ற காரணத்திற்காக கைது செய்யப்பட்ட சம்பவம் அழுத்கமையில் நடந்துள்ளது.

மத்துகமை, மிரிஸ்வத்தை தோட்டத்தைச் சேர்ந்த எம். சபாபதி என்ற இளைஞனும், ஞானப்பிரகாசம் என்ற இளைஞனும் அழுத்கமை நகருக்குச் சென்று அங்குள்ள தனியார் தொலைபேசி நிலையத்தில் கொழும்புக்கு தொலைபேசி எடுத்து தமிழில் பேசியுள்ளார்கள். அவர்கள் தமிழ் பேசியதைக் கண்டு சந்தேகப்பட்ட தொலைபேசி நிலைய உரிமையாளர் பொலிசாருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

உடனடியாக அங்கே வந்த பொலிசாரிடம் அவர்கள் தங்களது அடையாள அட்டையைக் காட்டி தாங்கள் மலையகத்தை சேர்ந்த இளைஞர்கள் என்று கூறியுள்ளார்கள்.

அடையாள அட்டை இருந்தாலும் தமிழர்களை நம்பமுடியாது நீங்கள் புலிகள் தான் என்று கூறி அவர்களை கைது செய்து கொண்டு சென்ற பொலிசார் அவர்களை களுத்துறை நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

அந்த இளைஞர்கள் தங்களின் உண்மை நிலையை சொல்லி நீதிபதியிடம் அழுத போதும், அவர் பொலிசாருடைய வாக்குமூலத்தை கேட்டுக்கொண்டு அந்த இளைஞர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# உல்லாசப் பயணிகள் வருகை வீழ்ச்சி

(கொழும்பு)

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைக்குப் பின் சிறிலங்கா அரசாங்கம் வெளிநாடுகளில், யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்டு விட்டது பயங்கரவாதம் ஒடுக்கப்பட்டு விட்டது என்று பிரச்சாரத்தை முடுக்கி விட்ட போதிலும் உல்லாசப் பயணிகளின் சிறிலங்கா வருகை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 31 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில் ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 648 உல்லாசப் பயணிகள் மாத்திரமே சிறிலங்காவுக்கு வருகைதந்திருந்தனர். கடந்த வருடம் 2 இலட்சத்து 9 ஆயிரத்து 496 பேர் வந்திருந்தனர் என புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இதேவேளை, உல்லாசப் பிரயாணத்துறையை வளர்ச்சியடைய வைப்பதற்காகவும் அதற்கான பிரச்சாரத்துக்காகவும் சுமார் 4 மில்லியன் ரூபாக்களை சிறிலங்கா அரசாங்கம் ஒதுக்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.


## அர்ச்சனா கலையரங்கம்

திருமண மண்டபம்

SELVAM'S S.A.R.L

① M° → GARE DE L'EST
② M° → MARX DORMOY

மணவறை, குருக்கள், மாலை, வீடியோவுடன் - சுத்தம், சுவையுடன் உணவு வகைகள் சிற்றுண்டிகள் யாவையும் நீங்கள் விரும்பிய இடத்தில் பெற - மிகவும் மலிவான சேவை 'அர்ச்சனா'

TEL: 02459596

பாரிசில் அரச அங்கீகாரம் பெற்ற திருமண மண்டபம்

## TECHNICIEN LAVEUR AUTO (CAR WASH)
## INTERIER / EXTERIEUR

வாகனங்கள் கழுவுதல்
அஸ்பிரேற்றர்
சீற் கழுவுதல்(உள்பகுதியாகவும்)
பொலிஷ் வேலைகள் (வெளிப் பகுதியாகவும்)
மோட்டார் கழுவுதல்
ஒயில் மாற்றுதல்
வாகனங்கள் பழுது பார்த்தல்
வாகனம் வாங்குதல்
வாகனம் விற்பனை செய்தல்
இவை தவிர வாகன சம்பந்தமான சகல தேவைகட்கும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

46, RUE DE SIMPLON, 75018 PARIS
TEL: 53 41 07 785 / FAX: 53 41 07 86

முக்கியகுறிப்பு: மேற்குறிப்பிட்ட வேலைகள் யாவும் பல வருட அனுபவம் உள்ளவர்களால் செய்து தரப்படும்.

ADV

# குவைத்தில் தொடர்ந்து பணிப் பெண்கள் கொலை

குவைத்தில் வீட்டு வேலைக்காக சிறீலங்காவில் இருந்து செல்லும் பணிப் பெண்கள் பலர் மர்மமான முறையில் கொல்லப்பட்டு வருகின்றனர். இவர்களின் சடலங்கள் குவைத் வைத்திய சாலைகளின் சவக் கிடங்குகளில் கிடப்பதாக தமக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளதாக தென் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம் அக்ரம் மாகாணசபைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் வீட்டுப் பணிப் பெண்களாக வேலைவாய்ப்புக் கிடைத்து குவைத் நாட்டுக்குச் சென்ற திக்குவல்லை யோனகபுரத்தைச் சேர்ந்த நியாஸா என்ற ஏழைப் பெண் ஒருவர் குவைத் நாட்டு பிரபு ஒருவரின் கொடூர சித்திரவதைக்கு உள்ளாகி படுகொலை செய்யப் பட்டுள்ளார். இந்தக் கொலை குறித்து அவரை அங்கு அனுப்பி வைத்த ஏஜென்டும் குவைத் தூதர் காரியாலயமும் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றன. அவரின் உடலை சிறீலங்காவுக்கு கொண்டு வருவதற்கும் குவைத் தூதுவர் காரியாலயம் தொடர்ந்து முட்டுக் கட்டையாக இருந்து வருகின்றது எனவும் தெரிவித்தார்.

மேலும் குவைத்தில் இவரைப் போல் வீட்டுப் பணிப் பெண்களாகச் சென்றவர்களில் 11 இளம் பெண்கள் மர்மமாக இறந்துள்ளதுடன் அவர்களின் சடலங்களும் அங்குள்ள வைத்தியசாலை சவக்கிடங்குகளில் வைக்கப் பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்கள் தமிழர்களா, முஸ்லீம்களா, சிங்களவர்களா என்ற விபரம் எதுவும் கிடைக்கவில்லை.

## அண்மையில் சிறீலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற மோதல்களில் வீர மரணம் அடைந்த மாவீரர் சிலரின் விபரங்கள் வருமாறு:

மணியம்/ஜிம்போ (பரமானந்தன் லோகேஸ்வரன், சண்டிலிப்பாய் இவர் மணலாற்றில் நேரடி மோதலில்)

கப்டன் பாஸ்கரன் (கணபதிப்பிள்ளை சந்திரராசன், மட்டக்களப்பு 23.08.96 மணலாற்றில் நடந்த மோதலில்)

கப்டன் குட்டாளன் (கந்தையா கலைச் செல்வன், ஜோ மன்னார், 16.08.96 சிறீலங்கா இராணுவத்திடம் பிடிபடக் கூடாது என்பதற்கிணங்க மன்னாரில் சயனைட் உட்கொண்டு வீர மரணம்)

கவிக்குயிலன் (பேதுரு சிமியோன், உடையன்குளம் கோணாவில், கிளிநொச்சி, சூரியக் கதிர் நடவடிக்கையில் 19ஆம் திகதி)

சிவன் (பூபாலசிங்கம் சிவகுமார், ஏழாலை முல்லைத்தீவு இராணுவ நடவடிக்கையில் காயமடைந்து இம்மாதம் 20 ஆம் திகதி வீரமரணமடைந்தார்)

இளமுருகன் (சரவணமுத்து சிவகுமார், சுதுமலை மானிப்பாய் நீண்டகால சுகயீனம் இம்மாதம் 20 ஆம் திகதி)

கலைச் செல்வன் (சிங்கராஜா நிருபன், தையிட்டி காங்கேசன்துறை, த.முகவரி திருவையாறு. கிளிநொச்சி நீண்ட நாள் சுகயீனம் 22.08.96 இல்)

லெப் தாமரைச் செல்வி (வேலு பரிமளா, முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான் 19.08.96 முல்லைச் சமரில்)

*கடந்த 20 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் எட்டுப் போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளார்கள்.*

லெப்.கமல்ராஜ் (ஞானமூர்த்தி சந்திரசேகர், மட்டக்களப்பு)

2ம் லெப்.குணவேந்தன் (யோகராசா சுதாகரன் மட்டக்களப்பு)

2ம் லெப்.சந்திரகுமார் (ரட்ணசிங்கம் சசிகரன், மட்டக்களப்பு)

இசைராஜ் (வேலானந்தம் சிவசோதி, அம்பாறை)

கௌதாகரன் (கோவிந்தசாமி கங்காதரன், மட்டக்களப்பு)

பாக்கியராஜ் (பெரியதம்பி முகுந்தன், மட்டக்களப்பு)

விசுவநாதன் (தாமோதரம் கெங்காதரன், மட்டக்களப்பு)

குணசீலன் (குஞ்சன் சந்திரகுமார் – பொலிகண்டி, வல்வெட்டித்துறை, 25.08.96 அன்று ஏற்பட்ட வெடிவிபத்தில்)

# மத்திய வங்கி ஊழியர்கள் அரசை எதிர்த்துப் போராட்டம்

(கொழும்பு)

கொழும்பில் இவ் வருட ஆரம்பத்தில் நடந்த பாரிய குண்டு வெடிப்பினால் மத்திய வங்கிக் கட்டடம் சேதமடைந்த பின் அதன் செயற்பாடுகள் கோட்டே ஜெயவர்த்தனபுரவிலுள்ள அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது.

தற்போது மத்திய வங்கி அலுவலகத்தை கொழும்புக் கோட்டையிலுள்ள உலக வர்த்தக நிலையக் கட்டடத்தின் இரட்டைக் கோபுர மாடிக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

கொழும்புக் கோட்டை ஆபத்து மிகுந்த பகுதியாக இருப்பதால் அதுவும் உலக வர்த்தக நிறுவனத்திற்கு அதிகமானோர் வந்து போகும் நிலை உள்ளதால் தமக்கு பாதுகாப்பில்லை என்று தெரிவித்து மத்திய வங்கி ஊழியர்கள் அடையாள ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தி வருகின்றார்கள்.

மதிய இடை வேளை நேரத்தில் நடாத்தப்படும் இந்த ஆர்ப்பாட்டம் அரசாங்கத்தின் முடிவு மாற்றப்படும் வரை தொடரும் என மத்திய வங்கி ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்திய வங்கியின் மூன்று பிரதான தொழிற் சங்கங்களான மத்திய வங்கி நிறைவேற்று அதிகாரிகள் சங்கம், மத்திய வங்கி உத்தியோகத்தர்கள் சங்கம், மத்திய வங்கி ஊழியர்கள் சங்கம் ஆகிய மூன்றும் இணைந்து இந்த அடையாள ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளன. தங்களது கோரிக்கைகளை விளக்கி தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டங்களையும் நடத்த இத் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.


வானலைகளில் வாரம் தோறும்

ஞாயிறு பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை தமிழமுதம் வானொலி

BEUR FM 106.7

| | |
|---|---|
| Marseille | FM 92.6 |
| Grenoble | FM 97.8 |
| Nimes - Alès | FM 104.6 |
| Avignon Pont St Esprit | FM 88.4 |
| Toulouse | FM 96.6 |
| St Etienne | FM 94.3 |
| Rouen | FM 98.7 |

விளம்பரத்தொடர்புகள் - விபரங்கள்

எஸ்.கே. ராஜென்

EURO-TAMIL ART CENTRE

1, ALLEE MOLIERE, 95140 GARGES LES GONESSE

TEL: 39 93 30 96 FAX: 39 86 55 08

(ADV)


# பிள்ளைகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு படையினர் கோரிக்கை

சிறீலங்கா அரச படையினருக்கு எதிராகவும் தமிழ் மக்களின் அமைதிக்கு இடையூறாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்து அழிந்து கொண்டிருக்கும் உங்கள் பிள்ளைகளையும் சகோதரர்களையும் எம்மிடம் சரணடைய வையுங்கள் என்று அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையினர் அப்பகுதித் தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆலையடிவேம்பு, நாவற்காடு, சின்னக்குளம், போன்ற இடங்களிலும் அதனைச் சூழ உள்ள இடங்களிலும் வாழும் தமிழ் மக்களை கிராம அதிகாரிகளின் ஊடாக தமது முகாமுக்கு அழைத்த அதிரடிப்படையினர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

எமது பிரதேசத்தின் உயிர்களும், சொத்துக்களும் நாளாந்தம் அழிந்து சுடுகாடாக மாறி வருவதை நாம் எல்லோரும் அறிகிறோம். அழிவுகளும் அமைதியின்மையுமே எஞ்சியுள்ளன. எனவே அனாவசியமாக நாம் அழிந்து கொண்டிருப்பதை தடுக்க உங்களது பிள்ளைகள் சகோதரங்களை எம்மிடம் சரணடைய வையுங்கள். பூரண அமைதி தோன்ற எமக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் எனவும் அங்கு படையினரால் கேட்கப் பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கிழக்கில் பல இடங்களிலும் புலிகள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி படையினருக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாகவே அதிரடிப்படையினர் பொது மக்களிடம் உருக்கமான இவ் வேண்டுகோளை வெளியிட்டுள்ளனர்.


# தமிழ் அருவி இசைவிழா

**31.08.1996 சனிக்கிழமை. பி.ப. 2 மணி. எசன் மாநகரில்**

HENTRI DUNANT STR-65, ESSEN. (RUTTENSCHEID). கடந்த ஆண்டு தமிழ் அருவி விழா நடைபெற்ற அதே மண்டபம்

ஐரோப்பா ரீதியிலான மாபெரும் இசைப்போட்டி நிகழ்ச்சி. யார் அந்த வானம்பாடிகள்?

உங்களை மகிழ்விக்கக் கடும் போட்டியில் குதிக்கும் இசைக் குழுக்கள்:

1.நோர்வே * யாழிசை*, 2. டென்மார்க் * யுலான்ட் *, 3. ஜேர்மனி * யங்ஸ்ரார்ஸ் * (முன்சன்கிளட்பாக்), 4.* மோர்ஸ் சுப்பர் பிறின்ஸ்*, 5.* முத்துக்கள் மூன்று * (பிறீமன்), 6.* பேர்லின் சகானா *

இசைக் குழுக்களின் மாற்றங்களுக்கிடையே முத்தான பல கலை நிகழ்ச்சிகள் லூஸ்மாஸ்டருடன் – ஆபூர்வ சகோதரர்கள்... வாபேர்க் அப்பர் குழுவினர், தமிழகக் கலைஞர்கள் – வழங்கும் நகைச்சுவை கதம்ப நிகழ்ச்சிகள். வர்ண ஒளிமழையில் அற்புத நடனமணிகள். இன்னும் பல சுவையான அம்சங்கள்!

*நுழைவிற்கான அன்பளிப்பு:* தனிநபர் – 15 டி.எம், குடும்பம் 25 டி.எம் 6–10 வயது 6டி.எம், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இலவசம்

அனைவரையும் திரண்டு வந்து இசை மழையில் நனைந்து நமது இளங்கலைஞர்களை ஊக்குவிக்குமாறு அழைக்கின்றோம்

**தாயகத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வைத்திய நிவாரண நிதிக்கான உதவியை வழமை போல் மேடையில் வைத்தே தமிழ் அருவி வழங்கும்.**

(ADV)